# ஆண்டு மலர்

## 2023-2024



## குந்தவை நாச்சியார்

### அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)

தஞ்சாவூர்-613 007

# குந்தவை நாச்சியார்
# அரசினர் மகளிர் கலைக்கல்லூரி
# (தன்னாட்சி)

தஞ்சாவூர் 613 007

# ஆண்டு மலர்
# 2023-2024

| | |
|---|---|
| நூல் | **குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்-613 007**<br>ஆண்டு மலர் 2023 - 2024<br>(தனிச்சுற்றுக்கு மட்டும்) |
| பக்கங்கள் | 80 |
| வெளியீடு | குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்-613 007 |
| மொழி | தமிழ் |
| மலர்க்குழு | தலைவர் : **முனைவர் அ. ஜான் பீட்டர்**<br>கல்லூரி முதல்வர்<br>மலராசிரியர் : **முனைவர் பு. இந்திராகாந்தி**<br>இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை<br>உறுப்பினர்கள் : **முனைவர் அ. கார்குழலி**<br>இணைப் பேராசிரியர் மற்றும்<br>வரலாற்றுத் துறைத் தலைவர்<br>**முனைவர் கோ. பூங்கொடி**<br>உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை<br>**முனைவர் மு. ராதா**<br>உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை<br>**முனைவர் க. தனலெட்சுமி**<br>உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை |
| புகைப்படங்கள் | **திரு த. துரை** |
| நூல் வடிவமைப்பு மற்றும் அச்சாக்கம் | **கிரியா கிராபிக்ஸ்,**<br>தஞ்சாவூர்-613 005.<br>கைபேசி : 94434 76740 |





# குந்தவை – பெயர்தந்த பெருமாட்டி

பிற்காலச் சோழப் பேரரசின் புகழ்பெற்ற பெண் ஆளுமையாய் விளங்கியவர் குந்தவை நாச்சியார் ஆவார்.

கி.பி 973-கி.பி 985 வரை சோழப் பேரரசை ஆட்சி செய்த பேரரசன் சுந்தர சோழன்-வானவன் மாதேவிக்குப் பிறந்தவர்கள் ஆதித்த சோழன், குந்தவை நாச்சியார், அருள்மொழிவர்மன் எனும் இராசராச சோழன் ஆகிய மூவர் ஆவர்.

குந்தவை நாச்சியாரை **'உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருத்தமக்கையார் வல்லவரையர் வந்தியத் தேவர் மகாதேவியார் ஆழ்வார் பராந்தகன் குந்தவை ஆழ்வார்'** எனவும் **'உடையார் பொன் மாளிகையில் துஞ்சிய தேவர் திருமகளார் ஸ்ரீ பராந்தகன் குந்தவை பிராட்டியார்'** எனவும் கல்வெட்டுகள் குறிக்கின்றன. இவர் கி.பி.945இல் பிறந்தார்.

ஆதித்த சோழன் மற்றும் பெற்றோர்களின் அடுத்தடுத்த மறைவுக்குப் பிறகு, தனது தம்பி இராசராச சோழனைப் பெற்றோர் நிலையிலும் ஒரு அரசியல்குரு நிலையிலும் இருந்து அரசியல் ஆலோசனைகளை வழங்கியவர் குந்தவை நாச்சியார் என்று வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

அதுமட்டுமன்றி ஒரு சிறந்த கொடையாளராக இருந்து தஞ்சை பெரிய கோயிலுக்கு 7,282 கழஞ்சு பொன்னும் 3143 முத்துக்கள் 4 பவளங்கள் 4 ராஜவர்த்தம், 7767 வைரக் கற்கள் 101 மாணிக்க கற்கள் இவற்றுடன் கூடிய நகைகள் 1453 கழஞ்சு பொன்னும் வழங்கியுள்ளார்.

இதனை **'நாம் கொடுத்தனவும் அக்கன் குந்தவை கொடுத்தனவும்'** என்று தஞ்சை பெரிய கோவில் கல்வெட்டில் பதிவு செய்து இப்பெருமையை உலகுக்கு அறிவிக்கின்றார் இராசராச சோழன். தஞ்சையில் தனது தந்தையின் பெயரில் சுந்தர சோழன் ஆதுர சாலை என்ற மருத்துவமனையைக் குந்தவை நாச்சியார் நடத்தி வந்தார்.

சோழர்குல அரச மகளிர்க்குக் கலை, இசை, கல்வி இவற்றைப் போதிக்கும் நற்பணியை ஏற்றிருந்தவர் குந்தவை. பேரரசன் இராசராச சோழனின் மகனும் தனது வலிமைமிகு கடற்படையைக் கொண்டு தென்கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றை வென்று உலகளாவிய பேரரசை நிறுவியவருமாகிய இராசேந்திர சோழனை இளவயது முதல் தனது பழையாறை அரண்மனையில் அரசகுருவாக இருந்து வளர்த்தவரும் குந்தவை நாச்சியாரே ஆவார்.

சிவன் கோவில், பெருமாள் கோவில், சமண கோவில்கள் பலவற்றை நிறுவி அவற்றிற்கு நிவந்தங்களை இவர் அளித்துச் சமய நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்திருக்கிறார்.

இவ்வாறு அறப்பணிகளையும் அரசுப்பணிகளையும் ஆற்றிவந்த இவரைக் கல்கி தாம் எழுதிய **'பொன்னியின் செல்வன்'** என்ற புதினத்தின் வழி தமிழுலகம் நன்கறியச் செய்தார்.

1984ஆம் ஆண்டு இராசராச சோழனின் 1000ஆவது சதய விழாவின்போது இக்கல்லூரிக்கு அவரது பெயர் சூட்டப்பட்டது.






முனைவர் **அ.ஜான் பீட்டர்**
கல்லூரி முதல்வர்

**ஊழி வாழி!... பொருநை மணலினும் ஆங்கண்**
**பல்லூர் சுற்றிய கழனி**
**எல்லாம் விளையும் நெல்லினும் பலவே**

(புறம்: 387)



கல்லூரி அலுவலகம்



தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகம்



மலர்க் குழு




தமிழ்த் துறை




ஆங்கிலத் துறை




வரலாற்றுத் துறை




பொருளியல் துறை




வணிகவியல் துறை




வணிக நிர்வாகவியல் துறை




கணிதத் துறை




இயற்பியல் துறை



வேதியியல் துறை




தாவரவியல் துறை




விலங்கியல் துறை




கணினி அறிவியல் துறை




புவியியல் துறை




புள்ளியியல் துறை



உடற்கல்வி / நூலகம்

# படமும் செய்தியும்





கல்லூரியின் வளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட முன்னாள் மாணவியர் சங்கத்தினர்.
ரூ.2.15 லட்சம் செலவில் Waste to Wealth (W2W) என்ற திட்டத்தில் 180
மரத்தளவாடங்களைப் புதுப்பித்து, யாழ் கலையரங்கையும் புனரமைத்தனர்.






நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கல்லூரியில் 22.03.2024 அன்று நடைபெற்ற வாக்காளர்
விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் பார்வையிட்டனர்.





கல்லூரி குடியரசுநாள் விழாவில் மாணவியர் அணிவகுப்பு. குடியரசுநாள் விழா அன்று உயிர்
அளவையியல் வருகைப்பதிவு (Biometric Attendance) கல்லூரியில் அறிமுகப்படுத்தப்பட்டது.



# ஆசிரியர் உரை

வளமும், அழகும் கொண்ட தஞ்சை மாநகரில் பெண்களின் உயர்விற்குச் சிறந்த கல்வியையும், பண்புசார் உயர்ந்த விழுமியங்களையும் அளித்து நிமிர்ந்து நிற்கும் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியின் 58ஆவது மலரை (2023-2024) வழங்குவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

2023-2024ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற கல்லூரியின் அனைத்துப் பெருமித நிகழ்வுகளையும் மலரில் மாலையெனக் கோர்த்து அளித் திருக்கிறோம். கல்லூரியின் கட்டமைப்பு, மாணவிகளின் கல்விசார் சாதனைகள், கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகச் செயல்பாடுகள், வளாகத்தில் நடைபெற்ற கருத்தரங்கங்கள், பயிற்சிப் பட்டறைகள், நினைவு தினங்கள், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், ஒவ்வொரு துறைகளிலும் நடைபெற்ற மன்றக் கூட்டங்கள், சேவை மன்றங்களின் பங்களிப்புகள், ஆசிரியர்கள் வெளியிட்டுள்ள நூல்கள், பெற்ற விருதுகள், விளையாட்டுத் துறையில் மாணவிகளின் சாதனைகள், பல்கலைக்கழகத் தரவரிசை பெற்ற மாணவிகளின் தகுதியிடங்கள், இம்மலருக்கு மாணவிகள் அளித்துள்ள சில படைப்புகள் என அனைத்தையும் இம்மலரில் வெளியிட்டு மனமகிழ்வு கொள்கிறோம்.

முனைவர் **பு.இந்திராகாந்தி**
**மலர் ஆசிரியர்**

# கல்லூரி ஆண்டறிக்கை (2023-2024)

பூக்களோடு செடியாட வயல்வெளியில் பயிர்களோடு நெல்மணிகளாடும் வளம் நிறைந்த தஞ்சையில் அமைந்த குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, பெண்பிள்ளைகள் கற்றுப் பயன்பெற்று அதிகாரம் மிக்கவர்களாகவும், பொருளாதார விடுதலையோடு திறன்மிக்கவர்களாகவும் உருவாக வேண்டும் என்கிற நோக்கில் 1966இல் தொடங்கப்பட்ட இக்கல்லூரியில் இளநிலையில் தற்போது 3559 மாணவிகளும், முதுநிலையில் 564 மாணவிகளுமாக 4123 மாணவிகள் கல்வி கற்று வருகின்றனர். சிறப்புமிகு இக்கல்லூரியில் 19.06.2023 அன்று முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும் முனைவர் அ.ஜான் பீட்டர் ஆகிய நான், மாணவிகளின் உயர்விற்கு ஆக்கம் சேர்க்கும் இக்கல்லூரியின் 2023-2024ஆம் செயல்பாடுகளை ஆண்டறிக்கையாகச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.



## பயிற்றுவிக்கப்படும் பாடப்பிரிவுகள்

எம் கல்லூரியில் முதல் சுழற்சியில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, பொருளியல், வணிகவியல், வணிக நிர்வாகவியல், கணிதம், கணினி அறிவியல், வேதியியல், இயற்பியல், விலங்கியல், தாவரவியல், புவியியல், புள்ளியியல் ஆகிய 14 பாடப் பிரிவுகளில் இளநிலை பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இரண்டாம் சுழற்சியில் வணிகவியல், கணினி அறிவியல், கணிதம், இயற்பியல் ஆகிய பாடப்பிரிவுகளில் இளநிலை பட்டப்படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. வணிக நிர்வாகவியல் நீங்கலாக அனைத்துப் பாடப்பிரிவுகளிலும் முதுநிலைப் பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. கூடுதல் சிறப்பாக 9 துறைகள் உயராய்வுத் துறைகளாகச் செயல்படுகின்றன. உடற்கல்வித் துறை அனைத்துத் துறை மாணவிகளுக்கும் உடற்கல்வியைச் சிறப்பாகப் பயிற்றுவிக்கிறது.

தமிழ், ஆங்கில மொழிகளைப் பயிற்று மொழியாகக் கொண்டு கூடுதல் பிரிவுகள், இரண்டாம் சுழற்சி வகுப்புகள் என 27 இளநிலை வகுப்புகளுக்கு கல்லூரியில் மாணவியர் சேர்க்கப் பெறுகின்றனர்.

## பணிபுரிவோர் விவரம்

இக்கல்லூரியில் 79 நிரந்தர ஆசிரியர்களும், 14 அண்ணாமலைப் பல்கலைக்கழக மிகை ஆசிரியர்களும், 15 ஆசிரியரல்லாப் பணியாளர்களும், 14 பெற்றோர் ஆசிரியர் கழகப் பணியாளர்களும் பணிபுரிகின்றனர். அத்துடன் சுழற்சி ஒன்றில் 70 கௌரவ விரிவுரையாளர்களும் சுழற்சி இரண்டில் 28 கௌரவ விரிவுரையாளர்களும் பணிபுரிகின்றனர். தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் 9 பணியாளர்களும் கணினி கல்வியறிவுத் திட்டத்தில் (CLP) 5 கணிப்பொறி பயிற்றுனர்களும் பணிபுரிகின்றனர். இந்த ஆண்டு 33 ஆசிரியர்கள் இணைப் பேராசிரியர்களாகப் பணி மேம்பாடு பெற்றுள்ளனர்.

இந்த ஆண்டு நம் கல்லூரியில் கணிதத் துறைப் பேராசிரியர் முனைவர் வெ. வினோபா அவர்களும், விலங்கியல் துறைப் பேராசிரியர் முனைவர் வெ.சுகுமாரன் அவர்களும் 31.05.2024 அன்று பணி ஓய்வு பெற்றனர்.

## பணி ஓய்வு பெற்ற பேராசிரியர்கள்



முனைவர் வெ. வினோபா



முனைவர் வெ. சுகுமாரன்

# தேர்ச்சி விபரம் 2022-2023

| வ. எண் | துறை | இளங்கலை/இளநிலை | முதுகலை/முதுநிலை |
|---|---|---|---|
| 1 | தமிழ் | 97.81% | 100% |
| 2 | ஆங்கிலம் | 96% | 75% |
| 3 | வரலாறு | 99.5% | 100% |
| 4 | பொருளியல் | 98% | 99% |
| 5 | வணிகவியல் | 98% | 100% |
| 6 | வணிக நிர்வாகவியல் | 98% | 100% |
| 7 | கணிதம் | 100% | 100% |
| 8 | கணினி | 100% | 100% |
| 9 | இயற்பியல் | 94% | 100% |
| 10 | வேதியியல் | 100% | 100% |
| 11 | தாவரவியல் | 100% | 100% |
| 12 | விலங்கியல் | 100% | 100% |
| 13 | புவியியல் | 92% | 95% |
| 14 | புள்ளியியல் | 100% | 100% |

## தரவரிசை - இளங்கலை (UG) பட்டப்படிப்பு

பாரதிதாசன் பல்கலைக்கழக வணிகவியல் புலத்தில் நடத்தப்பட்ட தேர்வுகளில் இளநிலை வணிகவியல் மாணவி எஸ்.காயத்ரி, இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத் தங்கப் பதக்கம் மற்றும் வணிகவியல் மேம்படுநிலைக்குரிய 'சுவாமி தயானந்த சரஸ்வதி பதக்கமும்' பெற்றுள்ளார். புவியியல் துறை மாணவி எஸ்.சௌமியா பல்கலைக்கழகத் தரவரிசையில் முதலிடம் பெற்றுத் தங்கப்பதக்கம் பெற்றுள்ளார். இவர்களுடன் பிற துறை சார்ந்த மாணவிகளும் பல்கலைக்கழகத் தரவரிசையில் பல்வேறு இடங்களைப் பெற்றுள்ளனர்.



எஸ். சௌமியா
புவியியல் துறை
பல்கலைக்கழக தரவரிசை முதலிடம்



எஸ். காயத்திரி
வணிகவியல் துறை
பல்கலைக்கழக தரவரிசை முதலிடம்

| வ. எண் | துறை | மாணவியின் பெயர் | தரவரிசை |
|---|---|---|---|
| 1 | தமிழ் | ஜி. கீர்த்தி | 9th Rank |
| 2 | ஆங்கிலம் | உ. அபிஷா | 24th Rank |
| 3 | வரலாறு | கே. ஸ்ரீஇலக்கியா | 9th Rank |
| 4 | வணிகவியல் | எஸ்.காயத்ரி | 1st Rank |
| 5 | கணிதம் | கே. சண்முகப்பிரியா | 14th Rank |
| 6 | கணினி | எஸ். பவித்ரா | 17th Rank |
| 7 | வேதியியல் | வி. கல்பனா | 5th Rank |
| 8 | தாவரவியல் | ஜி. கனிமொழி | 6th Rank |
| 9 | விலங்கியல் | எம். இலக்கியா | 11th Rank |
| 10 | புவியியல் | எம். சௌமியா | 1st Rank |
| 11 | புள்ளியியல் | கே. புவனேஸ்வரி | 4th Rank |

## தரவரிசை - முதுகலை (PG) பட்டப்படிப்பு

| வ. எண் | துறை | மாணவியின் பெயர் | தரவரிசை |
|---|---|---|---|
| 1 | தமிழ் | ஆர். காவியா | 24th Rank |
| 2 | ஆங்கிலம் | பி. ஐஸ்வர்யா | 24th Rank |
| 3 | வரலாறு | 1. கே. நித்யஸ்ரீ<br>2. ஏ. சுபா | 13th Rank<br>15th Rank |
| 4 | வணிகவியல் | எஸ். பாரதிபிரியா | 30th Rank |
| 5 | கணிதம் | ஜி. கௌசல்யா | 6th Rank |
| 6 | கணினி | எம். நிவேதா | 9th Rank |
| 7 | இயற்பியல் | கே. அபிநய சரசுவதி | 20th Rank |
| 8 | வேதியியல் | எஸ். ரேவதி | 5th Rank |
| 9 | தாவரவியல் | பி. பவித்ரா | 14th Rank |
| 10 | விலங்கியல் | ஜி. ஷீலா | 12th Rank |
| 11 | புவியியல் | வி. சூரியா | 2nd Rank |
| 12 | புள்ளியியல் | எம். சினேகா | 2nd Rank |

## அலுவலகம்

கல்லூரி அலுவலகத்தில் நிதியாளர், கண்காணிப்பாளர் உட்பட 16 அலுவலகப் பணியாளர்களும், பெற்றோர் ஆசிரியர் கழக நிதியுடன் 21 தற்காலிகப் பணியாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.

இக்கல்லூரியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு. ச.மணிகண்டன் அவர்கள் உதவியாளராகப் பணி உயர்வு பெற்றுப் பேராவூரணி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 19.06.2023 அன்று இடமாறுதல் பெற்றுச் சென்றுள்ளார்.

இக்கல்லூரியில் தட்டச்சராகப் பணிபுரிந்து வந்த திருமதி எம். மகாலட்சுமி அவர்கள் 26.11.2023 இடப்பெயர்வு பெற்று மன்னார்குடி ராஜகோபால சுவாமி அரசினர் கலைக்கல்லூரிக்குச் சென்றுள்ளார்.

தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் மூலம் தேர்வுபெற்று இருவர் பணியில் இணைந்துள்ளனர். செல்வி இ.துர்கா தேவி அவர்கள் தட்டச்சராகப் பணிபெற்று 28.11.2023 அன்றும் திரு. எம்.பிரபாகரன் அவர்கள் இளநிலை உதவியாளராக 27.11.2023 அன்றும் பணியில் சேர்ந்துள்ளனர்.

## புத்தொளி / திறன் மேம்பாட்டு பயிற்சி

இக்கல்வியாண்டில் 31 பேராசிரியர்கள் தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டு புத்தொளி பயிற்சி பெற்றனர்.

'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற திறன் மேம்பாட்டுப் பயிற்சியில் மூன்று மற்றும் ஐந்தாம் பருவத்தில் (3 & 5 Semester) 23 பேராசிரியர்களும், இரண்டாம் பருவம், நான்காம் பருவம், ஆறாம் பருவத்தில் (2,4,6 Semester) 26 பேராசிரியர்களும் பயிற்சி பெற்றனர்.

## கல்வி உதவித்தொகை

1. மாநில அரசு வழங்கும் அனைத்து பிரிவினருக்கான கல்வி உதவித்தொகை
2. உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை
3. தொழிலாளர் நலவாரியங்கள் அளிக்கும் உதவித்தொகை
4. மத்திய அரசின் சிறுபான்மைப் பிரிவு மாணவிகளுக்கான கல்வி உதவித்தொகை
5. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய உதவித்தொகை
6. இந்திராகாந்தி ஒற்றைப் பெண் குழந்தை உதவித்தொகை (முதுநிலை மாணவியருக்கு மட்டும்)
7. புதுமைப்பெண் - மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டம்
8. தமிழ்வழி ஊக்கத் தொகை (Medium Fund) ஆகிய உதவித்தொகைகள் நடைமுறையில் உள்ளன.

இவ்வாண்டு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் (BC, MBC, DNC) மாணவிகளுக்கு ரூ.36,17,898 உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் (SC, ST, SA) நல உதவித்தொகையாக ரூ.13,76,968 வழங்கப்பட்டுள்ளது. தமிழ்வழிக் கல்வி ஊக்கத்தொகையாக ரூ.8,89,200 பெற்று மாணவியர் பயனடைந்துள்ளனர். புதுமைப் பெண் திட்டத்தில் முதலாமாண்டு, இரண்டாமாண்டு மற்றும் மூன்றாமாண்டு மாணவியர்கள் 1334 (504+455+375) பேர் மாதம் ரூபாய் ஆயிரம் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

# கல்லூரியின் புதிய முன்னெடுப்புகள்

கல்லூரி முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்களின் சீரிய முயற்சியால் கல்லூரியில் பல சிறந்த ஆக்கங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

1. கல்லூரியின் இலச்சினை (Logo) மறு உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.
2. பெற்றோர் ஆசிரிய கழக நிதி நல்கையில் மாணவிகளுக்கு உயிரியளவியல் வருகைப்பதிவு (Biometric Attendence) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
3. மாநகராட்சி உதவியுடன் கழிவறை தூய்மை மற்றும் புதர்கள் அழிக்கப்பட்டுள்ளன.
4. வளாகத்தில் புல்வெளிகள் மற்றும் பூந்தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
5. பெற்றோர் ஆசிரிய கழக நிதி நல்கையில் RO உபகரணங்கள் பழுதுபார்க்கப்பட்டுச் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அனைவருக்கும் வழங்கப் பட்டுள்ளது.
6. கட்டடங்களுக்குத் தமிழ்ப்பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.
7. வகுப்பறைகளுக்குப் புதிய எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
8. முன்னாள் மாணவியர் சங்க நிதிநல்கையில் மரத்தளவாடங்கள் சீரமைக்கப்பட்டுப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும் கல்லூரி யாழ் கலையரங்கம் முன்னாள் மாணவியர் சங்கத்தால் சீரமைக்கப்பட்டுள்ளது.
9. ரோட்டரி சங்க உதவியுடன் குறுங்காடு திட்டத்தில் 375 மரக்கன்றுகள் (Sap-Saplings) நடப்பட்டுப் பேணப்படுகின்றன.
10. பெற்றோர்-ஆசிரியர் கழக நிதியில் புதிய கொடிமரம் மற்றும் மேடை அமைக்கப்பட்டுள்ளது.
11. கல்லூரி முகப்பில் தினமும் தேசியக்கொடி ஏற்றப்படுகிறது.
12. பொன்னி குளிர்மை அரங்கத்தில் ஒலிபெருக்கி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
13. தாவரவியல் துறையில் தமிழ் வழி 20 இடங்களும், ஆங்கில வழி 20 இடங்களும் அதிகரிக்கப் பட்டுள்ளன.
14. தேசிய மாணவர் படை அமைப்பு புதிதாகத் தொடங்க முன்னெடுப்புகள் செய்யப்பட்டுள்ளன.
15. துறைகளின் கணினிகள் பழுது நீக்கம் செய்யப்பட்டு மாணவியருக்குப் பயன்தரும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளன.
16. கும்பகோணம் பரபஸ்பர சகாய நிதி நிறுவன மேலாண்மை இயக்குநரும், மாநிலங்களவை உறுப்பினருமான திருமிகு கல்யாண சுந்தரம் அவர்களைச் சந்தித்து CSR திட்டத்தில் மாணவிகள் அமரும் வகையில் 200 Stainless Steel பெஞ்சுகள் வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டு நமக்கு நாமே திட்டத்தின் துணையோடு பெறப்பட்டுள்ளன.
17. கல்லூரியில் தானியங்கி மின்சார மணி பொருத்தப்பட்டுள்ளது.
18. முதுகலை ஆங்கிலத்தில் 20 இடங்களும், முதுகலை வரலாற்றில் 19 இடங்களும், முது அறிவியல் வேதியியலில் 5 இடங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.
19. சேவைச் சங்கங்களின் பெயர்ப்பலகை முன்புறச் சுற்றுச்சுவரில் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் வழிகாட்டும் பலகைகளும் பொருத்தப்பட்டுள்ளன.

## கட்டடங்களும் தமிழ்ப்பெயர்களும்

கல்லூரி வளாகத்தில் உள்ள அனைத்துக் கட்டடங்களுக்கும் அழகான தமிழ்ப்பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. அப்பெயர்கள் சொன்னாலே இனிக்கும் தன்மையுடைய தமிழ்ச்சொற்களாகும். மருதம், அனிச்சம், வேங்கை, காவிரி, காந்தள், ஆம்பல், வாகை, கொன்றை, பொன்னி, குறிஞ்சி, முல்லை, யாழ் என்பதாக தமிழ்ப்பெயர்களோடு கட்டடங்கள் தலைநிமிர்ந்து நிற்கின்றன.

## நிதி

கல்லூரிக்கு ஆய்வக உபகரணங்கள், புத்தகங்கள், இதழ்கள் வாங்குவதற்குத் திட்டமிடா நிதி ஒதுக்கீட்டுத் தொகை ரூ.4,40,000 பெறப்பட்டுச் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. டான்சி மூலம் தளவாடங்கள் (மேசை ஸ்டீல், டெஸ்க், செராமிக் போர்டு) ரூ.38,00,110 பெறப்பட்டுள்ளது. PMJVK (Pradhan Mandri Jan Vikas Kargagram) மூலம் பல்நோக்கு விளையாட்டு அரங்கம் (Multi-purpose) மற்றும் 400 மீட்டர் ஓடுதல் பாதையும் (Athletic track) இவற்றுடன் சிறுபான்மையினர் நல விடுதி அமைத்துக்கொள்ள நிதியுதவிக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

## தேர்வு நெறியாளர் அலுவலகச் செயல்பாடுகள்

தேர்வு நெறியாளர் அலுவலகம் முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்களை முதன்மைத் தேர்வு நெறியாளராகவும், பொருளியல் துறைத் தலைவர் முனைவர் தெ.மலர்விழி அவர்களைத் தேர்வு நெறியாளராகவும், கணினித் துறை பேராசிரியர் திருமதி மி.ஜடாரோஸ் அவர்களைத் துணைத் தேர்வு நெறியாளராகவும் கொண்டு இயங்கி வருகிறது.

2023-2024ஆம் கல்வி ஆண்டு முதல் சேர்ந்துள்ள இளநிலை மற்றும் முதுநிலை மாணவியருக்கு விளைவு அடிப்படையிலான கல்வி முறையில் (OBE) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. TANSHE பாடத் திட்டத்திலிருந்து விலகல் இல்லாமல் 75% பாடத்திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. பருவத்தேர்விற்கு மாணவிகள் தயாராகும் வகையில் ஒரு பருவத்தேர்விற்கு இரண்டு அகமதிப்பீட்டுத் தேர்வுகள் (Internel Examination 1,2) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மாணவிகளுக்கான வருகைப்பதிவு கால அளவாக (Hour) மணி நேரம் கணக்கிடப்பட்டு செயல்படுத்தப்படுகின்றது.

மாணவிகள் எழுத வேண்டிய பாடக்குறியீடுகள் (Subject code) மற்றும் தேர்வுக் கட்டணங்கள் உட்பட அனைத்தும் அச்சிடப்பட்டு தனித்தனி தேர்வு விண்ணப்பத்திற்குப் பதிலாக ஒரு வகுப்பில் உள்ள அனைத்து மாணவிகளுக்கும் சேர்த்து ஒரே பதிவுப் படிவம் (Registration Gallery) வழங்கப்படுகிறது.

மாணவிகளுக்குத் தேர்வு விதிமுறைகள் அச்சிடப்பட்டு நுழைவுச்சீட்டு (Hall Ticket) வழங்கப்படும் முறை நடைமுறையில் உள்ளது. தேர்வு நெறியாளர் அலுவலகம் கணினி மயமாக்கப்பட்டுள்ளதால் தேர்வு முடிவுகள் காலதாமதம் இன்றி உடனடியாக வெளியிடப்பட்டு வருகின்றது. 2023 ஏப்ரல் பருவத் தேர்வினை 4015 மாணவிகள் எழுதினர். இளநிலையில் 93.36% மற்றும் முதுநிலையில் 86.35% மாணவிகள் தேர்ச்சி பெற்றனர்.

நிதிக்குழுக்கூட்டம் (Finannce Committee) 28.06.2023 அன்றும், ஆட்சிக்குழுக்கூட்டம் (GovernnigBody) 16.02.2024 அன்றும், கல்விக்குழுக் கூட்டம் (Academic Council) 04.11.2023 அன்றும், அகநிலை பாடத் திட்டக்குழுக் கூட்டம் 07.02.2024 அன்று தொடங்கி 08.02.2024, 09.02.2024, 12.02.2024 ஆகிய நான்கு நாட்கள் நடைபெற்றன.

# உடற்கல்வித் துறை

2023-2024ஆம் ஆண்டில் விளையாட்டுத் துறையில் தேசிய அளவிலும், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளிலும் விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டு பல பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்று நம் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

**தேசிய அளவிலான சாதனை**

தடகளப்போட்டி 20.10.2023 முதல் 22.10.23 வரை சண்டிகரில் நடைபெற்றது. அதில் முதுகலை இரண்டாமாண்டு தாவரவியல் துறை மாணவி டி.வினோதினி, சங்கிலிக் குண்டு எறிதல் போட்டியில் ஏழாம் இடம் பெற்றார்.

தமிழ்நாடு தேசிய அளவிலான சீனியர் ஹாக்கிப் போட்டியில் கலந்து கொள்வதற்கான முகாமில் 15.09.2023 முதல் 30.09.2023 வரை நடைபெற்ற பயிற்சியில் நம் கல்லூரி முதுகலை இரண்டாமாண்டு பொருளியல் துறை மாணவி எஸ்.பிரவீனா கலந்து கொண்டார்.

குத்துச் சண்டை போட்டியில் இளங்கலை மூன்றாமாண்டு வணிகவியல் துறை மாணவி எஸ்.பிரீத்தி 26.12.2023 முதல் 30.12.2023 வரை கேரளாவில் நடைபெற்ற புரோ பாக்சிங் போட்டியில் முதல் பரிசு பெற்றார்.

**பல்கலைக்கழக அளவிலான சாதனை**

அகில இந்தியப் பல்கலைக்கழக அளவிலான தடகளப்போட்டி காலிங்கா இண்டஸ்ட்ரியல் டெக்னாலஜி நிறுவனத்தில் புவனேஸ்வரில் 26.12.2023முதல்29.01.2023வரைநடைபெற்றது. அதில் நம் கல்லூரியின் முதுகலை இரண்டாமாண்டு தாவரவியல் துறை மாணவி ஈ.வினோதினி சங்கிலிக் குண்டு எறிதல் போட்டியிலும் ஏ.தீபா முதுகலை முதலாம் ஆண்டு இயற்பியல் துறை மாணவி 110மீ தடைதாண்டும் போட்டியில் கலந்து கொண்டார். மேலும் மத்திய பல்கலைக்கழகம் திருவாரூரில் நடைபெற்ற பல்கலைக்கழக அளவிலான கோ-கோ விளையாட்டுப் போட்டியில் நம் கல்லூரி முதுகலை முதலாமாண்டு வணிகவியல் துறை மாணவி எல்.பவிதா கலந்து கொண்டார்.

**மாநில அளவிலான சாதனை**

சென்னையில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை போட்டியில் நம் கல்லூரியிலிருந்து கபடிப் போட்டிக்கு 5 வீராங்கனைகளும், கூடைபந்து போட்டிக்கு 4 வீராங்கனைகளும், மட்டைபந்து போட்டிக்கு 3 வீராங்கனைகளும், கால்பந்து போட்டியில் 4 வீராங்கனைகளும், ஹாக்கிப் போட்டியில் 12 வீராங்கனைகளும் தஞ்சையின் சார்பாக மாநில அளவிலான போட்டியில் கலந்து கொண்டனர்.

கரூரில் நடைபெற்ற மல்யுத்தப் போட்டியில் தமிழ்த்துறைமாணவி டி.அனிதா65முதல்70கிலோ எடைப்பிரிவில் முதலிடம் பெற்றார். ஏ. ரேனிகா இளங்கலை இரண்டாமாண்டு வணிகவியல் துறை மாணவி 55 முதல் 60 கிலோ எடைப்பிரிவில் முதலிடம் பெற்றார். வணிகவியல் துறை மாணவி எஸ். பீரித்தி மூன்றாமாண்டு 60 முதல் 65 கிலோ எடைப்பிரிவில் முதலிடம் பெற்றார். ஏ.பி.இஷாஸ்ரீ இளங்கலை இரண்டாமாண்டு வணிகவியல் துறை மாணவி 40 முதல் 45 கிலோ எடைப்பிரிவில் முதலிடம் பெற்றார்.

கரூரில் நடைபெற்ற தமிழ்நாடு தடகள சங்கம் நடத்திய மாநில அளவிலான போட்டியில் இளங்கலை முதலாமாண்டு விலங்கியல் துறை மாணவி டி.மகரஜோதி ஈட்டி எறிதல் போட்டியில் மூன்றாமிடம் பெற்றார்.

## பாரதிதாசன் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு இடையேயான போட்டி

**பளுதூக்கும் போட்டி**

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பளுதூக்கும் போட்டியில் முதுகலை இரண்டாமாண்டு தாவரவியல் துறை மாணவி டி.வினோதினி 59 கிலோ எடைப்பிரிவில்

முதலிடம் பெற்றார். எம்.அபிநயா இளங்கலை இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறை மாணவி 81 கிலோ எடைப்பிரிவில் இரண்டாமிடம் பெற்றார். ஆர்.மஞ்சுளா இளங்கலை இரண்டாமாண்டு தாவரவியல் துறை மாணவி 71 கிலோ எடைப்பிரிவில் மூன்றாமிடமும் கே.மகா இளங்கலை மூன்றாமாண்டு கணிதத்துறை மாணவி 64 கிலோ எடைப்பிரிவில் மூன்றாமிடமும் பெற்றுள்ளனர்.டி.என்.துவாரகநதி இளங்கலை முதலாமாண்டு வணிக நிர்வாகவியல் துறை மாணவி 81 கிலோ எடைப்பிரிவில் இரண்டாமிடம் பெற்றார். மேலும் ஒட்டுமொத்த புள்ளிகளில் பாரதிதாசன் பல்கலைக்கழகக் கல்லூரிகளில் பளுதூக்கும் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றனர்.

### குத்துச் சண்டை

ஜெ.ஜெ.கல்லூரியில் நடைபெற்ற குத்துச் சண்டை போட்டியில் ஏ. ரேனிகா இளங்கலை இரண்டாமாண்டு பொருளியல் துறை மாணவி 60-63 கிலோ எடைப் பிரிவில் முதலிடம் பெற்றார். ஆர்.அனுசியா இளங்கலை முதலாமாண்டு பொருளியல் துறை மாணவி 70-75 கிலோ எடைப் பிரிவில் இரண்டாம் பரிசு பெற்றார். எஸ்.வனிதா இளங்கலை முதலாமாண்டு பொருளியல் துறை மாணவி 50-52 கிலோ எடைப் பிரிவில் இரண்டாமிடம் பெற்றார். டி.அனிதா இளங்கலை மூன்றாமாண்டு தமிழ்த்துறை மாணவி 60-70 கிலோ எடைப் பிரிவில் இரண்டாமிடம் பெற்றார். எஸ்.பிரீத்தி இளங்கலை மூன்றாமாண்டு வணிகவியல் துறை மாணவி 50-57 கிலோ எடைப் பிரிவில் இரண்டாமிடம் பெற்றார். ஏ.மித்ரா இளங்கலை இரண்டாமாண்டு பொருளியல் துறை மாணவி 75-81 கிலோ எடைப் பிரிவிலும், ஏ.பி.இஷா ஸ்ரீ இளங்கலை இரண்டாமாண்டு வணிகவியல் துறை மாணவி 45-48 கிலோ எடைப் பிரிவிலும் சி.தர்ஷினி இளங்கலை முதலாமாண்டு கணினி அறிவியல் துறை மாணவி 48-50 கிலோ எடைப் பிரிவிலும் மூன்றாமிடம் பெற்று நம் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். பாரதிதாசன் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு இடையேயான குத்துச்சண்டை போட்டியில் மூன்றாமிடம் பெற்றனர்.

## பாரதிதாசன் பல்கலைக்கழக 41ஆவது கல்லூரிகளுக்கு இடையேயான போட்டிகள்

### தடகளப்போட்டி

16.12.2023 முதல் 17.12.2023 வரை அண்ணா விளையாட்டு மைதானம் திருச்சியில் நடைபெற்ற போட்டியில் ஐ.மகரஜோதி இளங்கலை முதலாமாண்டு விலங்கியல் துறை மாணவி ஈட்டி எறிதல் போட்டியில் முதலிடம் பெற்றார். ஏ.தீபா முதுகலை முதலாமாண்டு இயற்பியல் துறை மாணவி 100 மீ தடைதாண்டும் போட்டியில் முதலிடம் பெற்றார். டி.வினோதினி முதுகலை இரண்டாமாண்டு தாவரவியல் துறை மாணவி சங்கிலிக் குண்டு எறிதல் போட்டியில் இரண்டாமிடமும், கே.நித்திஷா இளங்கலை முதலாமாண்டு விலங்கியல் துறை மாணவி மும்முறை தாண்டுதல் போட்டியில் முதலிடமும், நீளம் தாண்டுதல் போட்டியில் இரண்டாமிடமும், வி.வித்யா இளங்கலை இரண்டாமாண்டு இயற்பியல்துறை மாணவி கோலூன்றித்தாண்டுதல் போட்டியில் முதலிடம் பெற்று புதிய சாதனையைப் பெற்றுள்ளார். 4X100 மீ தொடர் ஓட்டப் போட்டியில் நம் கல்லூரி வீராங்கனைகள் நான்கு பேர் கலந்து கொண்டு இரண்டாமிடமும் எஸ்.சௌந்தர பிரியா இளங்கலை முதலாமாண்டு ஆங்கிலத்துறை மாணவி ஹெப்டதலான் போட்டியில் கலந்துகொண்டு மூன்றாமிமுடம் பெற்றனர். பாரதிதாசன் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு இடையேயான தடகளப் போட்டியில் நம் மாணவியர் ஒட்டு மொத்த புள்ளிகளில் 4 தங்கம், 3 வெள்ளி, 1 வெண்கலப்பதக்கத்துடன் இரண்டாம் இடம் பெற்றுக் கோப்பையைத் தன்வசமாக்கிக் கொண்டனர்.

### வளைகோல் பந்து

பாரதிதாசன் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு இடையேயான வளைகோல் பந்து (ஹாக்கி) போட்டி 09.01.2024 மற்றும் 10.01.2024 வரை திருச்சி அண்ணா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. அதில் நம் கல்லூரி அணி கலந்துகொண்டு இரண்டாமிடம் பெற்று கோப்பையைக் கைப்பற்றினர்.

**அறிஞர் அண்ணா நூற்றாண்டு மாராத்தான் போட்டி**

07.10.2023 அன்று அன்னை சத்யா விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது. அதில் நம் கல்லூரி இளங்கலை முதலாமாண்டு தாவரவியல் துறை மாணவி எம்.ஹரிபிரியா இரண்டாமிடம் பெற்று ரூ.3000 பரிசாகப் பெற்றார். மேலும் எம்.சுபஸ்ரீ இளங்கலை மூன்றாமாண்டு ஆங்கிலத்துறை மாணவி மூன்றாமிடம் பெற்று ரூ.2000 பரிசாகப் பெற்றார். மேலும் தொடர்ந்து நான்காம் இடம் முதல் பத்தாம் இடம் வரை ரூ.1000 பரிசுத் தொகையும் நம் கல்லூரி மாணவியர் பெற்றுக் குவித்துள்ளனர்.

## பெற்றோர் ஆசிரியர் கழகம்

பெற்றோர் ஆசிரியர் கழகம் முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்களைத் தலைவராகவும், திரு முருகேசன் அவர்களை செயலாளராகவும், கணிதத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் த.கீதா அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு செவ்வனே செயல்பட்டு வருகின்றது.

இக்கழகத்தின் மூலம் 16 ஆசிரியரல்லாப் பணியாளர்களும் 1 கௌரவ விரிவுரையாளரும் நியமிக்கப்பட்டு மாத ஊதியம் இக்கழக நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. மேலும் கல்லூரி வளர்ச்சிப் பணிகளுக்கு இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

## கணினி கல்வியறிவுத் திட்டம் (CLP)

கல்லூரியின் கணினிக் கல்வியறிவுத் திட்டம் 2002ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கணினி அறிவியல் துறை அல்லாத பிற துறை சார்ந்த இளநிலை முதலாமாண்டு மாணவிகளுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

2023-2024ஆம் கல்வியாண்டில் 1200 மாணவிகள் பயின்று வருகின்றனர். மாணவிகளுக்குத் தேர்வு நடத்தப்பெற்று சான்றிதழ் வழங்கப்படுகிறது. இச்சான்றிதழை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

ஆய்வகத்தில் 5 பயிற்சி ஆசிரியர்கள் உள்ளனர். 80 கணினிகள் உள்ளன.

## அறக்கட்டளை

மாணவிகளின் திறமைகளையும் ஆர்வத்தையும் ஊக்குவிக்கும் வகையில் எம் கல்லூரியில் அறக்கட்டளைப் பரிசுகள் 1999-2000ஆம் கல்வியாண்டு முதல் வழங்கப்பெற்று வருகின்றன. கல்லூரியின் முன்னாள் முதல்வர்கள், பேராசிரியர்கள், தற்பொழுது பணியாற்றும் பேராசிரியர்கள் மற்றும் பிற ஆர்வலர்கள் இப்பரிசு அறக்கட்டளைகளை வழங்கிச் சிறப்பிக்கின்றனர்.

## முன்னாள் மாணாக்கியர் சங்கம்

1975ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டம் தமிழ்நாடு சட்டம் 27/1995 பிரிவு 10இன் கீழ் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (தன்னாட்சி) முன்னாள் மாணவியர் சங்கம் 30.05.2022 அன்று பதிவு செய்யப்பட்டது.

2023-2024ஆம் கல்வியாண்டில் முன்னாள் மாணாக்கியர் சங்கம், பொருளியல் துறைத் தலைவர் முனைவர் தெ.மலர்விழி அவர்களைத் தலைவராகவும், விலங்கியல் துறைத் தலைவர் முனைவர் ந.சந்திரகலா அவர்களைத் துணைத் தலைவராகவும், தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் கோ.தமிழ்ச்செல்வி அவர்களை செயலாளராகவும், வணிகவியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ஜெ.பிரகன் நாயகி அவர்களை இணைச்செயலராகவும், வரலாற்றுத் துறை இணைப்பேராசிரியர் முனைவர் த.அனுராதா அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு இச்சங்கம் செயல்பட்டு வருகிறது. சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களாகக் கணிதத் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் சு.இந்திரகலா அவர்களும், தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் மு.வேம்பு அவர்களும், தமிழ்த்துறை விரிவுரையாளர் முனைவர் அ.சரசுவதி அவர்களும் செயல்பட்டு வருகின்றனர்.

முன்னாள் மாணாக்கியர் சங்க நிதியிலிருந்து கீழ்க்காணும் பணிகள் இவ்வாண்டு மேற்கொள்ளப் பட்டன.

★ கல்லூரியின் யாழ் கலையரங்கம் வர்ணம் பூசப்பட்டது.

★ கல்லூரியின் பழைய மரத் தளவாடங்கள் சீரமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டு புதுப்பிக்கப்பட்டது.

★ கல்லூரிக்கு ரூ.27,000/- செலவில் 5 அடி உயரமுள்ள வெண்கல மங்கல விளக்கு வாங்கப்பட்டது.

★ கல்லூரி வளாகத்தில் உள்ள குந்தவை நாச்சியார் கற்சிலை பராமரிக்கப்பட்டது.

★ கல்லூரியில் இயங்கும் உணவகத்தை முன்னாள் மாணவியர் சங்க உறுப்பினர்கள் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர். மாணவிகளுக்குக் குறைந்த விலையில் உணவு வழங்கப்படுகிறது.

★ கல்லூரியின் அனிச்சம் அரங்க முகப்பில் புல்வெளி அமைக்கப்பட்டுள்ளது.

★ கல்லூரியின் முகப்பிலுள்ள வட்டப்பகுதி (Roundana) மற்றும் தோட்டம் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கல்லூரியில் உலக சகோதரத்துவ தினம் 12.09.2023 அன்று கொண்டாடப்பட்டது. பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். கல்லூரியின் முன்னாள் மாணவியரின் மறு இணைவு கூட்டம் 23.09.2023 அன்று நடைபெற்றது.

## நூலகம்

எம் கல்லூரியின் பொது நூலகத்தில் 20,084 பலதுறை நூல்கள் உள்ளன. இவற்றைத் தவிர அந்தந்தத் துறையிலும் நூலகம் செயல்படுகின்றது. துறை நூலகம், பொது நூலகம் இவற்றில் மாணவிகள் பயன்படுத்தும் வகையில் மொத்தமாக 57,000 நூல்கள் உள்ளன. மின்னணு நூலகமும் கணினி வசதி யுடன் செயல்படுகின்றது. 13 இதழ்கள் மாணவிகள் பயன்பாட்டிற்கு உதவும் வகையில் பெறப்படுகின்றன. மின்நூல்கள் (E-Books) 9,000 உள்ளன. பொதுநூலகப் பொறுப்பினை விலங்கியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் பி.சரபோஜி அவர்கள் ஏற்றுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றார். மின்னூலக ஆக்கத்திற்காக ரூ.25,000 அரசு உதவி பெறப்பட்டுள்ளது.

# கல்லூரி முதன்மை விடுதி

எம் கல்லூரியின் முதன்மை விடுதி 1976ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மிகச் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது. விடுதிக் காப்பாளராகக் கல்லூரி முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்கள் திறம்படச் செயல்புரிந்து வருகின்றார். இளநிலை விடுதித் துணைக் காப்பாளராகப் பொருளியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் அ. மெகருனிசா பேகம் அவர்களும், முதுநிலை விடுதி துணைக்காப்பாளராக விலங்கியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் பெ.தங்கமதி அவர்களும் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றனர். விடுதியில் 283 இளநிலை (UG) மாணவிகளும் 65 முதுநிலை (PG) மாணவிகளும் தங்கிப் பயனடைகின்றனர்.

04.10.2023 அன்று ‘பெண்கள் பாதுகாப்பு மற்றும் தன்னம்பிக்கை’ என்ற தலைப்பில் காவல்துறை அதிகாரிகளான மதிப்பிற்குரிய கலைவாணி, கிருஷ்ணவேணி, செல்வராணி, ரேவதி ஆகியோரால் விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது.

28.10.2023, 29.10.2023 மற்றும் 15.12.2023 ஆகிய மூன்று நாட்கள் வாழ்க வளமுடன் அறிவுத் திருக்கோயில் அமைப்பின்வழி யோகா பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

போட்டித் தேர்வுகளான TNPSC, Group II, Group IV வகுப்புகள், ஹிந்தி வகுப்புகள், தையற்கலை மற்றும் அழகுக்கலை வகுப்புகளில் மாணவியர் சிறந்த முறையில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

05.01.2024 அன்று யானைக்கால் நோய்த் தடுப்பு இரத்த பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது.

22.01.2024 அன்று முதுநிலை விடுதியின் முன்புறம் காய்கறித் தோட்டம் அமைக்கப்பட்டு தோட்டத்தைச் சுற்றிப் பாதுகாப்பு வேலி அமைக்கப் பட்டுள்ளது.

12.02.2024 மற்றும் 13.02.2024 ஆகிய நாட்களில் காய்கறிக் கழிவுகளைப் பயன்படுத்தி மண்புழு உரம் தயாரிக்கும் குழியும் மற்றும் விடுதிக் குப்பைகளை மறுசுழற்சி செய்வதற்கான குழியும் அமைக்கப்பட்டுள்ளன.

# மாணவிகளுக்கான சமூக நலத் துறை அரசு விடுதிகள்

எம் கல்லூரி வளாகத்தின் மாணவிகள் தங்கிப் படிக்க இலவச சமூக நல விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகள் வெகுதூரத்திலிருந்து பொருளாதார நிலையில் பின்தங்கி இருக்கக்கூடிய மாணவிகளுக்குப் பயனுள்ளதாய் அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. வளாகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நலவிடுதி 1இல் (BC1) 85 மாணவிகளும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி 2இல் (BC2) 100 மாணவிகளும் சீர்மரபினர் நலவிடுதியில் (DNC) 90 மாணவிகளும் தங்கிப்படித்து வருகின்றனர். இதே வளாகத்தில் ஆதிதிராவிடர் நலவிடுதி 1இல் (SC1) 90 மாணவிகளும் ஆதிதிராவிடர் நல விடுதி 2இல் (SC2) 50 மாணவிகளும் தங்கிப் படித்து வருகின்றனர்.

இவ்விடுதிகள் சார்ந்த நலத்துறை அலுவலகத்தின் நிதி நல்கையில் விடுதிக் காப்பாளர்கள் கண்காணிப்பில் செவ்வனே செயல்பட்டு வருகின்றது. இவ்விடுதியில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மாணவிகளுக்கான சேர்க்கை வழிகாட்டு பொறுப்பாளராகத் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் பு. இந்திராகாந்தி செயல்பட்டு வருகின்றார்.

ஆதிதிராவிடர் நல விடுதிகளின் சேர்க்கை வழிகாட்டுப் பொறுப்பாளர்களாக வரலாற்றுத்துறை பேராசிரியர்களான முனைவர் சு.சாந்தி, முனைவர் மு.ராதா ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர்.

## கூட்டுறவு பண்டக சாலை

கல்லூரி மாணவிகளின் நலனை மனதில் கொண்டு 23.07.1976 அன்று முதல் O.T 1842 என்ற பதிவெண்ணுடன், தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவுத் துறையின் வழிகாட்டுதலோடு கல்லூரியின் கூட்டுறவுப் பண்டகசாலை செயல்பட்டு வருகின்றது. தற்போது பண்டக சாலையின் பொறுப்பாளராக விலங்கியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கு.துரைராஜ் அவர்கள் நியமிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றார். கூட்டுறவு பண்டக சாலையின் மூலம் மாணவிகளுக்குத் தேவையான எழுது பொருட்கள், நோட்டுகள் மற்றும் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. பேராசிரியர்கள் மற்றும் துறை சார்ந்த மாணவிகள் உட்பட 500 உறுப்பினர்களைக் கொண்டு பண்டகசாலை செயல்பட்டுவருகின்றது.

## உள்தர உறுதிக்குழு (IQAC)

உள்தர உறுதிக் குழுவின் ஒருங்கிணைப் பாளராகப் புவியியல் துறைப் பேராசிரியர் முனைவர் க.பானுகுமார் அவர்கள் செயல்பட்டு வருகிறார். உள்தர உறுதிக்குழு, கல்லூரியின் செல்பாடுகளை நெறிப்படுத்துவதற்காகப் பல்கலைக்கழக மானியக் குழுவின் வழிகாட்டுதலின்படி அமைக்கப் பட்டுள்ளது. மானியக்குழுவின் வழிகாட்டு நெறிமுறையைப் பின்பற்றி கல்லூரியின் மூத்த ஆசிரியர்கள், கல்வியாளர்கள், தொழில்துறை வல்லுநர்கள், மாணவியர்கள் மற்றும் முன்னாள் மாணவியர்களை உள்ளடக்கியக் குழுவைக்கொண்டு தர உறுதிக் குழு செயல்பட்டு வருகிறது.

17.07.2023 அன்று முதல் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஒவ்வொரு துறையும் தங்கள் சிறந்த நடைமுறையை அடையாளம் கண்டு சீரான ஆவணங்களைப் பராமரிக்க வழிகாட்டுதல் வழங்கப்பட்டது. குறுந்தொழில் மற்றும் சேவை முகமைகளுக்கான வாய்ப்புகள் உள்ள ஒவ்வொரு துறையும் அதற்கான முன்னெடுப்புகளை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டு செயல்வடிவம் நோக்கி உள்தர உறுதிக்குழு செயல்பட்டு வருகின்றது. UGC பட்டியலில் இடம்பெற்ற ஆய்விதழ்களில் ஆராய்ச்சிப் படைப்புகளை வெளியிடவும் வலியுறுத்தப்பட்டது. கல்லூரிக்காகப் பிரத்தியேக தகவல் மேலாண்மை அமைப்பு மென் பொருள் வெற்றிகரமாக (MISKNAGAC) வெற்றிகரமாக உருவாக்கப்பட்டு சோதனை முறையில் 2021-2022 மற்றும் 2021-2023ஆம் கல்வி ஆண்டில் AQAR தொகுக்கப்பட்டுள்ளது. பட்ட தலைப்பு, குறியீடுகள் மற்றும் மாணவிகளின் வேலை அமர்வுகள் என அனைத்தும் விடுபடாமல் துறையில் பேணுதல் IQACஇன் நிலையான முயற்சியின் முன்னெடுப்புகளாக இருக்கின்றன.

இரண்டாவது கூட்டம் 08.01.2024 அன்று நடைபெற்றது. NAAC 5ஆவது சுழற்சியை எதிர்கொள்வது குறித்துப் பேசப்பட்டது. தற்போது நடைமுறையில் உள்ள தரவரிசை முறையில் மார்ச் 2024இல் IQGA விண்ணப்பிக்க முடிவு செய்யப்பட்டது. தன் விருப்பத்தின் அடிப்படையில் NAAC பணி ஒதுக்கீடு மற்றும் துறைகளின் துல்லியமான தரவுத் தொகுப்பின் மூலம் பண்பு மற்றும் புள்ளிசார் மதிப்பெண்களை அதிகப்படுத்துதல் குறித்து முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. சூரிய சக்தி ஆற்றல், நீர் மறுசுழற்சி கட்டமைப்புகள், உணவகம் மற்றும் வளாக அழகு ஆகியவை IQACயின் மூலம் வலியுறுத்தப்பட்டு உகந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## தேசிய உயர் கல்வித் திட்டம் (RUSA)

RUSA அமைப்பின் ஒருங்கிணைப்பாளராக பொருளியல் துறைத்தலைவர் முனைவர் தெ.மலர்விழி அவர்கள் செயல்பட்டுவருகிறார். RUSA AMG Academy Pvt. Ltd, Inligna International Language Centre மூலம் நமது கல்லூரி மாணவிகளுக்குத் தொழில்சார் அயல்நாட்டு மொழி பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

அந்நிறுவனம் பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் மொழி A2 மற்றும் B1 நிலை மொழி படிப்புகளை வழங்கினார்கள். இது ஒரு ஆன்லைன் தொழிற்கல்வி படிப்பு, எமது கல்லூரியில் 240 மாணவியர் பயனாளிகள் இதில் A2 மற்றும் B1 நிலை பிரெஞ்சு மொழிப் பாடமும் 30 மாணவிகள் A2 மற்றும் B1 நிலை ஜெர்மன் மொழி பாடமும் படித்தனர். 240 மாணவிகளில், 80 மாணவிகள் B1 நிலை பிரெஞ்சு மொழி பயிலத் தகுதி பெற்றுள்ளனர். 27 மாணவிகளில் 4 மாணவிகள் B1 நிலை ஜெர்மன் மொழிப் பயிலத் தகுதிபெற்றனர்.

RUSA வழி நடைபெறும் இந்தத் தொழில் மொழிப் படிப்புகள் மாணவிகளிடையே வெளிநாட்டு மொழித்திறனை மேம்படுத்துவதோடு மொழி பெயர்ப்பாளர் பணி, பயிற்சியாளர் பணி, தூதரக வேலைகள், விமானப் போக்குவரத்துத் துறை, ஐடி துறை, விருந்தோம்பல் தொழில் போன்ற பல துறைகளில் வேலைவாய்ப்பினைப் பெற உதவியாக இருக்கும்.

## கணித்தமிழ்ப் பேரவை

இலக்கியக் கல்வி மட்டுமின்றிக் கணிப்பொறி பயன்பாட்டிலும் தமிழ் மாணவிகள் சிறப்பான முன்னேற்றம் காண வேண்டும் என்ற நோக்கத்துடன் 2023-2024 ஆம் கல்வியாண்டில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்களின் வழிகாட்டுதலோடு கணித்தமிழ் பேரவை தொடங்கப்பட்டுள்ளது.

இவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளர்களாகத் தமிழ்த் துறை இணைப் பேராசிரியர்கள் முனைவர் பு.இந்திராகாந்தி, முனைவர் ரெ.ஹேமலதா, முனைவர் சா.பெரியநாயகி, முனைவர் பொ. திராவிடமணி, உதவிப் பேராசிரியர் முனைவர் இரா.தமிழடியான் ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர்.

28.08.2023 அன்று அமைப்பின் தொடக்கவிழா நடைபெற்றது. ‘தமிழ் மென் பொருள்கள், செயலிகள் அறிமுகமும் பயன்பாடும்’ என்ற பொருண்மையில் முனைவர் நா.சிவாஜி கபிலன், இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர் அ.வீ.வா.நி.திரு புட்பம் கல்லூரி பூண்டி அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

20.02.2024 அன்று தஞ்சாவூர் காவிரி ரோட்டரி சங்கம், குந்தவை நாச்சியார் காவேரி ரோட்டரி சங்கம் மற்றும் தஞ்சாவூர் CAAD Center இணைந்து ‘அலுவலகச் செயல்பாடுகளில் தமிழ் மென்பொருள் பயன்படுத்துதல்’ என்ற பொருண்மையில் ஒரு நாள் பயிற்சி பட்டறை நடத்தப்பெற்றது. அதைத் தொடர்ந்து 30 மாணவிகளுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது.

## ISRO IIRS தொலைநிலை வகுப்பு

தொலைநிலை வகுப்பு மையத்தின் ஒருங்கிணைப்பாளராகப் புவியியல் துறைப் பேராசிரியர் முனைவர் அ.செந்தில்வேலன் அவர்கள் செயல்பட்டு வருகின்றார்.

டேராடூனில் உள்ள இந்தியத் தொலைவு நிறுவனத்தின் (Indian Institute of Remote Sensing) தொலைநிலை வகுப்புகளை நடத்துவதற்கு ஜூன் 2021 முதல் நம் கல்லூரி ஒரு மையமாக செயல்பட்டு வருகின்றது. தொலை உணர்வு அறிவியல், புவி தகவல் அமைப்பு உள்ளிட்ட புவிசார் தொழில்நுட்பம் தொடர்பான பல்வேறு தலைப்புகளில் நடைபெற்ற பயிற்சி வகுப்புகளில் புவியியல் துறை, வரலாற்று துறைப் பேராசிரியர்கள் மற்றும் இளநிலை மற்றும் முதுநிலை மாணவியர் 49 பேர் கலந்துகொண்டு 21 மாணவிகள் சான்றிதழ்கள் பெற்றனர்.

# நூல் நயம்

பரந்துபட்ட வாசிப்பின் வழியாகவே அறிவார்ந்த பண்பட்ட சமூகத்தை உருவாக்க முடியும். அவ்வகையில் கல்லூரி முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்களின் வழிகாட்டுதலோடு நூல் நயம் அமைப்பு 2023-2024 ஆம் கல்வியாண்டில் 07.09.2024 அன்று தொடங்கப்பட்டது. அமைப்பின் ஒருங்கிணைப்பாளராகத் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் ம.கண்ணம்மாள் அவர்களும், இணை ஒருங்கிணைப்பாளர்களாக தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் ச.ரேவதி, தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் வெ.அமுதா மற்றும் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் தி.ஹேமலதா அவர்களும் செயல்பட்டு வருகின்றனர்.

'நூல் நயம்' அமைப்பின் தொடக்க விழாவில் தமிழ்ப்பல்கலைக்கழக அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறைத்தலைவர் முனைவர் இரா.குறிஞ்சி வேந்தன் அவர்கள் விழாப் பேருரை நிகழ்த்தினார்கள்.

22.09.2023 அன்று எழுத்தாளர் ஸ்டாலின் சரவணன் அவர்கள் கலந்துகொண்டு வாசிப்பின் சிறப்பு குறித்து உரை நல்கினார்கள். தமிழ்த்துறை முதலாமாண்டு மற்றும் மூன்றாமாண்டு மாணவிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

28.12.2023 அன்று கவிஞர், எழுத்தாளர் முத்துராசா குமார் மற்றும் பத்திரிக்கையாளர் கிருத்திகா சீனிவாசன் ஆகியோர் பங்கேற்ற நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் முனைவர் பட்ட மாணவிகள் வாசிப்பு அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டனர். இத்தொடர் நிகழ்வுகள் மாணவிகளின் தொடர் தேடலையும், ஆர்வத்தையும் வெளிக் கொணரும் வகையில் அமையப்பெற்று செயலாக்கம் அளிக்கின்றது.

# பொங்கல் விழா

12.01.2024 அன்று சமத்துவப் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேர்வு நெறியாளர் முனைவர் தெ.மலர்விழி, நிதியாளர் ம.இராஜாராமன், கல்லூரி அலுவலகக்கண்காணிப்பாளர் ஜி.பாலசுப்பிரமணியம், ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொங்கல் தனிச் சிறப்புக் குறித்து தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இரா.தமிழடியான் சிறப்புரையாற்றினார். தஞ்சை ஜல்லிக்கட்டு பேரவைத் தலைவர் திருமாறன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். பாரம்பரிய முறைப்படி மாணவிகள் சேலை அணிந்து பொங்கலிட்டுக் கொண்டாடினர்.

மாணவிகளின் சிலம்பாட்ட, ஒயிலாட்ட, கரகாட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விளையாட்டுத் துறை மாணவிகளின் பளுதூக்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. பேராசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. ஜல்லிக்கட்டுக்காளையும், உழவுக்குப் பயன்படுத்தப்படும் டிராக்டரும் காட்சிப்படுத்தப்பட்டன. நிகழ்வின் இறுதியில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் பி.கரிகாலன் நன்றி கூறினார்.

## புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மாணவிகளின்கல்விச்சூழலில்மேம்பாட்டினை மனதில் கொண்டு கல்லூரி முதல்வர் அ.ஜான் பீட்டர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 2023-2024ஆம் கல்வியாண்டில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) கையெழுத்திடப்பட்டுள்ளன.

**புவியியல் துறை** 23.08.2023 அன்று புவியியல் துறை குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இயங்கி வரும் Scan Point Media உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

**விலங்கியல் துறை** 03.10.2023 அன்று சென்னை சவீதா பல்நோக்கு மருத்துவமனையுடனும் 05.10.2023 அன்று செருமங்கலம், மன்னார்குடி சாரா மீன் பண்ணையுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

**வணிக நிர்வாகவியல் துறை** 11.09.2023 அன்று திருச்சி M.A.M.B College உடனும் 14.09.2023 அன்று சென்னை ஆஸ்கர் அகாடமியுடனும், 05.04.2024 அன்று தஞ்சை பாரத் கல்வி நிறுவனத்துடனும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

**தமிழ்த்துறை** 06.11.2023 அன்று தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அறிவியல் தமிழ், மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அரிய கையெழுத்து சுவடித்துறை, நாட்டுப் புறவியல் துறை, அயல்நாட்டுக் கல்வித்துறை ஆகிய துறைகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

**வரலாற்றுத் துறை** 06.11.2023 அன்று தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை, சிற்பத் துறை, கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை ஆகிய துறைகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

**வணிகவியல் துறை** 31.01.2024 அன்று தஞ்சாவூர் ட்ரின்ட்டி ஸ்கில் வொர்க்ஸ் பிரைவேட் லிமிடெட் அமைப்புடன் மாணவிகளுக்கு திறன் வேலைவாய்ப்பை மேம்படுத்தும் நோக்கில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

**பொருளியல் துறை** 27.02.2024 அன்று தஞ்சாவூர் Training Partner Synergy the School of Business Skill நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

**யோக மையம்** 30.08.2023 அன்று தஞ்சை மனவளக்கலை மன்றத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

**வேலை வாய்ப்பு வழிகாட்டு மையம்** 21.09.2023 அன்று தஞ்சாவூர் MIND CPR நிறுவனத்துடனும், கேரளா SKILLACT2 அமைப்புடன் 31.01.2024 அன்றும், தஞ்சாவூர் Synergy அமைப்புடன் 05.02.2024 அன்றும், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

## கலைஞர் நூற்றாண்டுவிழா

22.02.2024 அன்று கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் திருவாரூரில், கலைஞர் முதன் முதல் மாணவப் பருவத்தில் தொடங்கிய மொழிப்பணிகள், அவரது இலக்கியப் பணிகள், ஆட்சியில் நிறைவேற்றிய முன்மாதிரியாக அமைந்த சமூக நலத்திட்டங்கள் குறித்து தனது தலைமை உரையில் பேசினார்கள்.

சிறப்புரையாக கரந்தை உமாமகேஸ்வரனார் கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் மு.இளமுருகன் அவர்கள், ‘‘திருக்குவளையின்தித்திக்கும்முத்தமிழ்-கலைஞர்’’ என்ற தலைப்பில் கலைஞருக்கும், தமிழுக்குமான நெடும் பயணம், சட்டமாக்கல், மகளிருக்கான இட ஒதுக்கீடு போன்ற செய்திகளைக் கூறினார்கள். நிகழ்வில் கலைஞர் குறித்து நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

# இளையோர் மாதிரி பாராளுமன்ற கூட்டம்

03.03.2024 அன்று மத்திய அரசின் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அமைச்ச கத்தின் கீழ் இயங்கும் நேரு யுவகேந்திரா சார்பில் மாதிரி நாடாளுமன்ற கூட்டம் நடத்தப்பட்டது. நேரு யுவகேந்திரா துணை இயக்குநர் திரு.நீலகண்டன் வரவேற்றார். முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மாணவிகளுக்குக் குடியரசு தலைவர், பிரதமர், சபாநாயகர், மத்தியமந்திரிகள், எம்.பி.க்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என மாதிரி பதவி வழங்கப்பட்டு, மாதிரி நாடாளுமன்ற கூட்டம் நடந்தது. சபாநாயகர் உரையுடன் நாடாளுமன்ற கூட்டம் தொடங்கியது. பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு சம்மந்தப்பட்ட துறை அமைச்சர்கள் பதில் அளித்தனர்.

பல்வேறு தலைப்புகளின் கீழ் விவாதங்கள் அனைத்தும் நாடாளுமன்றத்தில் நடப்பதுபோல் தத்ரூபமாக மாணவிகள் செய்து காட்டினர். நிகழ்வின் முடிவில் நேரு யுவகேந்திரா கணக்கர் பவுன்ராஜ் நன்றி கூறினார்.

# தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு

30.10.2023 அன்று 31ஆவது ''தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு'' நடைபெற்றது. அறிவியல் மாநாட்டை ஆட்சியர் தீபக் ஜேக்கப் தொடங்கிவைத்தார்கள்.

''ஆரோக்கியம் மற்றும் நல வாழ்வுக்கான சூழலியலை அறிதல்'' என்ற தலைப்பில் நடைபெற்ற மாநாட்டிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமை வகித்தார்கள். தேர்வு நெறியாளர் முனைவர் தெ.மலர்விழி அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். தஞ்சாவூர் முதன்மை கல்வி அலுவலர் மதன்குமார் முன்னிலை வகித்தார்.

மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலிருந்து வந்து கலந்துகொண்ட பள்ளி மாணவ, மாணவிகள் தங்களது அறிவியல் கண்டுபிடிப்பு ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்து செயல்முறை விளக்கமளித்தனர்.

மாவட்ட தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் முனைவர் ராம் மனோகர் நடுவர் குழு ஒருங்கிணைப்பாளராகச் செயல் பட்டார்கள். விழாவை என்.சி.எஸ்.சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜசேகர் ஒருங்கிணைத்தார். மாலையில் நடந்த நிறைவு நிகழ்விற்கு டி.என்.எஸ்.எப். மாவட்ட கௌரவத் தலைவர் கார்த்திகேயன், மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் நாராயணசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் முருகன் வரவேற்றார். என்.சி.எஸ்.சி மாநில ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சுகுமாரன் கருத்துரை வழங்கினார். சிறந்த முறையில் அறிவியல் கண்டுபிடிப்புகளைச் செய்து அசத்திய மாணவ, மாணவிகளுக்கு ஈச்சங்கோட்டையில் அமைந்துள்ள எம்.எஸ். சுவாமிநாதன் வேளாண் கல்லூரி ஆராய்ச்சி நிறுவன முதன்மையர், பேராசிரியர் வேலாயுதம், முதன்மைக் கல்வி அலுவலர் மதன்குமார், மாவட்டக் கருவூல அலுவலர் கணேஷ்குமார் ஆகியோர் பரிசளித்துப் பாராட்டினர்.

மாத்தூர் கிழக்கு ஊராட்சி மன்ற தலைவர் மஞ்சுளா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். டி.என்.எஸ்.எப். மாவட்ட துணைச் செயலாளர் முருகானந்தம் நன்றி கூறினார்.

# பன்னாட்டுக் கருத்தரங்கங்கள்

## தமிழ்த்துறை

10.08.2023 அன்று தமிழ்த்துறையில் ''தமிழ் இலக்கியங்களில் புதிய தேடல்கள்'' என்ற பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையைத் தமிழ்த்துறை தலைவர் முனைவர் சீ.வைஜெயந்தி மாலா அவர்கள் வழங்கினார்கள். தேர்வு நெறியாளர் முனைவர் தெ.மலர்விழி முன்னிலை வகித்தார்.

இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கம் அவர்கள், ''தமிழர் இனக்குழுவும் இசையில் புதிய தேடல்கள்'' என்ற தலைப்பில் உரை நல்கினார்கள். மக்கள் வாழ்வோடு பிணைந்து கிடக்கும் இசைப்பாடல்களில் அவர்களின் வாழ்க்கைக் கூறுகளும், சமூகக் கட்டமைப்பும் எவ்வாறு இருந்தது என்பதை எடுத்துரைப்பவைகளாகவே இசைப்பாடல்கள் இருக்கின்றன என்பதைக் கருத்துரையின் மையமாகக் கொண்டு கருத்துரை வழங்கினார்.

புதுச்சேரி பல்கலைக்கழக மேனாள் இயக்குநர் பேராசிரியர் பக்தவச்சல பாரதி அவர்கள் ''தமிழர் பண்பாட்டு வரைவியலில் புதிய தேடல்கள்'' என்ற தலைப்பில் கருத்துரைத்தார். மானுடர்களின் வாழ்வியல் தடங்கள், பல்வேறு தரவுகளை நமக்கு அளிக்கின்றது. பல்வேறு பயணத்தின் வழியாகவும் தேடலின் வழியாகவும் அறுபடாத தமிழர்தம் பண்பாட்டுக் கூறுகளைக் காணக்கிடக்கும் வாழ்வியல் எச்சங்கள் வழி அறிந்து கொள்ளமுடியும் என்பதான கருத்துக்களை முன்வைத்து சிறப்பானக் கருத்துரையை வழங்கினார்.

நிகழ்வின் நிகழ்ச்சித் தொகுப்பை தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் சீ. சம்பகலட்சுமி அவர்களும், நன்றியுரையைத் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் கோ. தமிழ்ச் செல்வி அவர்களும் வழங்கினார்கள்.

13.12.2023 அன்று தமிழ்த்துறையில் ஒரு நாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமை வகித்தார். கருத்தரங்கக் கருத்தாளர்களாக தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத் தமிழ்ப்பண்டிதர் முனைவர் மணிமாறன், சிங்கப்பூர் செயின்ட் ஆன்ட்ரூஸ் தொடக்கக் கல்லூரி ஆசிரியர் மன்னை க.ராஜகோபாலன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்

'சோழர்கால நீர் மேலாண்மை' என்ற பொருண்மையில் பேசிய முனைவர் மணிமாறன், ''சோழர்காலத்தில் நீர் மேலாண்மை என்பது உலகத்தையே வியக்கவைக்கும் அளவில் இருந்தது. சோழர்காலத்தில் ஏரிகளைப் பாதுகாக்க அதிகாரிகளை நியமித்திருந்தனர். காவிரியின்






போக்கை மாற்றி ஒகேனக்கலில் வழித்திட்டத்தை உருவாக்கி டெல்டாவை வளம் பெறச் செய்தவர்கள் முற்காலச் சோழர்கள். தஞ்சாவூர் ஆழிவாய்க்கால் தொடங்கி மதுரை வரை பலநூறு ஏரிகள் இருந்தன. அவை எல்லாம் இன்று காணாமல் போயின. தஞ்சாவூரில் மட்டும் 50க்கும் மேற்பட்ட நீர் ஆதாரங்கள் இருந்தன. அவைகள் இன்று இல்லை, தஞ்சாவூர் பெரிய கோயில் அமைப்பு மழை நீரைச் சிறப்பாக வெளியேற்றும் தன்மையில் அமையப் பெற்றுள்ளது'' என்று நீர் மேலாண்மை பற்றி எடுத்துரைத்தார்.

மன்னை ராஜகோபாலன் அவர்கள், இலக்கியத்தில் வாழ்வியல் நெறி என்கிற தலைப்பில் பேசும் போது, ''மாணவிகள் தன்பலன் அறிந்தவர்களாக முடிவுகளை எடுப்பதில் வல்லவர்களாக, துணிவுடையவர்களாக வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும்'' என்று கருத்துரை வழங்கினார். நிகழ்வில் தமிழ்ப்பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறைத்தலைவர் முனைவர் இரா.காமராசு மற்றும் பேராசிரியர்கள் மாணவிகள் பங்கேற்றனர்.

தேர்வு நெறியாளர் முனைவர் தெ.மலர்விழி முன்னிலை வகித்தார், தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சீ.வைஜெயந்திமாலா வரவேற்றார். முனைவர் ரெ.ஹேமலதா நன்றி கூறினார்.

## வரலாற்றுத்துறை

21.07.2023 அன்று முதுகலை வரலாறு மற்றும் ஆராய்ச்சித்துறை சார்பாகப் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது.

முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமையுரையாற்றினார். வரலாற்றுத்துறைத் தலைவர் முனைவர் அ. கார்குழலி வரவேற்புரை வழங்கினார். அமெரிக்காவின் தென் கரோலினா மாகாணத்தில் அமைந்துள்ள கிளாப்பின் பல்கலைக்கழகச் சமூகவியல் பேராசிரியர் சாலமன் செல்வம் 'பாலினமின்மையின் சமத்துவ தொடக்கமும் அதன் சமூகத் தாக்கமும் ஒரு வரலாற்று அணுகுமுறை' என்ற தலைப்பில் ஆய்வுரை வழங்கினார்.

பூண்டி புஷ்பம் கல்லூரி வரலாற்றுத்துறை இணைப்பேராசிரியர் ரவிச்சந்திரன், மன்னர் சரபோஜி கல்லூரி வரலாற்றுத்துறை இணைப் பேராசிரியர் ரெ.கோவிந்தராஜ், திருச்சி தந்தை பெரியார் அரசு கலை அறிவியல் கல்லூரி வரலாற்றுத்துறை இணைப்பேராசிரியர் சீதாலட்சுமி ஆகியோர் கருத்துரை வழங்கினார். தேர்வு நெறியாளர் முனைவர் தெ. மலர்விழி புவியியல் துறைத்தலைவர் க.பானுகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். கருத்தரங்க நோக்க உரையை முனைவர் கோ.பூங்கொடி அவர்களும், நிகழ்ச்சித் தொகுப்பை முனைவர் ஆ.மீனாட்சி அவர்களும், வழங்கினார். பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த மாணவிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர். அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப் பட்டது.

05.03.2024 அன்று வரலாற்றுத் துறை, வரலாற்றுப் பாதுகாப்பு இயக்கம் சார்பில் ''சிந்து முதல் பொருநை வரை'' என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. முதல்வர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமை வகித்தார்கள். வரலாற்றுப் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர்






அ. ராமகிருஷ்ணன் வாழ்த்திப் பேசினார்கள். இந்திய தொல்லியல் துறை கண்காணிப்பாளர் இ. அமர்நாத் இராமகிருஷ்ணன் கலந்துகொண்டு கருத்துரை வழங்கியதோடு, கருத்தரங்கிற்குப் பிற்பாடு செய்தியாளர்களிடம், ''டெல்டா மாவட்டங்களில் அகழ்வாராய்ச்சி செய்யப்படுகிறது அதே நேரம், இன்னும் முழுமையாக ஆராய்ச்சிசெய்யப்பட வேண்டும்'' என்று கூறினார்கள்.

மேலும், ''டெல்டா மாவட்டங்களில் தொல்லியல் எச்சங்களைக் கண்டறிவதில் மிகுந்த சிரமம் உள்ளது. நெற்களஞ்சியமாகத் திகழும் இப்பகுதியில் சிறந்த நாகரிகம் தோன்றியதற்கான ஆதாரங்கள் இன்னும் முழுமையான ஆய்வுகள் மேற்கொள்வதன் மூலம்தான் கிடைக்கும்; இதற்காக தமிழக அரசு சிறந்த முயற்சியை மேற்கொண்டு வருகிறது'' என்றார்.

''கீழடி என்பது மிகப் பெரிய தொல்லியல் மேடு, இதை இன்னும் தோண்டுவதன் மூலம் முழுமையான வரலாறு கிடைக்கும். பாடத்திட்டங்களில் கற்றுக் கொள்வதன் மூலம்தான் மாணவிகளுக்குத் தொல்லியல் மீதான ஆர்வம் ஏற்படும்'' என்றும் கூறினார். நிகழ்வின் வரவேற்புரையை வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் அ.கார்குழலி அவர்களும் நன்றியுரையை பேராசிரியர் முனைவர் சு.சாந்தி அவர்களும் வழங்கினர்.

## புள்ளியியல் துறை

28.12.2023- 29.12.2023 ஆகிய இரண்டு நாட்கள் புள்ளியியல் துறையில், 'சமூக அறிவியல் கல்வி மற்றும் ஆய்வுகளுக்குக் கணிதம் புள்ளியியல் கணக்கீடுகள்' என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்கில் நான்கு நாடுகள் மற்றும் 16 மாநிலங்களிலிருந்து பேராளர்கள் கலந்து கொண்டனர். 16 அமர்வுகளில் பேராளர்கள் கட்டுரை வழங்கினர்.

கம்பாள பண்பாட்டுப் பல்கலைக்கழகம், உகண்டாவிலிருந்து அனுமோலு கோபராஜு அவர்களும், வி.ஐ.டி, போபால் பல்கலைக் கழகத்திலிருந்து திரு.மாணிக்கம் அவர்களும், டெல்லி கிறிஸ்ட் பல்கலைக்கழகத்திலிருந்து ஸ்டீபன்ராஜ் அவர்களும், பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்திலிருந்து திரு.ஆறுமுகம்




அவர்களும், தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் விஜயலெட்சுமி அவர்களும், சென்னை கிறிஸ்துவக் கல்லூரியிலிருந்து பேராசிரியர் சலோமி அவர்களும், திருச்சி ஈ.வெ.ரா பெரியார் கல்லூரியிலிருந்து பேராசிரியர் அலெக்ஸ் செல்வராஜ் அவர்களும், பெங்களூரு செயின்ட் பிரான்சிஸ் கல்லூரி பேராசிரியர் ஐயப்பன் அவர்களும் பங்கேற்றுக் கருத்துரை வழங்கினர்.

## கணிதத்துறை

01.03.2024 அன்று கணிதத் துறையில் ஒரு நாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. 'Recent Trends in Mathematical Science and Technology (RTMST-2024') என்ற பொருண்மையில் நடைபெற்ற நிகழ்வில் முனைவர் முகமது ஜாவட் இன்ரிசி, மிசான் டேபி பல்கலைக்கழகம் எத்தியோப்பியா, முனைவர் தோத்திரி வேணுகோபால், சத்திய சாய் பல்கலைக்ககழகம், கர்நாடகம், முனைவர் வி.ரேணுகாதேவி மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர் மற்றும் முனைவர் மருதை, பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.



# விழிப்புணர்வுக் கருத்தரங்கம் / பயிற்சிப் பட்டறை

## இளம் வயது திருமணங்கள்/கருத்தரித்தல் தடுப்பு விழிப்புணர்வு

மகளிர் ஆயம் முன்னெடுப்பில் 22.09.2023 அன்று மகளிர் மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறை, மற்றும் மாவட்ட குடும்ப நலச்செயலகத்தால் இளம் வயது திருமணங்கள் மற்றும் இளம் வயது கருத்தரித்தல் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடத்தப்பெற்றது. இந்நிகழ்வுக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்கள் தலைமை தாங்கினார்கள். மருத்துவக் கல்லூரி முதல்வர் பாலாஜிநாதன் முன்னிலை வகித்தார்.

கருத்தாளர்களாக மகப்பேறுத்துறைத் தலைவர் மருத்துவர் ராஜராஜேஸ்வரி, மகப்பேறு இணைப்பேராசிரியர் மருத்துவர் உதயா அருணா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் பிலாமினோ சாந்தினி, ஒருங்கிணைந்த சேவை மைய குழந்தைகள் வளர்ச்சி அலுவலர் பிரபா, கோடீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு இளம்வயது திருமணங்கள் ஏற்படுத்தும் சிக்கலையும், அதனால் வரும் கருத்தரித்தலால் உடலுக்கு ஏற்படும் பின் விளைவுகளையும் பின்பற்றப்படவேண்டிய பாதுகாப்பு முறைகள் பற்றியும் புள்ளி விவரங்களுடன் தெரிவித்தனர்.

மருத்துவக் கல்லூரி முதல்வர் மாணவியரோடு உரையாடலாகக் கேள்வி பதில் நிகழ்வில் பாதுகாப்பு மையங்களின் துணையையும் பெண்களின் விழிப்புணர்வையும், குருதி பற்றாக்குறையால் ஏற்படும் உபாதைகளையும் அரசு செயல்பாடுகள் பற்றியும் அறிவுறுத்தினார். முடிவில் பேராசிரியர் முனைவர் ம. கண்ணம்மாள் நன்றி கூறினர்.

## மருத்துவ ஆராய்ச்சி குறித்த கருத்தரங்கம்

03.10.2023 அன்று முதல் 07.10.2023 வரை தாவரவியல் மற்றும் விலங்கியல் துறை மாணவிகளுக்கு மருத்துவ ஆராய்ச்சி மருந்து கண்டுபிடிப்பு, அதனை பயன்படுத்தும் முறை, மேற்கொள்ளப்பட வேண்டிய பரிசோதனைகள், அதில் உள்ள சமூக கலாச்சார மனோவியல் பிரச்சனைகள் குறித்த 5 நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. தொடக்க நிகழ்வில் முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமை வகித்தார்கள். வணிகவியல் துறைப் பேராசிரியரும் ‘நான் முதல்வன்’ திட்ட ஒருங்கிணைப்பாளருமான முனைவர் ஜெ.ஜெயக்குமாரி அவர்கள் நோக்க உரை நிகழ்த்தினார்கள் வரவேற்புரையை தாவரவியல் துறைப் பேராசிரியர் முனைவர் கு.சுபஸ்ரீ வழங்கினார்கள். விலங்கியல் துறை பேராசிரியர் முனைவர் வெ. சுகுமாரன் நன்றி கூறினார்கள். நிகழ்வில் அனைத்துத் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.

## புதிய தொழில் நுட்பம்-ஆராய்ச்சி கருத்தரங்கம்

19.12.2023 அன்று இயற்பியல் துறையில் புதிய தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் தொடர்பாக சிறப்பு கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் தஞ்சாவூர் தனியார் கல்வி மற்றும் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநர் ஸ்ரீநாத் சிறப்புரையாற்றினார். நிகழ்காலத்தில் தொழில்நுட்பம் மற்றும் மாணவிகள் மேற்கொள்ள வேண்டிய ஆய்வு ஆராய்ச்சி வழிமுறைகளை விரிவாக விளக்கினார். மாணவிகள் முனைவர் பட்ட ஆய்வுகளுக்கான நடைமுறைகள் மற்றும் வழிமுறைகளை விரிவாக எடுத்துரைத்தார் இந்நிகழ்வில் முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமையுரை வழங்கினார். இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் கோ.அனுராதா முன்னிலை வகித்தார். பேராசிரியர் கு.நித்தியாதேவி வரவேற்புரையாற்றினார். மாணவி எல். ஸ்மைலின் ரோஜா நன்றி கூறினார்.

## போதைத் தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்

07.01.2024 அன்று போதைப்பொருள் தடுப்புக்குழுவின் சார்பில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு கல்லூரி முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்கள் தலைமை தாங்கினார்.

போதைப்பொருள் தடுப்புக் குழு பொறுப்பாளரும், தேர்வு நெறியாளருமான முனைவர் தெ. மலர்விழி அவர்கள் வரவேற்புரை நல்கினார்கள். நிகழ்வில் தஞ்சை மருத்துவக்கல்லூரி முதல்வரும், மருத்துவக்கல்வி இயக்கத்தின் சிறப்பு அலுவலருமான பாலாஜிநாதன் சிறப்புரை ஆற்றினார்கள். போதைப்பழக்கம் ஏற்படும் விதம், போதையால் சீர்கெடும் ஆரோக்கியம், குடும்ப சமூக தொடர் விளைவுகள், போதை மறுவாழ்வு பணிகள் குறித்து விளக்கி மாணவிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார்.

தொடர்ந்து தஞ்சை மருத்துவக் கல்லூரி தலைவர் மருத்துவர் மீனாட்சி, மனநல மருத்துவத்துறை இணைப்பேராசிரியர் மருத்துவர் விஜயலட்சுமி ஆகியோர் போதைப் பழக்கத்திற்குக் காரணமாகச் சொல்லப்படும் மன அழுத்தம், மூட நம்பிக்கைகள், விருந்துகள், விழாக்களில் ஏற்படும் மதுப்பழக்கம் குறித்து மாணவிகளுடன் கலந்துரையாடினார்.

நிகழ்வில் மருத்துவ கண்காணிப்பாளர் ராமசாமி, மருத்துவக் கல்லூரி தர மேலாளர் சுபதர்ஷினி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். நிகழ்வைக் கணிதத்துறைத் தலைவர் முனைவர் வினோபா தொகுத்து வழங்கினார்கள். போதைத்தடுப்புக்குழு உறுப்பினரும் தாவரவியல் துறைத் தலைவருமான முனைவர் கோ. சாந்தி நன்றி கூறினார்கள்.

## பொருளியல் துறை தேசிய கருத்தரங்கம்

08.01.2024 அன்று பொருளியல் துறையில் ஒரு நாள் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்வில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகப் பதிவாளர் முனைவர் ஜே.சாக்ரடீஸ் அவர்கள் கலந்து கொண்டு ‘புதிய சூழல் மற்றும் பருவ நிலைகள்’ குறித்துச் சிறப்புரையாற்றினார்கள். சென்னைப் பல்கலைக்கழகப் பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் சி.சின்னம்மை அவர்கள், 2023ஆம் ஆண்டிற்கான பொருளாதாரத்தில் நோபல் பரிசு பெற்ற கிளாடியா கோப்ட் குறித்து விரிவான உரை நல்கினார். உரை மாணவிகளுக்குப் பயனுடையதாய் அமைந்தது.

## தஞ்சை பெரிய கோவில் சிற்பங்கள்

10.01.2024 அன்று மரபு மற்றும் பண்பாட்டு மையம் மூலம் தமிழ்த்துறையும் வரலாற்றுத்துறையும் இணைந்து ‘சோழர்காலக் கலை மற்றும் கட்டடக் கலை’ குறித்த கருத்தரங்கை நடத்தியது. நிகழ்வில் தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலய சதய விழாக்குழு உறுப்பினர் கு.ராமநாதன் அவர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

## பெண்களுக்கு எதிரான வன்முறை எதிர்ப்பு

02.03.2024 அன்று வரலாற்றுத்துறையும் பெரியார் மணியம்மை பல்கலைக்கழக சமூகப்பணித்துறையும் இணைந்து 'Elimination of Violence Against Women' என்ற பொருண்மையில் ஒரு நாள் கருத்தரங்கை நடத்தியது. இதில் சமூகப் பணித்துறையை சார்ந்த பேராசிரியர் ஆனந்த ஜெரார்டு சபாப்தின் அவர்கள் உரை நல்கினார்.

## காட்டுயிர் பாதுகாப்பு

04.03.2024 அன்று டிஜிட்டல் தொழில் நுட்பத்தைக் கொண்டு காட்டுயிர்களைப் பாதுகாப்பது குறித்து கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கை சுற்றுச்சூழல் கல்விக்கழகம் மற்றும் அறிவியல் கழகம் இணைந்து நடத்தியது. கருத்தரங்கில் 200க்கும் மேற்பட்ட கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், மாணவிகள் பங்கேற்றனர். முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமை வகித்தார். பான் செக்கர்ஸ் கல்லூரித் துணை முதல்வர் கலைவாணி உயிரினப் பாதுகாப்பில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்கிக் கூறினார்கள். தஞ்சை மாநகராட்சி அலுவலர் மருத்துவர் சு.வெங்கடேஷ் நலவாழ்விற்கு நேரிடும் சுற்றுச் சூழல் சவால்கள் குறித்தும் பெண்களுக்கான நலவாழ்வு வழிகாட்டுதல்கள் குறித்தும் கருத்துரை வழங்கினார்.

விலங்கியல் துறை பேராசிரியரும், அறிவியல் கழக ஒருங்கிணைப்பாளருமான முனைவர் வெ.சுகுமாரன் அவர்கள் உலகக் காட்டுயிர் தினத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். நிகழ்விற்கு வரவேற்புரையை ஆங்கிலத்துறைப் பேராசிரியரும் சுற்றுச்சூழல்

மன்ற ஒருங்கிணைப்பாளருமான முனைவர் ச.ச.நிர்மலா அவர்களும், நன்றியுரையை மாணவி கனிமொழியும் வழங்கினார்.

## வணிக நிர்வாகவியல் துறை கருத்தரங்கம்

04.03.2024, 05.3.2024 ஆகிய இரண்டு நாட்கள் வணிக நிர்வாகவியல் துறையின் சார்பில் நிலையான விவசாய தொழில் முனைவோருக்குக் கல்லூரி மாணவிகளை மேம்படுத்துதல் என்ற பொருண்மையில் ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவன நிதி நல்கையுடன் கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்கில் முனைவர் ஏ.கோபிநாத் வணிக நிர்வாகவியல் துறை, திரு.அ. கோவிந்த சாமி அரசு கல்லூரி, திண்டிவனம், முனைவர் ஆர். ரஜினிகாந்த், வணிக நிர்வாகவியல் துறை, அரசு கலைக்கல்லூரி (த) கும்பகோணம், முனைவர் கு.க.கு.அருள்தாஸ், தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் பேராசிரியர், ஞானம் வணிகப் பள்ளி, தஞ்சாவூர் முனைவர் வி.சுமதி, வணிக நிர்வாகவியல் துறை, திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரி, விருத்தாசலம், முனைவர் கு. சுப்புலட்சுமி, வணிக நிர்வாகவியல், MDPT எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி காட்டுமன்னார் கோயில், முனைவர் ஆர். ராமன் இயக்குநர், இயற்கை வேளாண்மை மற்றும் நிலையான வேளாண்மை மையம் விவசாய பீடம், அண்ணாமலை பல்கலைக்கழகம் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

## டெங்கு விழிப்புணர்வு

04.03.2024 அன்று விலங்கியல் துறையும் இளையோர் செஞ்சிலுவை சங்கமும் (YRC) இணைந்து 'டெங்கு விழிப்புணர்வு' கருத்தரங்கத்தினை நடத்தியது தஞ்சாவூர் மாநகர உடல்நல மருத்துவர் வி.பி.சுபாஷ் காந்தி, மருத்துவர் தையல்நாயகி ஆகியோர் கலந்துகொண்டு டெங்கு காய்ச்சல் பரவுதல் விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் பற்றி கருத்துரைத்தனர்.

## புவியியல் துறைப் பயிற்சிப் பட்டறை

15.02.2024 புவியியல் துறையில் ஒரு நாள் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. பொறியாளர் சி.பாலகிருஷ்ணன், செயல் அதிகாரி, சி.எல். எண்டர்பிரைசஸ், சென்னை அவர்கள் கலந்துகொண்டு 'Total Station' என்ற தலைப்பில் செயல் விளக்கமளித்தார்கள். பல்வேறு கல்வி நிறுவனங்களிலிருந்து மாணவ மாணவியர் பங்கு பெற்றுப் பயனடைந்தனர்.

## பெண்மொழி படைப்புத்திறன் பயிலரங்கம்

12.09.2023 அன்று மாணவியர் குறைதீர் மன்றம் மற்றும் பகடிவதை தடுப்புக் குழு சார்பில் பெண்மொழி படைப்புத்திறன் பயிலரங்கம் நடைபெற்றது. முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் தலைமை வகித்தார்.

எழுத்தாளர் சசி எம். குமார் ''மாணவிகளாகிய நீங்கள் உணர்வதை எதிர்நோக்குவதை அப்படியே எழுதுவது சமூகத்திற்குப் பயனுடையதாய் இருக்கும். உங்கள் உணர்வுகள், வலிகள், அனுபவங்கள், படைப்புகளாக உருவாகும்போது பெண் எழுத்து என்பது உண்மையானதாகவும், நம்பகத்தன்மை உடையதாகவும் இருக்கும். பெண் உணர்வுகளை, வலிகளை பெண் எழுதுவதுதான் பெண்மொழி. ஆதலால் எழுதுவதில் ஆர்வமுள்ளவர்கள் சிறந்த பெண் படைப்பாளர்களாக வரவேண்டும்'' எனப் பேசினார். கவிஞர் ஜெயந்தி ''நாட்டுப்புற இலக்கியங்கள் குறிப்பாக தாலாட்டு, ஒப்பாரி பாடல்கள் பெண் உணர்வுகளை அப்படியே பிரதிபலிப்பவை அவைதாம் இன்று அன்றைய சமூகத்தின் அடிநாதங்களை அறிய உதவியாக இருக்கின்றன. அவற்றைபோல் நீங்களும் படைப்பாளர்களாக உருவாக வேண்டும்'' என்று பேசினார். குறும்பட இயக்குநர் செந்தில்ராம் கதையைக் குறும்படமாக்குவது குறித்துப் பேசினார்.

மாணவி யோகப்பிரியா நிகழ்ச்சியைக் தொகுத்து வழங்கினார். ''மாணவியர் குறைதீர் மன்ற'' உறுப்பினர்களாகிய விலங்கியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் பெ.தங்கமதி, பொருளியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் அ.மெகருனிசா பேகம், ஒருங்கிணைப்பாளர் முனைவர் பு.இந்திராகாந்தி, இணை ஒருங்கிணைப்பாளர் திருமதி செள.சுஜித்ரா ஆகியோர் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

# தினங்களும் கொண்டாட்டங்களும்

## புள்ளியியல் தினம்

30.06.2023 அன்று புள்ளியியல் துறையில் புள்ளியியல் தினத்தை முன்னிட்டு அரசு வேலைவாய்ப்புகள் பற்றிய விழா கொண்டாடப்பட்டது. விழாவில் புள்ளியியல் துறை இயக்குநர் திரு. எஸ்.செல்வம் அவர்கள் கலந்துகொண்டு 'புள்ளியியல் துறையின் பல்வேறு அரசு வேலை வாய்ப்புகள்' என்ற பொருண்மையில் விரிவான விழிப்புணர்வு உரையை நல்கினார்கள்.

## பார்வைத் திறன் இல்லா மாற்றுத்திறன் மாணவிகளுக்கு நல உதவி

26.06.2023 நம் கல்லூரியில் பயின்றுவரும் பார்வை திறன் இல்லாத மாணவிகளுக்கு 'Help the Blind Foundation', சென்னை என்ற அமைப்பு 2017ஆம் ஆண்டு முதல் கல்வி உதவித் தொகை வழங்கி வருகிறது. இம் மாணவிகளின் திறனை மேம்படுத்தும் வகையில் 14.12.2022 அன்று Help the Blind Foundation உடன் நமது கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம் இரண்டு ஆண்டுகளுக்கு செய்யப்பட்டு அம் மாணவிகளுக்கு Education Mobilitity and Employablity Training மற்றும் கணினி பயிற்சி வகுப்புகள் (Online & Offline Classes) நடத்தப்பட்டு வருகின்றன. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் நம் மாணவிகள் 7 பேருக்கு மடிக்கணினியும், Smart Vision glass ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. இம்மாணவிகளுக்குக் கல்வி உதவித்தொகை பெறுவதற்கும், EMET பயிற்சி வகுப்பில் மாணவிகளைப் பங்கேற்க வைத்தல் ஆகிய பொறுப்பினை 2017 முதல் பொருளியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் தெ.மலர்விழி செய்து வருகிறார்.

## உலக மக்கள் தொகை நாள்

11.07.2023 அன்று உலக மக்கள் தொகை நாள் (World Population Day) புள்ளியியல் துறையின் சார்பில் கொண்டாடப்பட்டது. நிகழ்வில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்களும், நிதியாளர் ம.இராஜாராமன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## சுதந்திர தின விழா

04.08.2023 அன்று எம் ஸ்கிரீன் ஸ்டூடியோ மற்றும் மானஸா அகாடமி இணைந்து 77ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு 77 எண் வடிவமைப்பு சாதனை விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி கலாம் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்து சாதனைப் படைத்துள்ளது. இந்நிகழ்ச்சி முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமையில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் பேராசிரியர் கீதா அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் திரைப்பட இயக்குநர் ராசி.மணிவாசகன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், சிவசக்திவேல், சுந்தரேசன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகவும் கலந்து கொண்டனர்.

மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். விழாவினை மானஸா அகாடமி நிறுவனர் தனலட்சுமி ஸ்ரீதர், ராணிசர்மிளா, தசரண்தீனா ஆகியோர் ஒருங்கிணைத்திருந்தனர்.

## உலக வனவிலங்கு தினம்

13.10.2023 அன்று உலக வனவிலங்கு தினத்தை முன்னிட்டு நம் கல்லூரி மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

தஞ்சாவூர் சிவகங்கை பூங்கா நுழைவாயிலில் புறப்பட்ட பேரணியை மாவட்ட வன அலுவலர் அகில் தம்பி கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். பழைய ஆட்சியர் அலுவலகம் வழியாகச் சென்ற பேரணி, அரசு அருங்காட்சியகத்தில் நிறைவடைந்தது. பேரணியின் முன் மாணவிகள் சிலம்பம் சுற்றியபடி சென்றனர். நிகழ்விற்கு முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமை வகித்தார்கள். தேர்வு நெறியாளர் முனைவர் தெ.மலர்விழி முன்னிலை வகித்தார். பேரணி முடிவில் மாணவி ஸ்ரீதர்ஷினி நிறைவுறையாற்றினார்.

வனம், வான்மழை, மண், கடல், காற்று, மழை காப்போம், புவியின் உயிர்காப்போம் என்ற முழக்கத்துடன் நடைபெற்ற இந்தப் பேரணியில் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட நிர்வாகி லெ.முருகள், ராஜசேகர், முனைவர் சு.மணிவண்ணன், முனைவர் அ.ர.நாசர், முனைவர் வாசுகி மற்றும் மாணவிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## உலக வனவிலங்கு பாதுகாப்பு வார விழா

19.10.2023 அன்று விலங்கியல் துறையில் ‘உலக வனவிலங்கு பாதுகாப்பு வார’ விழா நடைபெற்றது. நிகழ்வில் பேராசிரியர் முனைவர் அ.வேலாயுதம், கு. சுவாமிநாதன் அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஈச்சங்கோட்டை அவர்கள் பங்கேற்று சிறப்பித்தார்கள்.

## மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா

11.12.2023 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் நம் கல்லூரியும் இணைந்து மகாகவி பாரதியாரின் பிறந்தநாள் விழாவைப் ‘பாரத மொழிகளின் திருவிழா 2023’ என்ற பொருண்மையில் கொண்டாடியது. அது சமயம் மாணவிகளுக்கான தனித்திறன் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் முனைவர் இரா.காமராசு, தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறைத் தலைவர் அவர்கள் ‘வையத் தலைமை கொள்’ என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள்.

## சிறுதானிய உணவுத் திருவிழா

21.12.2024 அன்று தாவரவியல் துறையில் சிறுதானிய உணவுத்திருவிழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமை வகித்தார். தேர்வு நெறியாளர் முனைவர் தெ.மலர்விழி, கணினித் துறை இணைப்பேராசிரியர் வே.வினோபா, தாவரவியல் துறை இணைப் பேராசிரியர் வி.லதா ஆகியோர் கருத்துரை வழங்கினர். அனைத்துத்துறை மாணவிகள் கண்காட்சியில் இடம்பெற்றிருந்த சாமை பொங்கல், வரகு சர்க்கரைப் பொங்கல், வரகு இட்லி, சோளச் சுண்டல், கம்பு புட்டு, ராகி புட்டு, திணைப் புட்டு, குதிரைவாழி, பாயசம், வரகுகஞ்சி, சோள உப்புமா, ராகி சேமியா, ராகி கொலுக்கட்டை, ரொட்டி, கூழ், களி, கஞ்சி உள்ளிட்ட பல்வேறு வகை சிறுதானிய உணவு வகைகளைப்பார்த்து அதன் செய்முறைகளைக் கேட்டறிந்தனர்.

நிகழ்வில் தாவரவியல் துறைத்தலைவர் முனைவர் கோ. சாந்தி வரவேற்புரை வழங்கினார். நன்றியுரையை முனைவர் நா. கார்த்திகா கூறினார். விழா ஏற்பாடுகளை முனைவர் இரா. சகாயகிரி, முனைவர் கு. சுபஸ்ரீ, முனைவர் மு. பூமிநாதன் ஆகியோர் செய்திருந்தனர்.

## இராமானுஜம் பிறந்த நாள் விழா

22.12.2023 அன்று கணித மேதை இராமானுஜன் அவர்களின் 136 ஆவது பிறந்த நாளைச் சிறப்பிக்கும் வகையில் கணினித் துறையின் ஏற்பாட்டில் ‘கணிதக் கண்காட்சி’ ஏற்பாடு செய்யப்பட்டு மிகச்சிறப்பாக நடைபெற்றது. மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

நிகழ்வில் முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்கள் தலைமை வகித்து கண்காட்சி யைத் தொடங்கிவைத்தார். சிறப்பு விருந்தினராகக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் கோ.நிர்மலா கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார்கள். கல்லூரி கணிதத் துறைத் தலைவர் முனைவர் வினோபா அவர்கள் வரவேற்றார்கள். தேர்வு நெறியாளர் தெ. மலர்விழி, புவியியல் துறைத் தலைவர் முனைவர் பானுகுமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். நிகழ்ச்சியை முனைவர் இரா.புனிதவதி தொகுத்து வழங்கினார்கள். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கணிதத்துறைப் பேராசிரியர்களான முனைவர் ம.அனுசியா, முனைவர் த.கீதா, முனைவர் தெ.கோமதி, முனைவர் சௌ.கவிதா ஆகியோர் செய்திருந்தனர். துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## புற்றுநோய் விழிப்புணர்வு

02.02.2024 அன்றுநாட்டுநலப்பணித்திட்டம் மற்றும் டாக்டர் சிவந்தி ஆதித்தனார் நற்பணி

மன்றம் ஆகியவற்றின் சார்பில் புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் தலைமை வகித்தார். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்களான முனைவர் கீதா, முனைவர் சுபா, திருமதி ஜடாரோஸ் ஆகியோர் முன்னிலை வகித்தார்.

நிகழ்வில் இந்திய அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்க மாநிலத்தலைவர் இளங்கோவன், மாநிலச் செயலாளரும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி புற்றுநோய் சிகிச்சை பிரிவின் தலைவருமான எஸ். மாரிமுத்து தனியார் மருத்துவமனை நிர்வாக இயக்குநர் சங்கீதா ஆகியோர் புற்று நோய் குறித்த விழிப்புணர்வு உரையாற்றினர். நிகழ்ச்சியை மாணவி ஜெயப்பிரியா தொகுத்து வழங்கினார்.

### சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி

05.02.2024 அன்று தமிழ்நாடு அரசு நெடுஞ் சாலைத் துறை கட்டுமான மற்றும் பராமரிப்புத் துறை சார்பில் தேசிய சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

பேரணியை மாவட்ட ஆட்சியர் தீபக் ஜேக்கப் அவர்கள் கொடியசைத்து தொடங்கிவைத்தார்கள். நம் மாணவிகள் கலந்துகொண்டு ஹெல்மெட் அணிந்து இருசக்கர வாகனம் ஓட்ட வேண்டும், சீட்பெல்ட் அணிந்து கார் ஓட்ட வேண்டும், தூக்கத்தில் வாகனங்கள் இயக்கக் கூடாது, இருசக்கர வாகனத்தில் இருவர் மட்டுமே செல்ல வேண்டும், ஓடும் பேருந்தில் ஏறக்கூடாது என்பது உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வுகளை ஏந்தி பேரணியாகச் சென்றனர்.

பேரணி ராமநாதன் மருத்துவவமனை வரை சென்று மீண்டும் திரும்பி கல்லூரி வளாகத்தை வந்தடைந்தது. நிகழ்ச்சியில் தஞ்சாவூர் நெடுஞ் சாலைத்துறை கட்டுமான மற்றும் பாதுகாப்புத் துறை கோட்டப் பொறியாளர் திரு. செந்தில்குமார், திருச்சி நெடுஞ்சாலைத் துறை சாலைப் பாதுகாப்பு அலகு கோட்டப் பொறியாளர் புவனேஸ்வரி, உதவி கோட்டப் பொறியாளர் பிரமிளா, தஞ்சை உதவி கோட்டப் பொறியாளர் கீதா, திருச்சி நெடுஞ் சாலைத்துறை சாலை பாதுகாப்பு அலகு உதவிப் பொறியாளர் கணேசன், திருவிடைமருதூர் நெடுஞ் சாலைத்துறை கட்டுமான மற்றும் பராமரிப்புத்துறை உதவிக்கோட்டப் பொறியாளர் பிலிப்பிரபாகர், திருவையாறு உதவிக்கோட்டப் பொறியாளர் ராம்பிரபு, பாபநாசம் இளநிலை பொறியாளர் ரவி, நம் கல்லூரி முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இவர்களுடன் பேராசிரியர்கள் முனைவர் வெ.சுகுமாரன், முனைவர் பி. சரபோஜி உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

### வாக்காளர் விழிப்புணர்வு

08.02.2024 அன்று நாடாளுமன்ற தேர்தலில் அனைவரும் கட்டாயம் வாக்களிக்கவும். 100 சதவீத வாக்களிப்பின் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு பல்வேறு வகைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தஞ்சாவூர் ஜோதி அறக்கட்டளை சார்பில் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர் மூலம் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பெற்றது. அதன் ஒரு பகுதியாக கல்லூரியில் ''வாக்களிப்பது நமது கடமை, அதுவே என் உரிமை'' என்ற தலைப்பில் வாக்காளர் விழிப்புணர்வு வண்ண கோலப்போட்டி நடைபெற்றது.

பொதுமக்கள் எவ்வித அச்சமும் இன்றி சுய முடிவுடன் வாக்களிப்பது மற்றும் 100 சதவீத வாக்களிப்பின் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற மாபெரும் கோலப்போட்டியில் 200க்கும் மேற்பட்ட மாணவிகள் பங்கேற்று வாக்களிப்பின் அவசியம் குறித்த வாசகங்கள் அடங்கிய விதவிதமான வண்ணக்கோலங்களை இட்டனர்.

'நாட்டுக்காக போடு ஓட்டு அதற்கு வாங்காதே நோட்டு'

'வலுவான ஜனநாயகத்துக்கு விறுவிறுப்பாக வாக்கை அளிப்போம்'

'நல்வாக்கை நல்லவருக்கே அளிப்போம்'

'என் வாக்கு என் குரல்'

போன்ற பல்வேறு வாசகங்களுடன் கோலங்கள் மாணவிகளால் இடப்பட்டது குறிப்பாக முதல் முறை

வாக்களிக்கப் போகும் மாணவிகளின் பங்களிப்பு கவனம் பெறுவதாய் அமைந்தது.

கல்லூரி முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் கீதா மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு கோலங்களைப் பார்வையிட்டு மாணவிகளை ஊக்குவித்தனர்.

போட்டியில் கோலங்களை வரைந்த மாணவிகள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ1000 மதிப்பிலான புடவைகள் பரிசாக வழங்கப்பட்டன. நிகழ்ச்சி ஏற்பாட்டை ஜோதி அறக்கட்டளை செயலாளர் பிரபு ராஜ்குமார் மேற்பார்வையில் மேலாளர் ஞானசுந்தரி உள்ளிட்ட பணியாளர்கள் செய்திருந்தனர்.

### தேசிய அறிவியல் நாள்

28.02.2024 அன்று இயற்பியல் துறையில் தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் அ.ஜான் பீட்டர் அவர்கள் தலைமையில் இயற்பியல் துறைத் தலைவர் கோ.அனுராதா அவர்கள் சர்.சி.வி.ராமன் கண்டுபிடிப்புகள் பற்றி உரை நல்கினார்.

### வாக்காளர் விழிப்புணர்வு பொம்மலாட்டம்

22.03.2024 அன்று தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் பேரில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி கல்லூரி யாழ் கலையரங்கில் பொம்மலாட்ட விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்வை மாவட்ட ஆட்சியர் தீபக் ஜேக்கப் தொடங்கிவைத்தார்கள். நிகழ்வில் கல்லூரி முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் மற்றும் பேராசிரியர்கள் அரசு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். 500க்கும் மேற்பட்ட மாணவிகள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

### உலக ஈரநில நாள்

09.02.2024 அன்று உலக ஈரநில தினத்தை முன்னிட்டு கல்லூரியின் அறிவியல் கழகம் மற்றும் வனத்துறையின் சார்பில் பறவைகள் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. கண்காட்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் திறந்து வைத்தார்கள். துறைத் தலைவர் முனைவர் சந்திரகலா, முனைவர் பெ. தங்கமதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் மாவட்ட வன அலுவலர் செல்வம், வனத்துறை சரக அலுவலர் ரஞ்சித், வனசரகர் இளஞ்செழியன் ஆகியோர் கண்காட்சியைப் பார்வையிட்டு பாராட்டினர். விலங்கியல் துறை உதவிப்பேராசிரியரும் அறிவியல் கழக ஒருங்கிணைப்பாளருமான முனைவர் வெ. சுகுமாரன் மற்றும் விலங்கியல் துறைப்பேராசிரியர்களான முனைவர் ராதா, முனைவர் சு.மணிவண்ணன், முனைவர் வாசுகி, சுப்ரமணியன், முனைவர் அ.ர.நாசர் உள்ளிட்டோர் மாணவிகளின் திறனைப் பாராட்டினர்.

## பல்கலைக்கழக நிதி நல்கை குழுவினால் (UGC Care list) அங்கீகரிக்கப்பட்ட இதழ்களில் வெளிவந்துள்ள ஆய்வுக்கட்டுரைகள்

| வ. எண் | துறைகள் | வெளிவந்துள்ள கட்டுரைகள் |
|---|---|---|
| 1 | தமிழ் | 20 |
| 2 | வரலாறு | 5 |
| 3 | பொருளியல் | 1 |
| 4 | வணிகவியல் | 6 |
| 5 | வணிக நிர்வாகவியல் | 4 |
| 6 | கணிதம் | 2 |
| 7 | கணினி | 1 |
| 8 | வேதியியல் | 3 |
| 9 | விலங்கியல் | 9 |
| 10 | தாவரவியல் | 4 |
| 11 | புள்ளியியல் | 4 |

# மாணவிகள் பெற்ற வெற்றிகள் மற்றும் பரிசுகள்

தமிழ்த்துறை மாணவி மோ.வசீமாபர்வீன் தமிழ் வளர்ச்சித்துறை நடத்திய மாவட்ட அளவிலான கட்டுரை போட்டியில் முதல் பரிசு ரூ.7000 பெற்றார்.

தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை நடத்திய இளைஞர் இலக்கியத் திருவிழாவில் 9 தமிழ்த்துறை மாணவிகள் வெற்றி பெற்று பரிசுத் தொகை பெற்றனர்.

முதுகலை இரண்டாமாண்டு ர.அகல்யா நூல் அறிமுகம் போட்டியில் ரூ.7000 பரிசுத் தொகை உடனடி ஹைக்கூ போட்டியில் ரூ.3000 பரிசுத் தொகையும் பெற்றார்.

முதுகலை முதலாமாண்டு மாணவி கு.ஸ்வாதி கொலாஜ் மேக்கிங் போட்டியில் மூன்றாம் பரிசாக ரூ.3000 பெற்றார்.

இரண்டாமாண்டு இளங்கலை மாணவி வி. குணசீலி நூல் அறிமுகம் போட்டியில் மூன்றாம் பரிசாக ரூ.3000 பெற்றார். இரா. நிஷாந்தி வினாடிவினா போட்டியில் முதலாம் பரிசு ரூ.7000 பெற்றார்.

இளங்கலை முதலாமாண்டு மாணவி பி. துர்கா தேவி ஓவியப் போட்டியில் மூன்றாம் பரிசு ரூ.3000 பெற்றார்.

முதலாமாண்டு இளங்கலை மாணவி த.கீ.கீர்த்தனா விவாத மேடை நிகழ்வில் இரண்டாம் பரிசாக ரூ.5000 பெற்றார்.

முதலாமாண்டு இளங்கலை மாணவி சம்யுக்தா விவாத மேடை போட்டியில் மூன்றாம் பரிசு ரூ.3000 பெற்றார். அதிராம்பட்டினம் காதர் முகைதீன் கல்லூரியில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றுள்ளார்.

வணிகவியல் துறை இரண்டாமாண்டு மாணவி பா.பவித்ரா பள்ளிக்கல்வித்துறை நூலக இயக்கம் நடத்திய காவேரி இளைஞர் இலக்கியத் திருவிழா போட்டியில் முதல் பரிசாக ரூ.7000 பெற்றார்.

வணிக நிர்வாகவியல் துறை மூன்றாமாண்டு மாணவி ல.ராஜ பிருந்தா 19.10.2023 அன்று நடைபெற்ற ‘உலக வனவிலங்கு வாரம்-2023’ புகைப்படப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றார்.

கணினி அறிவியல் துறை இரண்டாமாண்டு மாணவி எம். காவியா 15.07.2023 அன்று காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற தஞ்சைமாவட்டஅளவிலானபேச்சுப்போட்டியில் முதல் பரிசாக ரூ.3000 பெற்றார். 11.01.2024 தமிழ் வளர்ச்சித் துறை நடத்திய காந்தியடிகள் நினைவு நாள் பேச்சுப்போட்டியில் மூன்றாம் பரிசாக ரூ.2000 பெற்றார். பள்ளிக்கல்வித்துறை மற்றும் பொது நூலக இயக்கம் நடத்திய காவிரி இளைஞர் இலக்கியத் திருவிழா போட்டியில் நான்கு வித போட்டிகளில் பங்கு கொண்டு ரூ.20,000 பெற்றார்.

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் பங்கு கொண்டு மாணவி எம்.சந்தியா முதல் பரிசைப் பெற்றார்.

வேதியியல் துறை முதுகலை முதலாமாண்டு மாணவிகளான இள. ஸ்வேதா மற்றும் வி. திவேகா ஆகியோர் திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற கல்லூரிக்கு இடையிலான CHEMSKETCH போட்டியில் மூன்றாம் பரிசினைப் பெற்றனர்.

முதலாமாண்டு மாணவி மதுமிதா பொது நூலக இயக்கம் நடத்திய காவிரி இலக்கிய இளைஞர் திருவிழா போட்டியில் நூல் அறிமுகப் போட்டியில் இரண்டாம் பரிசாக ரூ.4000 பெற்றார்.

செல்வி கவிபிரபா இரண்டு நிமிடம் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு மூன்றாம் பரிசாக ரூ.3000 பெற்றார்.

முது அறிவியல் இரண்டாமாண்டு மாணவி ஆர்.கீர்த்திகா இலக்கிய வினாடி வினா போட்டியில் கலந்து கொண்டு இரண்டாம் பரிசாக ரூ.4000 பெற்றார்.

விலங்கியல் துறை இரண்டாமாண்டு மாணவி பி.கே.ஹரிணிஸ்ரீ பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கல்லூரிக்கு இடையிலான கராத்தே போட்டியில் பிளாக் பெல்ட் மற்றும் வலைகோல் பந்து போட்டியில் தங்கப்பதக்கமும் பெற்றார்.

இரண்டாமாண்டு மாணவி பி. பிரெட்டி 15.07.2023 அன்று காந்தி நேரு காமராஜர் அறக்கட்டளை நடத்திய போட்டியில் மூன்றாம் இடத்தையும், தீபாவளி விழிப்புணர்வு என்ற தலைப்பில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் முதல் இடத்தையும் பெற்றார்.

முதுநிலை முதலாமாண்டு மாணவி கே.விஜயலட்சுமி மற்றும் எஸ். யோகவள்ளி இருவரும் திருச்சி அண்ணா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற கல்லூரிகளுக்கு இடையேயான போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்றனர்.

## சுற்றுலா

சுற்றுலா என்பது மனதிற்கு மகிழ்வைத் தருவதோடு, மாணவிகளுக்கு பல சிறந்த அனுபவங்களைக் கற்றுத்தரும் தன்மையுடையது. எம் கல்லூரியின் தாவரவியல் துறை முதலாமாண்டு மாணவியர் மற்றும் பேராசிரியர்கள் 01.03.2024 அன்று தஞ்சை பிள்ளையார்பட்டியில் செயல்பட்டு வரும் தொழிற்சாலைக்கு உற்றுநோக்கல் சுற்றுலா (IICPT-VISIT) சென்றுவந்தனர். 17.10.2023 அன்று இராமேஸ்வரம் கடல் பாசிகளின் ஆராய்ச்சி மையம் (CCIR- CSMCRI) மற்றும் மண்டபம் சென்று கண்டுகளித்து மகிழ்ந்து வந்தனர். 31.08.2023-01.09.2023 ஆகிய இரண்டு தினங்களும் இளநிலை மற்றும் முதுநிலை இறுதியாண்டு மாணவிகள் தாவர சேகரிப்பு மற்றும் களப்பணிக்காக ஊட்டி சென்று வந்தனர்.

இளநிலை இறுதியாண்டு விலங்கியல் துறை மாணவியர் மற்றும் பேராசிரியர்கள் 11.03.2024 அன்று தூத்துக்குடி சுற்றுலா சென்றுவந்தனர். தூத்துகுடி துறைமுகம் மற்றும் உப்பளப் பகுதிகள் பல தகவல்களை அவர்களுக்கு வழங்குவதாக அமைந்தது.

23,24, 02.02.2024 ஆகிய இரு தினங்கள் புவியியல் துறையின் இளநிலை, முதுநிலை மாணவியர் மற்றம் பேராசிரியர்கள் திருவனந்தபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களுக்குச் சுற்றுலா சென்று வந்தனர். புவியியல் சார் கல்வி அறிவை மாணவிகள் மேம்படுத்திக் கொள்ளவும், தெளிவுபெறவும் உறுதுணையாய் இக்கல்விச் சுற்றுலா அமைந்தது.

## கல்லூரி முதல்வர் பங்கேற்ற பிற நிகழ்வுகள்

கல்லூரி முதல்வர் அ.ஜான் பீட்டர் அவர்கள் தஞ்சாவூர் மன்னர் சரபோஜி கல்லூரி, நன்னிலம் அரசு கலை அறிவியல் கல்லூரி ஆகியவற்றில் பேரவைத் தொடக்க விழாவிலும் ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரி, கும்பகோணம் அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருக்காட்டுப்பள்ளி அரசு கலை அறிவியல் கல்லூரி, குடவாசல் டாக்டர் எம்.ஜி.ஆர் கலை அறிவியல் கல்லூரி ஆகியவற்றில் நடைபெற்ற கல்லூரி நாள் விழாக்களிலும், குமாரபாளையம் அரசு கல்வியியல் கல்லூரி, ஒரத்தநாடு மகளிர் கலைக்கல்லூரி ஆகியவற்றில் நடைபெற்ற பட்டமேற்பு விழாக்களிலும், தஞ்சாவூர் பான் செக்கர்ஸ் கல்வியியல் கல்லூரியில் நடைபெற்ற முதலாம் ஆண்டு தொடக்க விழாவிலும் கல்லூரி முதல்வர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

மேலும் தஞ்சாவூர் பெத்தண்ணன் கலையரங்கிலும் திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத்திலும் நடைபெற்ற சோழ மண்டல வரலாற்றுத் தேடல் - வரலாற்றுக் கருத்தரங்க நிகழ்விலும் தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறை, கல்வெட்டியல் துறை, அரிய சுவடிகள் பதிப்புத்துறை ஆகியவற்றில் நடைபெற்ற கருத்தரங்குகளிலும் கருத்தாளராக நம் முதல்வர் பங்கேற்றார்.

## பேராசிரியர்கள் வழங்கிய ஆய்வுக்கட்டுரைகள்

தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் பு. இந்திராகாந்தி அவர்கள், 21.02.2024 அன்று திருச்சி தூய வளனார் கல்லூரியின் தமிழ்த்துறை நடத்திய தேசிய கருத்தரங்கில் 'திருக்குறள் காட்டும் சொல்லாடல் நெறி' என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கியும் அமர்வு தலைமை ஏற்றும் சிறப்பித்தார்கள்.

தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் பொ. திராவிடமணி அவர்கள், 07.07.2023 முதல் 09.07.2023 வரை சென்னையில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் கலந்துகொண்டு 'தேவதாசி ஒழிப்பும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரும்' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வழங்கினார்.

தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் தி.ஹேமலதா அவர்கள், 26.05.2023 அன்று அந்தமானில்நடைபெற்றபன்னாட்டுக்கருத்தரங்கில் 'மாறோக்கத்து நப்பசலையார் பாடல்கள் வழி அறியலாகும் உலகியலறிவு' என்ற தலைப்பில் கட்டுரை வழங்கினார். மேலும் மலேசியாவில் 21.07.2023 முதல் 23.07.2023 மூன்று நாட்கள் நடைபெற்ற 11ஆம் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பங்குகொண்டு 'புறநானூற்றின் வழி தமிழரின் சமூக உளவியல்' என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

வரலாற்றுத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் அ. கார்குழலி அவர்கள் 28.10.2023 முதல் 30.10.2023 வரை கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற South Indian History Congress மாநாட்டில் கலந்துகொண்டு 'Exquisite Dance Sculptures of Thirukodiswara Temple' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வழங்கினார். மேலும் வாராங்கல் காகத்திய பல்கலைக்கழகத்தில் 26.12.2023 முதல் 30.12.2024 வரை நடைபெற்ற மாநாட்டில் 'Exploring Two Fascinating Episodes from the Thiruthondar Puranam through Sculptural Relief' என்ற தலைப்பில் கட்டுரை வழங்கினார்.

கல்லூரியின் புள்ளியியல் துறையில் 28.12.2023 மற்றும் 29.12.2023 ஆகிய தினங்கள் 'Mathematical and Statistical Computing for Social Science' என்ற பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் வணிகவியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் ப. முத்தமிழ் திருமகள் 'HRM Plan to Estimate the Recruitment' என்ற தலைப்பிலும் இணைப்பேராசிரியர் முனைவர் ச.வெ. சௌந்தரவள்ளி 'ESG in Sastainable Investment Plan an Overview' என்ற தலைப்பிலும், இணைப்பேராசிரியர் முனைவர் கண்மணி ஜோன் ஆப் ஆர்க் 'A Study on Problems in Online Marketing in Chennai District' என்ற தலைப்பிலும் கட்டுரை வழங்கினார்.

வணிகவியல் இணைப்பேராசிரியர் முனைவர் மா.லட்சுமிபாலா 'Application of Recent statistical tools in business decision making' என்ற தலைப்பிலும் இணைப்பேராசிரியர் கோ.சு. சுபாஷினி 'Unraveling Lean Healthcare: A Structural Equation Modeling Approach in Thanjavur District' என்ற தலைப்பிலும் கட்டுரை வழங்கினார்.

புவியியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் சு.ஸ்ரீகலா அவர்கள் 'Statistical Analysis of rainfall conditions in Thanjavur district A geostatistical approach' என்ற தலைப்பில் கட்டுரை வழங்கினார்.

## குறுந்திட்ட ஆய்வு

புவியியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் சு. ஸ்ரீகலா அவர்கள் 'Urban Infrstructure with Smart City Prespective - A Geo-Spatial Approach' என்ற தலைப்பில் தமிழ்நாடு அரசு உயர்கல்வித் துறையின் ரூ.1,00,000 நிதியின் கீழ் குறுந்திட்ட ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

# பேராசிரியர்கள் பெற்ற விருதுகள்

தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் பு.இந்திராகாந்தி, திருத்துறைப்பூண்டி மதுரகவி தமிழ்ச்சங்கம் இலுப்பை அறக்கட்டளை வழங்கிய ‘தமிழ்வேள்’ விருதினைப் பெற்றுள்ளார்.

தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் பி.கரிகாலன் அவர்கள் தொல்காப்பியச் செம்மல் பாவலரேறு ச.பாலசுந்தரனார் நூற்றாண்டு விழாவில் ‘பாவலர் மணி’ விருது பெற்றுள்ளார்.

வரலாற்றுத்துறை துணைப்பேராசிரியர் முனைவர் ஆ. மீனாட்சி அவர்கள் University Putra Malaysia (UPM) Malaysia Bodhi International Journal of Reasearch in Humanities Arts and Science, Best Reasearch Award, வழங்கிய Best Academic Award என்ற விருதுகளைப் பெற்றுள்ளார்.

வணிகவியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் ஜே.ஜே.ஜெயக்குமாரி அவர்கள் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் சிறப்பாகப் பணியாற்றியமைக்காக 'Faculty Champion' என்ற விருதினைத் தமிழக முதல்வரிடமிருந்து பெற்றுள்ளார்.

தாவரவியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் இரா. சகாயகிரி அவர்களுக்கு "Pudhucherry Novel Research Academy Best Women Scientist Award" வழங்கிச் சிறப்பித்துள்ளது.

தாவரவியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் மு. பூமிநாதன் அவர்களுக்கு "Pudhucherry Novel Research Academy Excellence Award" வழங்கிச் சிறப்பித்துள்ளது.

பொருளியல் துறை பேராசிரியர் முனைவர் எஸ். தமிழரசன் அவர்கள் "International Distinguish Teacher" என்ற விருதினைப்பெற்றுள்ளார்.

# நாட்டு நலப்பணித்திட்டம் (அலகு 1,2,3)

நாட்டு நலப்பணித்திட்டத்தில் மூன்று அலகுகள் உள்ளன உறுப்பினர்களைாக 150 மாணவிகள் உள்ளனர். இயற்பியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் கு. சுபா (அலகு 1) கணினித்துறை உதவிப்பேராசிரியர் மி.ஜடாரோஸ் (அலகு 2),கணிதத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் த. கீதா, (அலகு 3) ஆகியோரை திட்ட அலுவலர்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

மாணவிகள் வளாகத்தூய்மை, கோவில் தூய்மை, உழவாரப்பணி, உடலுறுப்பு தானம், இயற்கையைப் போற்றல் என்ற பல்வேறு பொருண்மையில் விழிப்புணர்வு கருத்துக்களைக் கற்றும், கேட்டும், வழங்கியும் செயலாற்றி வருகின்றனர்.

- ★ தேசிய யோகா தினத்தை முன்னிட்டு 21.6.2023 ஹீலர் அரவிந்தன் அவர்களால் யோகா பயிற்சி மாணவிகளுக்கு அளிக்கபெற்றது.
- ★ 27.06.2023 அன்று சர்வதேசப் போதைப் பொருள் பயன்பாடு மற்றும் சட்ட விரோதக் கடத்தலுக்கு எதிரான தினம். காவல் துறை உதவி ஆய்வாளர் ரமேஷ் அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெற்றது. மாணவிகள் கலந்து கொண்டனர்.
- ★ 11.07.2023 அன்று உலக மக்கள் தொகை உறுதிமொழி மற்றும் விழிப்புணர்வுபேரணி நடைபெற்றது. நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட துணை மேயர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.
- ★ 17.07.2023 அன்று மாநில கல்வி வளர்ச்சி தினத்தை முன்னிட்டு மாணவிகளுக்குப் பேச்சுப்போட்டி, கட்டுரை போட்டி மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பெற்றன.
- ★ 17.07.2023 அன்று மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுவால் ஆதரவுடன் சட்ட விழிப்புணர்வுப் பேரணி நடைப்பெற்றது.

நிகழ்வில் தஞ்சாவூர் தலைமை நீதிபதி தலைமையில் 14 நீதிபதிகள் பங்குபெற்றனர்.

- ★ 19.07.2023 அன்று காயகல்ப யோகப் பயிற்சி ஆசிரியர்களுக்கும் மாணவிகளுக்கும் வழங்கப்பெற்றது.
- ★ 14.07.2023 முதல் 24.07.2023 தஞ்சையில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் மாணவிகள் கலந்துகொண்டனர்.
- ★ 11.08.2023 அன்று போதை விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.
- ★ 11.09.2023 முதல் 13.09.2023 வரை மூன்று நாட்கள் தியானப் பயிற்சி அளிக்கப்பெற்றது. நிகழ்வைத் தஞ்சாவூர் Heartfulness மையம் வழங்க மாணவியர் பயனடைந்தனர்.
- ★ 15.09.2023 அன்று ஓசோன் தினக் கருத்தரங்கம் நடை பெற்றது. நிகழ்வை நாட்டுநலப்பணித்திட்டத்துடன் அறிவியல் கழகமும், சுற்றுச்சூழல் கழகமும் இணைந்து நடத்தியது.
- ★ 14.09.2023 உலக ஓசோன் தினத்தை முன்னிட்டு அறிவியல் கழகமும், சுற்றுச்சூழல் கழகமும் இணைந்து விழிப்புணர்வு கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப்போட்டி நடத்தப்பெற்றது.
- ★ 26.10.2023 அன்று ‘எனது மண் எனது தேசம்’ என்ற உறுதிமொழிப் பேரணி நடைபெற்றது.
- ★ 30.10.2023 அன்று அறிவியல் கழகத்துடன் இணைந்து 31 ஆவது தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு நடைபெற்றது.
- ★ 09.01.2024-10.01.2024 ஆகிய இரண்டு நாட்கள் அரசுப்பள்ளி மாணவிகள் கல்லூரிக்கு களப்பயணம் மேற்கொண்டனர். அவர்களுக்கு நல் வழிகாட்டுதல்களை வழங்கியது.
- ★ 24.01.2024 அன்று வாக்காளர் தின உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.
- ★ 02.02.2024 அன்று தஞ்சை சிவந்தி ஆதித்தனார் நற்பணி மன்றம் மற்றும் விஷ்ணுபிரியா மருத்துவமனையுடன் இணைந்து ‘உலக புற்றுநோய் தின’ சிறப்பு முகாம் நடைபெற்றது.
- ★ 06.02.2024 அன்று ‘மருந்தில்லா மருத்துவம்’ என்ற விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்வில் ஹீலர் அரவிந்தன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.
- ★ 09.02.2024 முதல் 15.02.2024 வரை நீலகிரி பஞ்சாயத்து மனோஜிபட்டி கிராமத்தில் ஏழு நாள் சிறப்பு முகாம் நடைபெற்றது. நிகழ்வில் பல்வேறு விழிப்புணர்வு சொற்பொழிவுகள் நடத்தப்பெற்றன.
- ★ 04.03.2024 அன்று அடுப்பில்லா சமையல் போட்டி நடைபெற்றது.

## மாணவிகளுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி

ஆதிதிராவிட பழங்குடியின மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்கும், பணி வாய்ப்பிற்கும் உதவும் வகையில் Skill Development Training நடத்தப்படுகிறது. இதன் ஒருங்கிணைப்பாளராக வரலாற்றுத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் சு. சாந்தி அவர்கள் செயல்பட்டு வருகின்றனர். 15.02.2023 முதல் 5.05.2023 வரை தாட்கோ (THADCO) உதவியுடன் மாணவிகளுக்கு Varanda Race மூலம் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்றன.

வணிக நிர்வாகவியல் துறை 11.09.2023 அன்று ‘தனிப்பட்ட முத்திரை’ என்ற பொருண்மையில் மாணவிகளுக்கான திறன் மேம்பாடு பயிற்சியை வழங்கியது. இப்பயிற்சியை ஏ.சசிகலா வேலை வாய்ப்பு அலுவலர், மற்றும் திருமதி ரெனே ஸ்ப்ரிலியா டபிள்யூ, உதவிப் பேராசிரியர், எம்.ஏ.எம்.வணிகப் பள்ளி, திருச்சி ஆகியோர் கருத்தாளர்களாகக் கலந்துகொண்டு பயிற்சியை வழங்கினர்.

# நுண்கலை மன்றம்

நுண்கலை மன்றத்தின் ஒருங்கிணைப் பாளராகத் தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் இரா.தமிழடியான் அவர்களும் முனைவர் பி.கரிகாலன் அவர்களும் செயல்பட்டு வருகின்றனர். இக்கல்வியாண்டில் நுண்கலை மன்றம் சார்பாக மாணவிகள் பல்வேறு கல்லூரிகளிலும் அமைப்புகளிலும் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் பங்கேற்று முதற்பரிசு மற்றும் ரொக்கப் பரிசுகள் பல பெற்று நம் கல்லூரிக்குப் பெருமை செய்தனர்.

உலக மக்கள் தொகை தினம் (11.07.2023), காமராசர் பிறந்தநாள் விழா (15.07.2023), தமிழ் விழா (30.9.2023), கலைஞர் நூற்றாண்டுவிழா (13.10.2023), பெரியார் பிறந்தநாள் விழா (14.10.2023), காந்தியடிகள் பிறந்தநாள் விழா (11.01.2024), வள்ளலார் தினம், பாரதி உலா, வாக்காளர் தினம் மற்றும் இளைஞர் இலக்கியத் திருவிழா ஆகிய போட்டிகளில் பங்கேற்று இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறை மாணவி மு.காவ்யா முப்பத்து நான்காயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு பெற்றார்.

இரண்டாமாண்டு இளநிலை விலங்கியல் துறை மாணவி பி.பிரீத்தி, தமிழ்த்துறை மூன்றாமாண்டு மாணவி மு.வசீமா பர்வீன், தமிழ்த்துறை முதலாண்டு மாணவி கீர்த்தனா, இளநிலை வேதியியல் துறை மாணவி க.கவி பிரபா, இரண்டாமாண்டு இளநிலை புள்ளியியல் துறை மாணவி ர.சோனா அகல்யா, இரண்டாமாண்டு ஆங்கிலத்துறை மாணவி ப.லக்கீஷாபிரமிதா உள்ளிட்ட பலர் அனைத்துக் கல்லூரிகளுக்கான போட்டிகளில் பங்கேற்றுப் பரிசும் பாராட்டுகளும் பெற்றனர்.

14.07.2023 முதல் 24.07.2023 வரை மாவட்ட நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட புத்தகத் திருவிழாவில் நம் மாணவிகள் ஆடல், பாடல் மற்றும் சிலம்பாட்ட நிகழ்ச்சி களைச் சிறப்பாக அரங்கேற்றினர். அனைத்துக் கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற இலக்கியப் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசு பெற்றனர்.

11.12.2023 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்பட்ட பாரதியார் பிறந்த நாள் விழாப் பேச்சுப் போட்டியில் நம் கல்லூரி மாணவிகள் 38 பேர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். பரிசுத்தொகை மற்றும் விழாவிற்குச் செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் ரூ.20,000/= நிதி வழங்கியது.

11.01.2024 அன்று நுண்கலை மன்றம் சார்பாகக் கல்லூரி வளாகத்தில் பொங்கல் விழா சிறப்பாக நிகழ்த்தப்பட்டது. கரகாட்டம், கோலாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சி கள், கோலப்போட்டிகள், ஆசிரியர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் சிறப்பாக நிகழ்ந்தன. துறைவாரியாகப் பொங்கல் வைத்து வழிபாடு செய்யப்பட்டது. உழவர் திருநாள் என்பதால் ஜல்லிக்கட்டுக் காளைகள் வரவழைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது. முதல்வர் உள்ளிட்ட ஆசிரியர்கள், மாணவிகள் டிராக்டர் ஊர்வலத்திலும் பங்கேற்றனர்.

08.02.2024 மற்றும் 09.02.2024 ஆகிய நாட்களில் தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறையுடன் இணைந்து நடத்திய காவிரி இளைஞர் இலக்கியத் திருவிழா ரூ.1,50,000/- நிதி நல்கையுடன் நடத்தப்பட்டது. பேச்சுப்போட்டி, நூல் விமர்சனம், உடனடி ஹைக்கூ உள்ளிட்ட பத்து வகையான போட்டிகள் நடத்தப்பட்டன. அனைத்துப் போட்டிகளிலும் நம் கல்லூரி மாணவிகள் சிறப்பாகப் பங்கேற்று முதற்பரிசு ரூ.5,000, இரண்டாம் பரிசு ரூ.4,000, மூன்றாம் பரிசு ரூ.3000 எனப் பரிசுகளை வென்றனர்.

21-02-2024 அன்று ஜோதி அறக்கட்டளையுடன் இணைந்து நடத்தப்பட்ட ‘உலகத் தாய்மொழி நாள்’ விழாவில் நம் கல்லூரி மாணவிகளுக்கு மெகந்திப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பங்கேற்ற 156 மாணவிகளுக்கு

ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள புடவைகள் பரிசாக வழங்கப்பட்டன.

13-02-2024 முதல் 16-03-2024 வரை நம் கல்லூரி மாணவிகளுக்கான நுண்கலை மன்றப் போட்டிகள் நடத்தப்பட்டன. பேச்சு, கவிதை, கட்டுரை, ஓவியம், நடனம், பாட்டு, நிழற்படம், அடுப்பில்லாச் சமையல் உள்ளிட்ட இருபத்து அய்ந்து வகையான கலைப் போட்டிகள் நடத்தப்பட்டு 08-03-2024 நடத்தப்பட்ட நுண்கலை மன்ற விழாவில் பரிசு பெற்ற அனைவருக்கும் சான்றிதழ் மற்றும் புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

28-03-2024 முதல் 01-03-2024 வரை ஆசிரியர்கள் ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கான நுண்கலை மன்றப் போட்டிகள் நடத்தப்பட்டன. பெரும்பான்மையான ஆசிரியர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். அனைவருக்கும் 08-03-2024 அன்று நடைபெற்ற விழாவில் புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

08-03-2024 அன்று காலை 11.00 மணிக்கு நுண்கலை மன்ற விழா தொடங்கியது. முதல்வர் அவர்களின் தலைமையில் மாநகர மேயர் சண்.இராமநாதன் மற்றும் அருங்கலையரசு சேலம் அபு ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். பிற்பகல் 1.00 மணிக்கு நுண்கலை மன்ற மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் மாலை 5.30 வரை நடைபெற்றது.

## சமூகப் பணிக் குழுமம் (SSL)

அமைப்பின் ஒருங்கிணைப்பாளராகத் தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் மு.வேம்பு அவர்கள் செயல்பட்டு வருகின்றார்.

15.08.2023 அன்று சுதந்திர தின நிகழ்ச்சி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்களின் முயற்சியால் பெற்றோர் ஆசிரியர் கழக உதவியுடன் அமைக்கப்பட்ட கொடிக்கம்ப மேடை திறப்புவிழா மற்றும் கொடியேற்ற நிகழ்வை முனைவர் பா.சிந்தியா செல்வி, கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் (நிதி), சென்னை அவர்கள் சிறப்பித்து வழங்கினார்கள். சுதந்திரதின விழா சிறப்புரையைக் கணித்துறைத் தலைவர் முனைவர் வெ.வினோபா அவர்களும், விலங்கியல் உதவிப்பேராசிரியர் முனைவர் வெ.சுகுமாரன் அவர்களும் வழங்கினார்கள். மாணவிகளின் கலை நிகழ்ச்சியுடன் விழா இனிதே நடைபெற்றது.

26.01.2024 அன்று குடியரசு தினவிழாக் கொண்டாடப்பட்டது. முதல்வர் அ.ஜான் பீட்டர் அவர்கள் கொடியேற்றி விழா சிறப்புரை வழங்கினார்கள்.

குடியரசு தின உரையை தாவரவியல் துறைத்தலைவர் முனைவர் கோ.சாந்தி அவர்கள் வழங்கினார்கள். மாணவிகளின் கலை நிகழ்ச்சியுடன் விழா இனிதே நடைபெற்றது.

## தேசிய ஒருமைப்பாட்டு சமிதி

அமைப்பின் ஒருங்கிணைப்பாளராக தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் வெ.அமுதா அவர்கள் செயல்பட்டு வருகிறார். 30.01.2024 அன்று தியாகிகள் தினம் தேசிய ஒருமைப்பாட்டு சமிதி சார்பாக அனுசரிக்கப்பட்டது.

# தொழில் வழிகாட்டுதல் மற்றும் வேலைவாய்ப்பு ஆலோசனை மையம்

மாணவிகளுக்குத் தொழில் வழிகாட்டுதல் மற்றும் வேலைவாய்ப்புச் சூழலை அறிமுகப்படுத்தும் செயலை இம்மையம் செய்து வருகின்றது. அமைப்பின் ஒருங்கிணைப்பாளராக வணிகவியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் அ. கண்மணி ஜோன் ஆப் ஆர்க் செயல்பட்டு வருகின்றார்.

01.08.2023 அன்று தஞ்சாவூர் மாவட்ட தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி.டி. அனிதா அவர்கள் கலந்துகொண்டு அக்னிவீரவாயு மற்றும் அக்னிபாத் திட்டத்தின் கீழ் மாணவிகள் விண்ணப்பிக்க இணைதள விவரங்களை விளங்கினார். இத்திட்டத்தில் 8 மாணவிகள் பதிவு செய்தார்.

08.09.2023 அன்று தஞ்சாவூர் அபெக்ஸ் (Apex) அகாடமியின் நிறுவனர் மற்றும் தலைவர், டாக்டர் விவேக் ரவி மாணவிகளுக்கு மனவளர்ச்சியின் அவசியத்தை விளக்கினார்.

13.09.2023 அன்று டாக்டர் பிரசாத் பட்நாயக், திருமதி தமிழ்ச்செல்வி, ஐஐடி, சென்னை இவர்களுடன் இணைந்து பொறியியல் பட்டதாரி திறன் தேர்வு பற்றி விரிவாக விளக்கினார்.

22.09.2023 அன்று வெராண்டா ரேஸ் (Veranda Race) நிறுவனத்தின் மேலாளர் திரு.ஜே.இராம ரெத்தினம் மற்றும் இந்நிறுவனப் பயிற்சியாளர்கள் கல்வி நேர மேலாண்மையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர். மேலும் போட்டித் தேர்விற்குத் தயாராகும் நுட்பங்களை எடுத்துரைத்தனர்.

27.09.2023 அன்று தஞ்சாவூர் தாலண்டேஸ்க் நிறுவனர் திரு.எஸ். அய்யப்பன் உள்நாட்டுப் பகுதியில் உற்பத்தியாகும் பொருள்களின் வணிகம் மற்றும் அதன் விற்பனையின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

13.10.2023 அன்று தஞ்சாவூர் இஸ்வே (Isway) டெக்னாலஜி தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திருமதி வி.மனோசித்ரா அவர்கள் மாணவிகளுக்குக் கிடைக்கும் தொழில் வாய்ப்புகள் குறித்து விரிவான உரையை வழங்கினார்கள்.

17.10.2023 அன்று திரு.அஃபல் அகமது, எஸ்.எஸ்.எல் மண்டல மேலாளர் மதுரை அவர்கள், செயற்கை நுண்ணறிவு (AI) தொழில் நுட்பத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். இதில் மாணவிகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

26.10.2023 அன்று தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் நான் முதல்வன் பேஸ் பிரப் (Face Prep) மற்றும் லிங்டு இன் (Linkedin) இவற்றுடன் இணைந்து Career Kickstarter திட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்வில் லிங்டு இன் கணக்கைச் செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து விளக்கினார்கள். பயிற்சியாளர்களாகத் திருமதி பார்கவி, செல்வி நிவேதா, மற்றும் திரு தனுஷ்குமார் ஆகியோர் பங்குகொண்டு மாணவிகளுக்குப் பயிற்சி வழங்கினார்கள். இவற்றுடன் வளாக நேர்க்காணல் குறிப்புகளும் பயிற்சியாக வழங்கப்பட்டது.

18.12.2023 அன்று ஐடாயு சாப்ட்வேர் டெக்னாலஜி, 01.02.2024 அன்று வின்னர்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் கம்யூனிகேட்டிவ் ஆகிய நிறுவனங்களின் நேர்காணல் நடைபெற்றது. இதில் 22 மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

06.02.2024 அன்று தஞ்சாவூர் வேலைவாய்ப்பு அலுவலகம் நடத்தும் கண்காட்சி மற்றும் பயிலரங்கம் தொடர்பாக மாணவிகளுக்கு 'இன்றைய தொழில் நுட்பம்', 'இன்றைய வேலைவாய்ப்பில் பெண்களின் முக்கியத்துவம்', 'சாதனைப் பெண்' என்ற தலைப்புகளில் பேச்சுப்போட்டி நடைபெற்றது. போட்டியில் 16 மாணவிகள் கலந்துகொண்டனர் இதில் இரண்டாமாண்டு விலங்கியல் துறை மாணவி செல்வி. பி. பிரீத்தி முதல் பரிசையும், இரண்டாமாண்டு கணினித்துறை மாணவி செல்வி. எம். ஜெயபிரியா இரண்டாம் பரிசையும்,

மூன்றாமாண்டு புவியியல் துறை மாணவி செல்வி ஆர்.நிவேதா மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

07.02.2024 அன்று தஞ்சாவூர் வேலைவாய்ப்பு அலுவலகம் கல்லூரி வளாகத்தில் தொழில் வழிகாட்டுதல் குறித்த பயிலரங்கம் மற்றும் கண்காட்சியை நடத்தியது. கல்லூரி முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமையில் நடபெற்ற நிகழ்வில் தஞ்சாவூர் வேலைவாய்ப்பு அலுவலக உதவி இயக்குநர் சரவணன் அவர்கள் ராணுவம், கடற்படை, விமானப்படையில் உள்ள வேலை வாய்ப்புகள் குறித்துப் பேசினார்கள். டி.ஜ.சி மேலாளர் திரு.மணிவண்ணன் அவர்கள் தொழில் முனைவோருக்கான நிதி ஒதிக்கீடு குறித்து விளக்கினார். கிராம நிர்வாக அலுவலர் திரு.விக்னேஸ்வரன் அவர்கள் மாணவிகளை வேலைவாய்ப்பை நோக்கி அழைத்துச் செல்லும் அரசுத் தேர்வுகள் குறித்துப் பேசினார். தொடர்ந்து மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் திரு.பழனிவேல் அவர்கள் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் கிடைக்கும் வேலைவாய்ப்புகள் பற்றி பேசினார், இவரைத் தொடர்ந்து வருவாய் ஆணையர் திருமதி இலக்கியா தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மற்றும் பிற தேர்வுகளுக்குத் தயராவது குறித்து விளக்கினார்.

07.02.2024 அன்று தொழில் வழிகாட்டுதல் மற்றும் வேலைவாய்ப்புப் பிரிவு இறுதியாண்டு மாணவிகளுக்கான Resume Biling குறித்த வழிகாட்டுதல் நிகழ்வை நடத்தியது நிகழ்வில் கோயம்புத்தூர் KVIM இணைப்பேராசிரியர் எஸ்.ஷைனி அவர்கள் கலந்துகொண்டு வழிகாட்டுதல்களை வழங்கினார்.

09.02.2024 அன்று HR Proodle Intergrated Service, 13.02.2024 அன்று HR MRG எண்டர்பிரைசஸ், 15.02.2024 அன்று வெண்பா (Venpa), 16.02.2024 அன்று Hitachi, 14.03.2024 அன்று வேலவன் சர்வீஸ், 15.03.2024 அன்று திருச்சி சிங் மல்டி விசுவல் மீடியா, 18.03.2024 அன்று யாசகி இந்தியா, 19.03.2024 அன்று சென்னை எஸ்.எஸ் எண்டர்பிரைசஸ் ஆகிய நிறுவனங்கள் நடத்திய வளாக நேர்காணலில் 653 மாணவிகள் வேலைவாய்பினைப் பெற்றுள்ளனர். தொழில் வழிகாட்டுதல் மையம் மாணவிகளின் திறன் மேம்பாடு மற்றும் பணிவாய்ப்புகளுக்கான சூழலை உருவாக்கிக் கொடுப்பதில் தன்முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.

## பொலிவுறு குந்தவை மன்றம்

பொலிவுறு குந்தவை மன்றம் கல்லூரி முதல்வர் அ.ஜான் பீட்டர் அவர்களின் வழிகாட்டுதலுடன் 19.07.2023 அன்று தொடங்கப்பட்டது. இம்மன்றத்தின் இலக்கு வளாகத்தைத் தூய்மையாகப் பராமரித்தல், அழகுபடுத்துதல் போன்றவற்றோடு கழிவறை தூய்மையோடு பொது சுகாதார மேம்பாட்டை உயர்த்துதலுமாகும்.

மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர்களாகக் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் தி.ஹேமலதா அவர்களும் இணைப் பேராசிரியர் முனைவர் ம.கண்ணம்மாள் அவர்களும் செயல்பட்டு வருகின்றனர். உறுப்பினர்களாக பொருளியல் துறை உதவிப் பேராசிரியர் க.சுசீலா, வரலாற்றுத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் த.அமுதா, விலங்கியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் கோ.உமா மகேஸ்வரி, வணிகவியல் துறை உதவிப் பேராசிரியர் பெ.விஜயலெட்சுமி அவர்களும் செயல்பட்டு வருகின்றனர்.

தஞ்சை மாநகராட்சியின் துணையுடன் 14.07.2023, 23.08.2023, 17.07.2023, 15.08.2023 ஆகிய நாட்களில் 60 பணியாளர்கள் கல்லூரி வளாகத்தைத் தூய்மை செய்தார்கள். தொடர்ந்து கல்லூரி வளாகத்தில் இருந்த புல், புதர்கள் JCP இயந்திரம் மூலம் நீக்கப்பட்டு தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டது. சொந்த செலவில் தமிழ்த்துறை முன்பாக தோட்டம் அமைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. உறுப்பினர் முனைவர் பெ.விஜயலெட்சுமி அவர்கள் 20 தூய்மைப் பணிக்கான உபகரணங்களும் ரூ.14,000 நன்கொடையும் அளித்துள்ளார்.

# தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம்

தொழில் முனைவோர் மேம்பாட்டு மையத்தின் ஒருங்கிணைப்பாளராக வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் ப.முத்தமிழ் திருமகள் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

21-06-2023 மற்றும் 22-09-2023 ஆகிய இரு தினங்களும் யோகா தினக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக 'யோகா மற்றும் சுவாசப் பயிற்சி' என்ற தலைப்பில் தஞ்சாவூர் யோகா பயிற்றுவிப்பாளர்கள் சி.அரவிந்த் மற்றும் திருமதி எம்.ராஜேஸ்வரி அவர்களால் மாணவியர்களின் மன மற்றும் உடல் நலனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பல்வேறு யோகா பயிற்சி கள் நேரடியாக அளிக்கப்பட்டன. இதில் 220 மாணவியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

13-07-2023 மற்றும் 14-07-2023 ஆகிய இரு தேதிகளில் திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இயங்கி வரும் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம், பாரதிதாசன் பல்கலைக்கழக மகளிரியல் துறை மற்றும் தமிழ்நாடு மகளிரியியல் தொழில் முனைவோர் சங்கம் இணைந்து நடத்திய 'தொழில் முனைவோருக்கான தொழில் வாய்ப்புகள் மற்றும் அரசு திட்டங்கள்' என்ற தலைப்பில் இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இந்நிகழ்ச்சியில் நம் மாணவியருக்குப் புதிய தொழில் தொடங்கத் தேவையான நவீன தொழில் நுட்பங்கள், தயாரித்த பொருட்களைச் சந்தைப்படுத்துதல், பொது மற்றும் தனியார் நிறுவனங்களிலிருந்து தொழில் தொடங்க நிதியைப் பெறுவதற்குரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இதில் மொத்தம் 44 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

31-07-2023 மற்றும் 01-08-2023 ஆகிய இரு தினங்களும் 'கழிவுப் பொருட்கள் மூலம் கலை மற்றும் கைவினைப் பொருட்கள் தயாரித்தல்' என்ற தலைப்பில் புதுதில்லியில் உள்ள ஊனமுற்ற குழந்தைகள் பயிற்சி மையத்தின் ஆசிரியர் திரு.மகேந்திர ராஜ், அவர்களால் கழிவுப் பொருட்களைக் கொண்டு அழகுப் பொருட்கள் தயாரிப்பதற்கான நேரடிப் பயிற்சி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி மாணவியர் பயனடைந்தனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களால் 'கல்லூரிச் சந்தை' என்ற தலைப்பில் 09-08-2023 மற்றும் 10-08-2023 ஆகிய இரு தினங்களும் கண்காட்சி மற்றும் விற்பனையை ஊக்குவிக்கும் நிகழ்வு நடைபெற்றது. அன்று 33 கடைகள் அமைக்கப்பட்டுத் தாங்கள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்தார்கள். இந்நிகழ்ச்சியினைத் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் திரு. தீபக் ஜேக்கப் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாணவியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

புதிய சிந்தனைகள் மற்றும் திறன்களை வளர்ப்பதன் வாயிலாக மாணவியர்கள் தானே புதிய தொழில் தொடங்குவதற்கு வசதியாக நம் கல்லூரியில் 28-08-2023 முதல் 06-10-2023 வரை பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளாகக் கிராஃபிக் டிசைன், ஸ்போக்கன் இங்கிலீஸ், ஆரி வொர்க், அழகுக்கலை மற்றும் ஹிந்தி வகுப்புகள் நடத்தப்பட்டன. இதில் 184 மாணவிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

13-09-2023 அன்று செல்வ உருவாக்கம் என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம் இணைய வழியில் நடத்தப்பட்டது. அன்றைய சிறப்பு விருந்தினராகத் திரு.ஜி.விஜயகுமார், கார்ப்பரேட் பயிற்றுநர், பெங்களூர் அவர்கள் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் பணவீக்கம் மற்றும் எதிர்கால ஆபத்தை எதிர்கொள்ள எந்தெந்த முதலீடுகளில் முதலீடு செய்யலாம் என்றும் குறிப்பாக மியூச்சுவல் பண்டு, பங்கு மற்றும் கடன் நிதி முதலீடுகளில் குறுகியகால வருவாய் பெறுவதற்குரிய வாய்ப்புகள் குறித்த ஆலோச னைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் 99 மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டார்.

12-10-2023 அன்று 'நிதி கல்வியறிவு மூலம் பெண்கள் அதிகாரம்' என்ற இந்நிகழ்ச்சியின்

சிறப்பு விருந்தினராக மும்பையில் உள்ள தொழில்முனைவோர் அமைச்சகத்தில் பணிபுரியும் சில்க் இந்தியா மிஷனுக்கான ஆலோசகர் மற்றும் பயிற்சியாளர் திரு.சி.கே.அறிவழகன் அவர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நிதிச் சந்தையில் தற்போது கிடைக்கும் பல நேரடி மற்றும் மறைமுக முதலீட்டு திட்டங்கள் மற்றும் குறுகிய கால மற்றும் நீண்ட காலத்திற்கு வருவாய் திட்டங்கள் மற்றும் கடன் அல்லாத சந்தை முதலீட்டுடன் தொடர்புடைய ஆபத்துகள் ஆகியன குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 40 பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

08-1-2024 அன்று 'பெண்களுக்கான மாதவிடாய் பெருமை மற்றும் சுகாதார மேலாண்மை என்ற தலைப்பில் தருமபுரியிலுள்ள ஹேப்பி பீரியட்ஸ் மற்றும் ஹெல்த்தி யூட்ரஸ் அறக்கட்டளையில் சுகாதாரக் கல்வியாளர் திரு. எஸ். சாய்குமார் அவர்களால் விழிப்புணர்வு வழங்கப்பட்டது. அவர் தன்னுடைய விளக்க உரையில், மாதவிடாய்க்கான இயற்கை தயாரிப்புகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் மற்றும் இரசாயனத் தயாரிப்புகளைப் பயன்படுத்தும்போது ஏற்படும் பல்வேறு சிக்கல்கள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன. மொத்தம் 229 மாணவியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

07-02-2024 160 'நான் முதல்வன் நிரல் திருவிழா' என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி பட்டறை நடைபெற்றது. இந்நிகழ்வில் தஞ்சாவூர் பான்செக்கர்ஸ் மகளிர் கல்லூரியின் தொழில் முனைவோர் மேம்பாட்டு மைய ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.புனிதாதேவி அவர்கள் சிறப்புரையாற்றினார். இப்பயிற்சி பட்டறையானது மாணவியர்களுக்குத் தொழில் திட்ட அறிக்கையை உருவாக்குவது மற்றும் உடனடியாகத் தொழில் தொடங்குவதற்குப் பொருத்தமான ஒரு வணிக முயற்சியை எவ்வாறு அடையாளம் காண்பது போன்ற ஆலோசனைகள் வழங்குவதாக அமைந்தது. இந்நிகழ்ச்சியில் மொத்தம் 276 மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள்.

08-02-2024 அன்று 'ஜி.எஸ்.டி கணக்கீடு' என்ற தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இதில் ஜடாயு சாப்ட்வேர் டெக்னாலஜியின் நிர்வாக இயக்குநர் டாக்டர் கோகுல்ராஜ் சுந்தர், திருமதி சிவபால ராமச்சந்திரன், ஜடாயு சாப்ட்வேர் டெக்னாலஜி நிறுவனத்தின் பயிற்சியாளர்கள் டேலி (Tally)யைப் பயன்படுத்தி நிதிக் கணக்குகளைத் தயாரிப்பது மற்றும் ஜி.எஸ்.டியை எவ்வாறு கணக்கிடுவது பற்றி நேரடி விளக்கங்களுடன் பயிற்சி வகுப்புகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மொத்தம் 195 மாணவியர்கள் பங்கேற்றுப் புதிய கணக்கியல் கணினி அறிவைப் பெற்றனர்.

09-02-2024 அன்று 'போட்டோ ஷாப் (Photoshop) மற்றும் கோரல் டிரா (Corel Draw) முன்னேற்றம் மற்றும் அம்சங்கள்' என்ற தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கம் நடைபெற்றது. இப்பயிலரங்கத்தில் மூன்று சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

முதலாவதாகத் தஞ்சாவூர் இன்போ சிஸ்டம் மற்றும் கல்வி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு ஆர். பழனியப்பன், புரோகிராமர் செல்வி டி.அபிநயா அவர்களால் நவீன பயன்பாட்டில் உள்ள பல்வேறு செயலிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்த நேரடிப் பயிற்சி வழங்கப்பட்டது. இதில் மொத்தம் 188 மாணவியர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

13-02-2024 முதல் 15-02-2024 வரை 'மறுபுதுப்பித்தல் வேளாண்மை பயிற்சித் திட்டம்' என்ற தலைப்பில் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. மூன்று தினங்களும் நந்தி அறக்கட்டளை, மகேந்திரா பிரைடு வகுப்பறை, திருச்சி, திரு. பொன்னழகேந்திர ராஜா மற்றும் திருமதி தேவகி செல்லையா அவர்களால் சிறப்புரை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நவீன விவசாயத் தொழில் நுட்பம் வாயிலாக இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பது, பூச்சிக் கொல்லிகள் இல்லாத விவசாயப் பொருட்களைத் தயாரிப்பதன் மூலம் ஒட்டு மொத்தச் சமூக ஆரோக்கியத்தை மேம்படுத்துவது குறித்து மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

## இளம் அரிமா சங்கம்

அமைப்பின் ஒருங்கிணைப்பாளராக வணிகவியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் ஜெ.ஜெயக்குமாரி அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணமாக்கும், வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் விதமாக “Read & Lead” என்ற திட்டத்தை வாரம் ஒரு முறை செயலாற்றி வருகின்றனர்.

பகிர்தல் பலவகை। அறிவைப் பகிர்தல் சிறப்பு. புத்தகம் கொடுத்து அறிவைப் பகிரும் விதமாகப் புத்தகங்களைச் சேகரித்துத் தினம் ஒரு புத்தகம் வீதம் தேவை உள்ளோருக்குப் புத்தகங்களை அளித்துள்ளனர். கல்லூரி நூலகத்திற்கும் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. தீபாவளியைக் கொண்டாடும் விதமாக நல்ல நிலையில் உள்ள உடைகளைச் சேகரித்து அருகில் உள்ள நலிந்தோருக்கு உடைகள் மற்றும் சத்தான உணவுகள் வழங்கப்பட்டது.

மாணவியர் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் காமராஜர் பிறந்த நாள் சுதந்திரத் தின விழா, ராஜா மிராசுதார் மருத்துவமனையில் புற்றுநோய் விழிப்புணர்வு, வடுகபாளையம், கீழகொளத்தூர், பாப்பாநாடு கிராமங்களில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர், இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின்வழி பணி செய்தும் சிறப்பான சேவைகளை ஆற்றி வருகின்றனர்.

தஞ்சை முதியோர் இல்லத்தில் உணவு வழங்கியும் அங்குள்ள ஆதரவற்ற முதியோர்களிடம் கலந்து பேசியும் பல நிகழ்ச்சிகள் நடத்தினர்.

மேலும், இளம் அரிமா மாணவிகள் சர்க்கரை நோய், கண்தானம், எழுத்தறிவு, தற்கொலை தடுப்பு, சுகாதாரம் பேணுதல் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி உள்ளனர்.

இயற்கையைப் போற்றிப் பாதுகாக்கும் விதமாகக் கல்லூரியில் பழச் செடிகளையும், மூலிகைச் செடிகளையும் வளர்த்து வருகின்றனர்.

## ரோட்டரி சங்கம்

இச்சங்கத்தின் பொறுப்பாளராக வரலாற்றுத் துறை இணைப் பேராசிரியர் முனைவர் ஆ.மீனாட்சி அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

01.08.2023 அன்று இந்திய அஞ்சல் துறையின் மூலம் 100 மாணவிகளுக்குப் புதிய வங்கிக்கணக்குத் தொடங்கியது.

31.08.2023 அன்று தஞ்சாவூர் காவேரி ரோட்டரி சங்கம் மூலம் மாணவிகளுக்கு 100 பூச்செடிகள் வழங்கப்பட்டுக் கல்லூரியில் நடப்பட்டது.

01.09.2023 அன்று தஞ்சாவூர் காவேரி ரோட்டரி சங்கம் மூலம் மாணவிகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. நிகழ்வில் கல்லூரி முதல்வர் அ.ஜான் பீட்டர் அவர்களும் தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் மாண்புமிகு சண்.இராமநாதன் அவர்களும் கலந்துகொண்டனர்.

08.09.2023 அன்று தஞ்சாவூர் ரோட்டரி சங்கம் சார்பில் 250 மரக்கன்றுகள் வழங்கப்பட்டு கல்லூரி வளாகத்தில் நடப்பட்டது.

15.09.2023 அன்று தஞ்சாவூர் காவேரி ரோட்டரி சங்கம் மூலம் குந்தவை ரோட்டரி சங்கத்தின் பதவி ஏற்பு விழா நடைபெற்றது. நிகழ்வு கல்லூரி முதல்வர் அ.ஜான் பீட்டர் அவர்கள் முன்னிலையில் தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் மாண்புமிகு சண்.இராமநாதன் அவர்கள் பங்கேற்பில் நடைபெற்றது.

19.02.2024 அன்று கிரானரி ரோட்டரி சங்கம் தஞ்சாவூர் நடத்திய ‘பெண்ணே நீ’ என்ற தலைப்பில் JCI சுகன்யா அவர்களால் விழிப்புணர்வு உரை நிகழ்த்தப்பட்டது.

## செஞ்சுருள் சங்கம்

இச்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளராக தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் பு.இந்திராகாந்தி அவர்கள் செயல்படுகிறார்.

செஞ்சுருள் சங்கம் சார்பில் 30.08.2024 அன்று மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு வாரியம் ஏற்பாட்டில் எய்ட்ஸ் விழிப்புணர்வு கருத்துரையும் மாரத்தான் ஓட்டமும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது. மாரத்தான் ஓட்டம் சத்யா விளையாட்டுத் திடலில் தொடங்கித் தென்னகப் பண்பாட்டு மையம் வரை சென்று நிறைவுற்றது. நம் கல்லூரி மாணவிகள் மொத்தப் பரிசாக ரூ.16,000 பெற்றனர்.

05.02.2024 அன்று மாவட்ட மனநல திட்டம், தமிழ்நாடு அரசின் ‘நட்புடன் உங்களோடு திட்டம்’, கல்லூரி பகடிவதைத் தடுப்புக்குழு, மாணவி குறைதீர் மன்றம் மற்றும் செஞ்சுருள் சங்கமும் இணைந்து மாணவிகளுக்கு மனநல ஆலோசனை வழங்கப்பட்டது. ஆலோசனையை இராசா மிராசுதார் மருத்துவமனை மருத்துவர் துளசி அவர்களும் மனநல ஆலோசகர் சுகந்தி அவர்களும் வழங்கினார்கள்.

## பணிவாய்ப்புப் பயிற்றகம்

26-09-2023 செவ்வாய்க்கிழமை அன்று நம் கல்லூரி மாணவிகளின் நீண்டகால வேண்டுகோள் ஏற்கப்பட்டு, கல்லூரி முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்களின் தலைமையில் பணிவாய்ப்புப் பயிற்றகம் தொடக்கவிழா பொன்னி குளிர்மையரங்கில் நடைபெற்றது. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக நிர்வாகி அனிதா அவர்கள் சிறப்புரை வழங்கினார். துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கருத்துரை வழங்கினர். பணிவாய்ப்புப் பயிற்றகத்தின் பொறுப்பாளர்கள் முனைவர் பி.கரிகாலன், முனைவர் இரா.தமிழடியான் ஆகியோர் விழாவை முன்னின்று நடத்தினர். பயிற்றகத்தில் இணைந்து பயில விண்ணப்பித்திருந்த 93 மாணவிகள் விழாவில் பங்கேற்றனர்.

27-09-2023 அன்று பணிவாய்ப்புப் பயிற்றகத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த கட்டடத்தைத் தூய்மைப் பணியாளர்களின் உதவியுடன் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு புதுப்பிக்கும் பணி நிறைவு பெற்றது.

17-09-2023 முதல் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 2.30 மணிமுதல் 4.00 மணிவரை பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து நடைபெற்றன. பொறுப்பாளர்கள் முனைவர் பி.கரிகாலன், முனைவர் இரா.தமிழடியான் ஆகியோர் TNPSC IV பிரிவுக்கான தமிழ்த் தாள் தொடர்பான வகுப்புகளை நடத்தி வருகின்றனர்.

06-02-2024 அன்று பயிற்றக மாணவிகள் புவியியல் துறைக்கு அனுப்பப்பட்டு புவியியல் துறைத்தலைவர் முனைவர் க.பானுகுமார் அவர்களால் பருவநிலை தொடர்பான (Monsoon, rainfall, weather and climate) பாடங்கள் திரைக்காட்சி (PPT) வழியாக நடத்தப்பட்டது.

தேர்வுக்காலம் மற்றும் விடுமுறை நாட்கள் தவிர அனைத்துச் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் தொடர்ச்சியாகப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. கல்லூரியின் இளநிலை முதலாண்டு மற்றும் இரண்டாமாண்டு மாணவிகள் தவிர அனைத்து மாணவிகளும் பயிற்சியில் சேர்ந்து பயன்பெறுகின்றனர்.

## குடிமக்கள் நுகர்வோர் மன்றம்

இவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளராகப் பொருளியல் துறை பேராசிரியர் முனைவர் கி.உஷாகுமாரி அவர்கள் செயல்பட்டு வருகின்றார். அமைப்பின் சார்பில் 08.02.2024 அன்று 'உணவுப் பொருள் வீணாவதைத் தடுத்தல் அல்லது தவிர்த்தல்' என்ற தலைப்பில் மாணவிகளுக்குக் கட்டுரைப் போட்டி நடத்தப்பெற்றது. வெற்றி பெற்ற மாணவிகளுக்கு மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம் வழி சான்றிதழ் வழங்கப்பட்டது.

## கவின்மிகு தஞ்சாவூர்

சுற்றுப்புறத்தைத் தூய்மையைக் கவனத்தில் கொண்டு, வசிக்கும் இடம் மற்றும் கல்லூரி வளாகம் மட்டுமின்றித் தஞ்சாவூர் மாநகரமே தூய்மையாக 'நம்ம தஞ்சாவூர்' என்ற அழகோடு இருக்க வேண்டும் என்பதை உறுதியாகக் கொண்டு கவின்மிகு தஞ்சாவூர் அமைப்பு செயல்பட்டு வருகின்றது. அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்களாக கணிதத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் தெ. கோமதி அவர்களும், விலங்கியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் அ. இராதா அவர்களும் செயல்பட்டு வருகின்றனர். இவ்வமைப்பின் சார்பாக 29.03.2023 அன்று கல்லூரி வளாகத்தில் தூய்மைப்பணி மேற்கொள்ளப்பட்டு வளாகம் தூய்மையாக்கப் பட்டது. 03.02.2024 கல்லூரி வளாகம் மீண்டும் தூய்மை செய்யப்பட்டது. 'கிளீன் தஞ்சாவூர்' அமைப்பில் உள்ள மாணவிகள் கலந்து கொண்டு தூய்மைப் பணியைத் தன்னார்வத்துடன் சிறப்பாகச் செய்தனர்.

## எக்ஸ்னோரா

இவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளராகத் தாவரவியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் வீ.லதா, ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர் ச.க.வெண்ணிலா ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர். இவ்வமைப்பின் சார்பாக 21.06.2023 அன்று சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது. 21.12.2023 அன்று சிறுதானிய உணவுத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. 20.01.2024 அன்று புத்தகத் திருவிழாவில் மாணவிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## இளையோர் செஞ்சிலுவைச் சங்கம்

அமைப்பின் ஒருங்கிணைப்பாளராக விலங்கியல்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பி. சரபோஜி அவர்கள் செயல்பட்டுவருகிறார். அமைப்பின் சார்பாக 25.01.2023 அன்று வாக்காளர் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. 03.02.2023 அன்று விவேகானந்தர் தஞ்சைக்கு வருகைபுரிந்த நாள் நிகழ்வு நடைபெற்றது. 10.03.2023 அன்று தூய்மை இந்தியா இயக்கத்தின் சார்பில் நம் மாணவிகளால் தஞ்சை பெரிய கோயிலில் தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. 08.05.2023 அன்று போதை பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு மற்றும் செஞ்சிலுவைச் சங்க நாள் நிகழ்வு நடைபெற்றது. 05.02.2024 அன்று சாலை பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. 02.04.2024 அன்று வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்வு புதிய தலைமுறை தொலைகாட்சியின் சார்பில் நடைபெற்றது. நிகழ்வுகளில் மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் பங்குபெற்றனர்.

## அறிவியல் கழகம்

13.09.2023 அன்று உலகசுற்றுச்சூழல் தினக் கருத்தரங்கம் மற்றும் பயிலரங்கம் நடைபெற்றது. நிகழ்வில் மருத்துவர் இராதிகா மைக்கேல் எம். எஸ் ஸ்டீபன் நாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். 300 மாணவிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

25.09.2023 அடர்காடுகள் மேம்பாடு நிகழ்வு நடைபெற்றது. திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன் அவர்களுடன் வட்டாட்சியர் மற்றும் ஊரக வளர்ச்சி அலுவலர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். 1000 மாணவிகள் கலந்துகொண்டனர்.

1.10.2023 அன்று 'தூய்மை இந்தியா' என்பதைப் பொருண்மையாகக் கொண்டு பொது இடங்கள் தூய்மை செய்யப்பட்டன. துணைமேயர் அஞ்சுகம் பூபதி அவர்களும் மாநகராட்சி நகர்நல அலுவலர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

4.10.2023 அன்று வனவிலங்கு பாதுகாப்பு தினக் கருத்தரங்கம் நடத்தப்பெற்றது. செங்கிப்பட்டி வேளாண் கல்லூரி முதல்வர் திரு.வேலாயுதம் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

13.10.2023 அன்று உலக வனவிலங்கு தினத்தை முன்னிட்டு நம் கல்லூரி மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. நிகழ்விற்கு முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர், அவர்கள் தலைமை வகித்தார். தேர்வு நெறியாளர் முனைவர் தெ. மலர்விழி, மாவட்ட வன அலுவலர் திரு. அகில் தம்பி, தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட நிர்வாகிகள் லெ.முருகன், ராஜசேகர், மற்றும் விலங்கியல் துறைப் பேராசிரியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

19.10.2023 அன்று உலக வனவிலங்கு விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. மாவட்ட வன விலங்கு அலுவலர் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

## மகளிர் ஆயம்

அமைப்பின் ஒருங்கிணைப்பாளராக தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் ம.கண்ணம்மாள் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

15.09.2023 அன்று தஞ்சாவூர் விக்டரி லயன் சங்கத்துடன் இணைந்து சமூகநீதி நாள் பேரணி நடத்தப்பட்டது. நிகழ்வில் தஞ்சை மாநகர மேயர் மாண்புமிகு சண்.இராமநாதன் அவர்கள் கலந்துகொண்டார்கள்.

21.09.2023 அன்று இவ்வமைப்போடு மக்கள் நல்வாழ்வுத்துறை மாவட்ட குடும்பநலச் செயலகம் இணைந்து மாணவிகளுக்கு இளம் வயது திருமணங்கள் மற்றும் இளம் வயது கருத்தரித்தல் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடத்தப்பெற்றது. நிகழ்வில் மருத்துவக்கல்லூரி முதல்வர் ல.பாலாஜிநாதன் மருத்துவர் இராஜராஜேஸ்வரி மற்றும் சமூக நல ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

08.10.2023 இவ்வமைப்புடன் பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் இணைந்து 'பாலின சமத்துவம்' என்ற விழிப்புணர்வு நிகழ்வை சமூக நல வாரியம் நடத்தியது. நிகழ்வில் ஒருங்கிணைத்த சேவை மைய நிர்வாகி திருமதி எம்.விமலா அவர்கள் கலந்து கொண்டார்.

## யோகா சங்கம்

இவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளராக விலங்கியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் அ.இராதா அவர்கள் செயல்பட்டு வருகிறார். 21.06.2023 அன்று சர்வதேச யோகா தின விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பெற்றது. நிகழ்வில் 450 இளங்கலை மற்றும் முதுகலை மாணவியர் பங்குகொண்டு பயன்பெற்றனர். நிகழ்வில் தஞ்சாவூர் மனவளக்கலை அறக்கட்டளை பயிற்சியாளர்கள் திருவாளர்கள் பரமேஸ்வரி, சித்ரா, சுமதி, மீனாட்சி சுந்தரம் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சி வழங்கினர்.

## பகடிவதைத் தடுப்பு மற்றும் மாணவியர் குறைதீர் மன்றம்

அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்களாக தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் பு.இந்திராகாந்தி மற்றும் ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியர் திருமதி சௌ.சுஜித்ரா அவர்களும் செயல்பட்டு வருகின்றனர்.

இவர்களுடன் விலங்கியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் பெ.தங்கமதி (முதுநிலை விடுதி இணைக் காப்பாளர்), பொருளியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் அ.மெகருனிசா பேகம் (இளநிலை விடுதி இணைக்காப்பாளர்) ஆகியோர் உறுப்பினர்களாகச் செயல்பட்டு வருகின்றனர். 08.08.2023 அன்று 'பொது இடங்களில் பெண்களின் உரிமைகள்' பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது. வழக்கறிஞர் என்.மருதையன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார்கள்.

05.09.2023 அன்று பெண்மொழி-படைப்பாக்கப் பயிலரங்கம் நடைபெற்றது. நிகழ்வில் எழுத்தாளர் சசி.மு.குமார் அவர்களும், ஆவணப்படத் தயாரிப்பாளர் செந்தில்ராம் அவர்களும், நன்நம்பிக்கை பேச்சாளர் கவிஞர் எம்.ஆர்.ஜெயநிதி அவர்களும் பற்கேற்றுச் சிறப்பித்தனர்.

05.02.2024 அன்று மாவட்ட மனநலத் திட்டம், தமிழ்நாடு அரசின் 'நட்புடன் உங்களோடு' திட்டம், செஞ்சுருள் சங்கம் ஆகியவை இணைந்து 'மன நலன்' என்ற பொருண்மையில் விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பெற்றது. நிகழ்வில் இராசா மிராசுதார் மருத்துவமனை மருத்துவர் துளசி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

## போதைப் பொருள் தடுப்பு மன்றம்

போதைப் பொருள் தடுப்பு மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர்களாக பொருளியல் துறைத் தலைவர் முனைவர் தெ.மலர்விழி, கணிதத்துறைத் தலைவர் முனைவர் வி.வினோபா, தாவரவியல் துறைத் தலைவர் முனைவர் கோ.சாந்தி அவர்களும் செயல்பட்டு வருகின்றனர். 05.01.2024 அன்று போதைத் தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது கருத்தரங்கில் 100 இளங்கலை மற்றும் முதுகலை மாணவியர் கலந்துகொண்டனர். நிகழ்வில் மருத்துவக்கல்லூரி முதல்வர் மருத்துவர் மரு.பாலாஜிநாதன், மனநலத்துறைத் தலைவர் மருத்துவர் மீனாட்சி, மருத்துவர் விஜயலஷ்மி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## இணையக் குற்றங்கள் பாதுகாப்பு அமைப்பு

வளர்ந்து வரும் இணைய பயன்பாட்டுச் சூழலில் மாணவியர் எவ்வாறு இணையத்தைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவது என்கிற நோக்கத்தை மையமாகக் கொண்டு இந்த அமைப்பு செயல்படுகிறது. அமைப்பின் ஒருங்கிணைப்பாளராகக் கணினி அறிவியல் துறை உதவிப்பேராசிரியர் திருமதி வே.கயல்விழி அவர்கள் செயல்பட்டு வருகின்றார். 12.07.2023 அன்று அமைப்பின் சார்பாக 'இணையப் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு' என்கிற பொருண்மையில் புத்தாக்க நிகழ்ச்சி (Orientation Program) நடைபெற்றது. சாணக்கியா அகாடமியைச் சார்ந்த முனைவர் கார்த்திக் அவர்கள் சிறப்புரையாளராகக் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

28.02.2024 அன்று பேராசிரியர் அ.திருமலைராஜ் அவர்கள் 'Data Stealing and Cyber Security' என்ற பொருண்மையில் விழிப்புணர்வு கருத்துரையை வழங்கினார்.

# சுற்றுச் சூழல் மன்றம்

இக்கழகத்தின் ஒருங்கிணைப்பாளராக ஆங்கிலத் துறை இணைப் பேராசிரியர் முனைவர் ச.ச.நிர்மலா அவர்கள் செயல்பட்டு வருகிறார். 14.09.2023 அன்று நடந்த சுற்றுச்சூழல் கல்வி அறிவியல் மன்றம், நாட்டு நலப்பணித் திட்ட கழகங்கள் இணைந்து நடத்திய ‘ஓசோன் தின’ விழாவினையொட்டி ஓவியம் மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டதில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவிகள் பங்கு பெற்றனர்.

15.09.2023 அன்று உலக ஓசோன் தின கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக மருத்துவர் திருமதி ராதிகா மைக்கேல் மற்றும் மாவட்ட கருவூல அலுவலர் ஜி.கணேஷ்குமார் ஆகியோர் ஓசோன் பாதுகாப்பு குறித்துச் சிறப்புரையாற்றினார்கள். ‘‘துளிர்’’ மாத இதழ் ஆசிரியர் திரு. எஸ்.டி.பாலகிருஷ்ணன் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநிலச் செயலாளர் திரு எம்.எஸ்.ஸ்டீபன் நாதன் அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு ஓசோன் படலத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி உரையாற்றினர்.

14.02.2024 அன்று சுற்றுச்சூழல் கல்விக் கழகம் சார்பில் மரம் நடும் விழாவானது ஸ்ரீசரஸ்வதி வித்யாலயா பள்ளியில் நடைபெற்றது. அதில் 6ஆம் வகுப்பு மாணவிகளுக்கு இளம் வயதிலேயே மரம் வளர்ப்பதின் முக்கியத்துவத்தை விளக்கும் நோக்கில் வினாடிவினா போட்டி நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன. பின்பு மாணவிகளுக்கு மரக்கன்றுகள் நடக் கற்றுத் தரப்பட்டது.

04.03.2024 அன்று சுற்றுச்சூழல் மற்றும் உலக வன பாதுகாப்பு தினவிழாவையொட்டி கருத்தரங்கம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக பான் செக்கர்ஸ் கல்லூரியின் துணை முதல்வர், கலைவாணி அவர்கள் ‘வன விலங்கு பாதுகாப்பில் டிஜிட்டல் கண்டுபிடிப்புகளை ஆராய்தல்’ என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். மருத்துவ அலுவலர் மருத்துவர் வி.எஸ்.வெங்கடேஷ் அவர்கள் ‘ஆரோக்கியத்தை மேம்படுத்தும் சுற்றுச்சூழல் சவால்கள்’ என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். ‘கிளீன் தஞ்சாவூர்’ என்ற இயக்கத்தின் உறுப்பினரும் மற்றும் நம் கல்லூரியின் முன்னாள் மாணவியுமான திருமதி கல்பனா சண்முகசுந்தரம் அவர்கள், உலக ஓசோன் தினத்தையொட்டி உலகப் பல்லுயிர் பேணுதல் பற்றி விழிப்புணர்வு உரையை நல்கினார்.

## கல்லூரி சின்னத்தை வரைந்து உருவாக்கியவர்



1966–1969 மற்றும் 1976–1980 ஆகிய ஆண்டுகளில் இக்கல்லூரியில் பணியாற்றியவர் தமிழ்த்துறை பேராசிரியர் ஆ.செ.மகாலெட்சுமி இவர் மிக நன்றாக ஓவியம் வரையக்கூடிய திறன் உள்ளவர்.

அப்போதைய கல்லூரிக் கல்வி இயக்குநர் திரு சையத் யாகூப் அவர்களும் சென்னைப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களும் இவரது ஓவியத்திறனைக் கண்டு பாராட்டியதாக நினைவு கூரும் இவர், அப்போதைய கல்லூரி முதல்வர் செல்வி சி.பத்மாவதி அவர்களின் கருத்துக்களை உள்வாங்கி இக் கல்லூரியின் சின்னத்தை வரைந்தார். பின்னர் பிளாக் தயாரிக்கப்பட்டு டிரெடில் வகை அச்சு இயந்திரங்களின் மூலம் அச்சிடப்பட்டு பயன்படுத்தப்பட்டது.

2023–2024ஆம் கல்வியாண்டில் கல்லூரி முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்களின் ஆலோசனையின்படி இச்சின்னத்தை கணினிவரைகலை வழியாக வரைந்து கல்லூரி பெயருடன் மேம்படுத்தப்பட்டது. கணினி வரைகலையில் சின்னத்தை ஆக்கம் செய்தவர் புகைப்படக் கலைஞர் த.துரை அவர்கள்.

# கல்லூரிப் பேரவை

நீரும் மண்ணும் நிறைந்து மணக்கும் மருதம் சூழ்ந்த தஞ்சையில் விஜயாலயச் சோழன் வழிவந்த சோழர்குல இளவரசி குந்தவை நாச்சியாரின் பெயர் தாங்கி நிற்கும் எம் கல்லூரியின் பேரவையானது 2023-2024ஆம் கல்வியாண்டில் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

பேரவையின் முதல் நிகழ்வாகச் சுதந்திர தின விழாவானது 15.08.2023 அன்று கொண்டாடப்பட்டது. பெற்றோர் ஆசிரியர்கழக நிதியிலிருந்து கட்டப்பட்ட புதிய கொடிமர மேடை திறப்புவிழா மற்றும் சுதந்திரதின விழா கொடியேற்றம் கல்லூரி முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் நிதி முனைவர் பா.சிந்தியாசெல்வி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

26.01.2024 அன்று குடியரசு தினவிழா நடைபெற்றது. முதல்வர் அ.ஜான் பீட்டர் அவர்கள் கொடியேற்றித் தலைமை உரை ஆற்றினார்கள். தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது. தாவரவியல் இணைப்பேராசிரியர் கோ.சாந்தி அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்.

இக்கல்வியாண்டில் பேரவை உறுப்பினர்கள் வகுப்பு பிரதிநிதிகளால் 25.09.2023 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாணவப் பேரவை பிரதிநிதிகளாக மூன்றாமாண்டு வணிகவியல் துறை மாணவி செல்வி அ.தான்யா பேரவைத் தலைவியாகவும், புள்ளியியல் துறை இரண்டாமாண்டு மாணவி செல்வி ர.சோனா அகல்யா பேரவைத் துணைத் தலைவியாகவும், தமிழ்த்துறை இரண்டாமாண்டு மாணவி செல்வி இரா.ரமா பேரவைச் செயலராகவும், வேதியியல் துறை முதலாமாண்டு மாணவி செல்வி ச.ஜீவா பேரவை இணைச் செயலராகவும், தமிழ்த்துறை முதுகலை முதலாமாண்டு மாணவி செல்வி விஜய சாந்தி பேரவை மாணவப் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

14.12.2023 அன்று மாணவியர் பேரவை தொடக்க விழா மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவியர் பொறுப்பாளர்களுக்கு தலைமைப் பண்பு பயிற்சி முகாம் நடைபெற்றது.

விழாவில் முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்கள் தலைமை தாங்கி மாணவியர் பொறுப்பாளர்களை பொறுப்பில் அமர்த்தி வாழ்த்தி பேசினார்கள். பேரவை மாணவியர் தலைவர் அ.தான்யா, துணைத் தலைவர் ர.சோனா அகல்யா, செயலாளர் இரா.ரமா, இணைச்செயலர் ச.ஜீவா, பொருளாளர் விஜயசாந்தி ஆகியோரும் தொடர்ந்து வகுப்பு பிரதிநிதிகளும் பிரமாணம் செய்து பொறுப்பேற்றுக் கொண்டனர்.

நிகழ்விற்குச் சிறப்பு விருந்தினராக லயன்ஸ் மாவட்ட முன்னாள் ஆளுநர் பிரேம் பங்கேற்றுச் சிறப்புரை வழங்கினார். தனது சிறப்புரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவிகளுக்குத் தலைமை பண்பு குறித்த ஆக்கங்களான இலக்கை தேர்ந்தெடுத்தல், நேர மேலாண்மை உள்ளிட்ட கருத்துகள் முன்வைத்து உரை நல்கினார்கள். விழாவின் வரவேற்புரையைக் கல்லூரி பேரவைத் துணைத் தலைவரும் ஆங்கிலத் துறைத் தலைவருமான முனைவர் ரமா பிரியா அவர்கள் வழங்கினார். தேர்வு நெறியாளர் முனைவர் தெ. மலர்விழி அவர்கள் நன்றி கூறினார்கள். விழா ஏற்பாடுகளை ஆங்கிலத்துறைப் பேராசிரியர்கள் செய்திருந்தனர். நிகழ்வில் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# மன்றக் கூட்டங்கள்

2023-2024ஆம் கல்வியாண்டில் அனைத்துத் துறைகளிலும் துறைசார் சிறந்த வல்லுநர்களைக்கொண்டு கல்லூரி முதல்வர் அ.ஜான் பீட்டர் அவர்களின் தலைமையில் மன்றக் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன.

**தமிழ்த்துறையின் மன்றக் கூட்டம்** 19.02.2024 அன்று மன்றக்கூட்டம் நடைபெற்றது. நிகழ்வில் தமிழ்த்துறை இளங்கலை மற்றும் முதுகலை மாணவியர் கலந்துகொண்டு பயனடைந்தனர். மாணவிகளின் அறிவுக்குத் திறன்படு உரையாக முனைவர் அ.கலீல்ரகுமான், காதர் மொய்தீன் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் அவர்கள் 'நாஞ்சில் நாட்டு நாவல்கள்' என்ற பொருண்மையில் உரை நல்கினார்கள்.

தஞ்சாவூர், மன்னர் சரபோஜி கல்லூரியின் இணைப்பேராசிரியர் சோ.கண்ணதாசன் 'தமிழ் எழுத்து பயில்' என்ற தலைப்பில் உரையாற்றினார்கள். மாணவிகள் நாஞ்சில் நாட்டு மண்மணத்தோடு தமிழை எவ்வாறு பிழையின்றி நேர்த்தியாய் எழுதுவது என்பதை அறிந்தனர்.

**ஆங்கிலத் துறையின்** மன்றக் கூட்டம் 16.03.2024 அன்று நடைபெற்றது. மன்னர் சரபோசி கல்லூரி ஆங்கிலத்துறைத் தலைவர் முனைவர் ஏ.அருணாசலம் அவர்கள் கலந்துகொண்டு இளங்கலை மாணவிகளுக்கு "Literature - A Prismatic Panorama of Human Life' என்ற தலைப்பிலும் முதுகலை மாணவிகளுக்கு "Narrative Techniques : An Introduction' என்ற தலைப்பிலும் உரையாற்றினார். பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

**வரலாற்றுத் துறை** மன்றக் கூட்டம் 16.02.2024 அன்று நடைபெற்றது. இளங்கலை மற்றும் முதுகலை மாணவிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர். கருத்தாளராக முனைவர் பு.வேம்பரசி, இணைப்பேராசிரியர் முன்னாள் வரலாற்றுத்துறைத் தலைவர், குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த) அவர்கள் 'பெண்களின் முன்னேற்றத்திற்கான சமநிலை' என்ற தலைப்பிலும் 'வலிமைப் பெண்கள் வலிமை உலகம்' என்ற தலைப்பிலும் உரையாற்றிப் பெண்ணுலகைப் பெண்களுக்கு அறியத்தந்தார்கள்.

**பொருளியல் துறையின்** மன்றக்கூட்டம் 20.02.2024 அன்று நடைபெற்றது. நிகழ்வில் இளங்கலை மற்றும் முதுகலை மாணவிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர். இந்தியாவின் வளமிகு பொருளியல் கொள்கை வலிமையான இந்தியாவை உருவாக்கும் மாணவிகளின் பொருளியல் திறன் குறித்த சிந்தனை ஆக்கத்தை விரிவுபடுத்தும் வகையில் 'The Role of Health and Education in Indian Economy' என்ற தலைப்பில் எஸ்.சங்கீதா, உதவிப்பேராசிரியர் மற்றும் பொருளியல் துறைத் தலைவர் அ.வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீபுஷ்பம் கல்லூரி பூண்டி அவர்கள் உரை நல்கினார். இதே நாளில் "Area of Reasearch in Economics' என்ற தலைப்பில் முனைவர் ஆர்.கோமதி இணைப்பேராசிரியர் (ஓய்வு), பொருளியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். மாணவிகள் பொருளியல் திறம் குறித்த புரிதலைப் பெற்றனர்.

**வணிகவியல் துறையின்** மன்றக் கூட்டம் 01.03.2024 அன்று நடைபெற்றது. நிகழ்வில் இளங்கலை மற்றும் முதுகலை மாணவிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர். 'வர்த்தகத்தின் டிஜிட்டல் இயக்கவியல் பற்றிய நுண்ணறிவு' என்ற பொருண்மையான உரையினை திரு. செந்தில்நாதன், வணிகத் தலைவர், செல்வி எஸ்.ஷ்யாமளா, கோட்ட மையம், தஞ்சாவூர் ஆகியோர் வழங்கினர். வர்த்தகத்தின் தற்காலச் சூழல் மற்றும் டிஜிட்டல் வணிகம் குறித்த புரிதலையும் அதன் நுட்பத்தையும் மாணவிகள் அறிந்துகொள்ளும் வகையில் நிகழ்வு அமைந்தது.

**வணிக நிர்வாகவியல் துறையின்** மன்றக் கூட்டம் 15.02.2024 அன்று நடைபெற்றது. 'குரூப் 4 தேர்வுகளுக்கான தயாரிப்புகள்' என்ற

பொருண்மையில் நடைபெற்ற நிகழ்வில் கருத்தாளராக, சென்னை ஆஸ்கார் இன்ஸ்டிடியூட் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) வழிகாட்டியான திரு.ரவிசங்கர் அவர்கள் கலந்து கொண்டு உரை நல்கினார். சமகாலச் சூழலில் போட்டித் தேர்வினை எவ்வாறு அணுகுவது என்பதை அறிந்துகொள்ளும் விதமாக உரை அமைந்தது. போட்டித்தேர்வு குறித்த ஒரு விழிப்புணர்வு அமர்வாகவும் இது அமைந்திருந்தது.

**கணிதத்துறை** மன்றக்கூட்டம் 19.03.2024 அன்று 'Application of Mathemetics : Cryptography' என்ற பொருண்மையில் முனைவர் பி.விஜயகிருஷ்ணன், உதவிப்பேராசிரியர் கணிதத்துறை, அஞ்சலை அம்மாள் பொறியியல் கல்லூரி அவர்கள் கலந்துகொண்டு உரை நல்கினார். உரையினை இளநிலை மற்றும் முதுநிலை மாணவியர் கேட்டுப் பயனடைந்தனர்.

**கணினி அறிவியல் துறையின்** மன்றக் கூட்டம் 01.03.2024 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் இளநிலை மற்றும் முதுநிலை மாணவியர் கலந்துகொண்டு பயனடைந்தனர். 'Cyber Security' என்ற பொருண்மையில் பி.கோமதி பெரியார் மணியம்மைப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் அவர்களும், 'AI Tool' என்ற பொருண்மையில் கணினி அறிவியல் துறை இணைப்பேராசிரியர், முனைவர் மோகன்குமார், மன்னர் சரபோஜி கல்லூரி அவர்களும் கலந்துகொண்டு உரை நல்கினார்கள். வளர்ந்து வரும் தொழில்நுட்ப உலகின் வளர்ச்சி மற்றும் செயற்கை நுண்ணறிவு பற்றிய ஒரு புரிதலை மாணவிகள் அறிந்து கொள்ளும் வகையில் உரையாளர்களின் உரை அமைந்திருந்தது.

**வேதியியல் துறையின்** மன்றக் கூட்டம் 04.03.2024 அன்று நடைபெற்றது. நிகழ்வில் முனைவர் ஜி.வி.பாண்டியன் இணைப்பேராசிரியர் மற்றும் வேதியியல் மற்றும் உயிர்வேதியியல் துறைத்தலைவர் டி.பி.எம்.எல். கல்லூரி, பொறையாறு அவர்கள் ‘ஆய்வு பாதுகாப்பு நடவடிக்கைகள்’ என்ற தலைப்பில் உரை நல்கினார், ‘நானோ அறிவியலில் வளர்ந்து வரும் போக்குகள்’ என்ற பொருண்மையில் முனைவர் ஆர்.மலர்விழி இணைப்பேராசிரியர், வேதியியல் துறை, அரசு கலைக் கல்லூரி திருச்சி, அவர்கள் கலந்துகொண்டு உரை நல்கினார்கள். மாணவிகள் பங்குபெற்றுப் பயனடைந்தனர்.

**இயற்பியல் துறையின்** மன்றக் கூட்டம் 21.02.2024 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் இளநிலை மற்றும் முதுநிலை மாணவியர் கலந்துகொண்டு பயனடைந்தனர். முனைவர் அ.ஜானகி, இணைப் பேராசிரியர், கலைஞர் கருணாநிதி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, புதுக்கோட்டை அவர்கள் "Physics in everyday life', "Vibrational Spectroscopy' என்ற தலைப்புகளில் உரை நல்கினார்.

**தாவரவியல் துறையின்** மன்றக்கூட்டம் 16.02.2024 அன்று நடைபெற்றது. 'How to Excel in Competitive Examination' என்ற பொருண்மையில் திரு. ஆர்.மணிமாறன் போட்டித்தேர்வுப் பயிற்றுனர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். மற்றும் திரு கே.சுரேஷ்குமார், மேலாளர், அக்ரி டெக் மேனேஜ்மெண்ட் அவர்கள் 'Business Opportunity in Commercialization of Plant Product' என்ற தலைப்பில் உரைநல்கினார்கள் உரை மாணவிகளுக்குப் பயனுடையதாக அமைந்தது.

**விலங்கியல் துறையின்** மன்றக் கூட்டம் 20.02.2024 அன்று நடைபெற்றது. எழுத்தாளர் அகிலா கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கலந்துகொண்டு ‘தொல்குடி மரபியல்’ என்ற பொருண்மையில் கருத்துரை வழங்கினார்கள். மருத்துவர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தன்னம்பிக்கை உரையை நிகழ்த்தினார்கள். முனைவர் அனிதா மார்க்கரேட், பேராசிரியர், உயிர்நுட்பவியல் துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி அவர்கள் ‘வரிக்குதிரை மீன்கள் ஆராய்ச்சி மற்றும் மருந்து உற்பத்திக்கு ஒரு சிறந்த விலங்கு மாதிரி’ என்ற தலைப்பில் உரை நல்கினார்கள். பெண் தொழில் முனைவோர்களுக்குப் ‘பட்டுப்புழு வளர்ப்பு ஒரு சிறந்த திறவுகோல்’ என்ற பொருண்மையில் பேராசிரியர் பி.அனிதா, விலங்கியல் துறை, சீதாலெட்சுமி இராமசாமி கல்லூரி, திருச்சிஅவர்கள் உரை நல்கினார்கள்.

**புள்ளியியல் துறையில்** மன்றக்கூட்டம் 28.03.2024 அன்று நடைபெற்றது. முனைவர் ஆர்.ஆறுமுகம், பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம். தஞ்சாவூர் அவர்கள் "Navigating features : A roadmap to success for the statistician' மற்றும் "Basic Analysis' என்ற தலைப்புகளில் உரையாற்றினார்.

**புவியியல் துறையின்** மன்றக்கூட்டம் 15.02.2024 அன்று நடைபெற்றது. தாவரவியல் துறை உதவிப் பேராசிரியர் மு.பூமிநாதன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். முதுகலை மற்றும் இளநிலை மாணவியர் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

# கல்லூரி ஆண்டு விழாக்கள்

## விளையாட்டு விழா

06.03.2024 அன்று முற்பகல் விளையாட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமை வகித்தார்கள். தேர்வு நெறியாளர் முனைவர் தெ.மலர்விழி முன்னிலை வகித்தார். விலங்கியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் அ.இராதா வரவேற்புரை ஆற்றினார்.

கல்லூரி உடற்கல்வி இயக்குநர் திருமதி செ.தேன்மொழி உடற்கல்வி அறிக்கையை அளித்தார். திருமதி சி. சுபாஷ்காந்தி வேதாரண்யம் காவல் துணைக் கண்காணிப்பாளர் (வேதாரண்யம் உட்கோட்டம்) அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று அணிவகுப்பினைப் பார்வையிட்டு மரியாதையை ஏற்றுக்கொண்டார். தடகளப் போட்டிகள் மற்றும் அணி விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. தேசிய, மாநில பல்கலைக் கழக அளவில் விளையாட்டுத்துறையில் சாதனை படைத்த மாணவிகளுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன.

மாணவிகள் தங்கள் திறமைகளை அடையாளம் கண்டு அத்துறையில் சாதிக்க தன்முனைப்பு உடையவர்களாய் இருக்க வேண்டும். இன்றையச் சூழல் பல்வேறு வழிகாட்டுதல்களை மாணவிகளுக்கு வழங்குகிறது அதனைச் சரியாகப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். பெற்றோர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். வறுமையைக் கண்டு அஞ்சக்கூடாது உங்களின் திறனால் அவற்றை வென்றிடக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று வாழ்த்துரை வழங்கினார்.

நிகழ்ச்சியைத் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் ம. கண்ணம்மாள் தொகுத்து வழங்கினார். விளையாட்டுத்துறை மாணவச் செயலர் பிரதீபா நன்றி கூறினார். விழாவில் அனைத்துத் துறை மாணவிகள் பேராசிரியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



## சேவை மன்றங்கள் விழா

06.03.2024 அன்று பிற்பகல் சேவை மன்றங்கள் விழா நடைபெற்றது. நிகழ்விற்கு முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராகத் தேர்வு நெறியாளர் முனைவர் தெ. மலர்விழி முன்னிலை வகித்தார். வணிகவியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் அ.கண்மணிஜோன் ஆப் ஆர்க் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சித் தொகுப்பைத் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் பு.இந்திராகாந்தி வழங்கினார். நாட்டு நலப்பணித்திட்டம், சமூக சேவைக்குழு, இளம் அரிமா சங்கம், இளையோர் செஞ்சிலுவைச் சங்கம், வேலைவாய்ப்பு ஆலோசனை மையம், பணிவாய்ப்புப் பயிற்றகம், தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம், செஞ்சுருள் சங்கம், குடிமக்கள் நுகர்வோர் மன்றம், கவின்மிகு தஞ்சை, தேசிய ஒருமைப்பாட்டு சமிதி, நுண்கலை மன்றம், எக்ஸ்னோரா, அறிவியல் கழகம், ரோட்டரி சங்கம், மகளிர் ஆயம், சுற்றுச்சூழல் மன்றம், போதைப் பொருள் தடுப்பு மன்றம், இணையக் குற்றங்கள் பாதுகாப்பு அமைப்பு பொலிவுறு குந்தவை, பகடிவதைத் தடுப்புக்குழு, மாணவியர் குறைதீர் மன்றம் மற்றும் யோகா சங்கம் என இவ்வமைப்புகளின் பொறுப்பாளர்கள் அறிக்கையை வாசித்தார்கள்.

ஒவ்வொரு அமைப்பிலும் சிறப்பிடம் பெற்ற மாணவிகளுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டது. தியாக இளங்கோ அவர்கள், ''மாணவிகள் சுயநலமன்று பொதுநலமுடையவர்களாய் தங்களை உருவாக்கிக் கொள்ளவேண்டும். சேவை மனப்பான்மை தம்மை உயர்த்தும் திறனுடையது; தன்னால் இயன்ற உதவிகளைச் செய்பவர்களாக விளங்க வேண்டும்'' என வாழ்த்திப் பேசினார்.

சிறப்பு விருந்தினர் திரு.சுதர்சனன், ''பேசுவதில் வல்லமையும், ஆற்றலும் உடையவர்களாகிய மாணவிகள் தன்னலம் குறைத்து பொதுநலம் விரும்புபவர்களாக சிந்தனையை செம்மைப் படுத்திக்கொள்ள வேண்டும். கற்றவற்றை மற்றவர்களின் உயர்விற்கு பயன்படுத்த வேண்டும். உயர்ந்த சிந்தனையே நம்மை உயர்த்தும்'' என்று வாழ்த்திப் பேசினார்.

நிகழ்வின் முடிவில் வரலாற்றுத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் ஆ. மீனாட்சி நன்றி கூறினார்.

## முத்தமிழ் விழா

07.03.2024 அன்று முற்பகல் முத்தமிழ் விழா நடைபெற்றது. இந்நிகழ்விற்கு முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமை வகித்தார். தேர்வு நெறியாளர் முனைவர் தெ.மலர்விழி முன்னிலை வகித்தார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சீ. வைஜெயந்தி மாலா அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

இயற்றமிழ் என்ற பொருண்மையில் 'நகை அணி' என்ற தலைப்பில் பேசிய திருவாரூர் பட்டிமன்றப் பேச்சாளர் ''நகைச்சுவை நாவலர்'' புலவர் சண்முக வடிவேல் அவர்கள், ''பெண்கள் மதிநுட்பம் வாய்ந்தவர்கள், எவ்வளவு சிக்கலான செயல்களையும் சாதுர்யமாகச் செய்து சாதிக்க வல்லவர்கள். நகைச்சுவையோடு வாழ்க்கையை எதிர்கொண்டால் வாழ்வே அழகாகும்'' என்று பெண்களின் தனித்தன்மையையும் அவர்களின் அழகியல் மற்றும் மதிநுட்பத்தையும் பாராட்டி நகைச்சுவையோடு அரங்கை மகிழ்வித்தார்.

இசைத்தமிழ் 'அன்றும் இன்றும்' என்ற தலைப்பில் காரைக்குடி திருமதி ஆனந்தி சரவணன் இசையின் சிறப்புகளை சொல்லி ஒவ்வொரு இராகத்தின் தன்மையையும் விளக்கி, அந்த இராகத்தில் அமைந்த பாடல்களைப் பாடி மாணவிகளை மகிழ்வித்தார்.

தமிழ்த்துறை மாணவிகள் 'கண்ணகி கேட்ட நீதி' என்ற நாடகத்தை அழகாக நடித்து அரங்கை பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள். மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாணவிகள் தப்பாட்டம், நாதஸ்வரம், கரகம், சிலம்பாட்டம் போன்ற கலைகளை நிகழ்த்தி விருந்தினர்களை வரவேற்றனர்.

# நுண்கலை மன்றவிழா

08.03.2024 அன்று முற்பகல் நுண்கலை மன்ற விழா நடைபெற்றது. முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில், தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இரா.தமிழடியான் வரவேற்புரை வழங்கினார். மாண்புமிகு சண்.இராமநாதன் தஞ்சாவூர் மேயர், தஞ்சை மாநகராட்சி அவர்கள், கலந்துகொண்டு சிறப்புரையாற்றி பரிசளித்தார். தனது சிறப்புரையில், ''மாணவிகளுக்குப் பல்வேறு நலத்திட்டங்களை அரசு செயல்படுத்தி பெண்கல்விக்கு ஆக்கம் சேர்த்துவருகிறது. நீங்கள் துணிச்சலோடு அறிவைப் பெருக்கி உங்களையும் உயர்த்திக்கொண்டு நாட்டின் வளர்ச்சிக்கும் உறுதுணையாய் இருக்கவேண்டும். வெற்றியைக் கொண்டாடும் நீங்கள் தோல்வியையும் எதிர்நோக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். தோல்வியைக் கண்டு அஞ்சாதீர், பெண் ஆளுமைக்கு இராஜராஜனுக்குப் பக்கபலமாய் இருந்த குந்தவை நாச்சியாரே சாட்சி'' என்று வாழ்த்திப் பரிசளித்துச் சிறப்பித்தார்கள்.

நுண்கலை மன்ற சிறப்புரையை விஜய் தொலைக்காட்சி புகழ் ''அருங்கலையரசு'' முனைவர் சேலம் அபு அவர்கள் வழங்கினார்கள் கலகலப்பான அவரின் நகைச்சுவைப் பேச்சில் அரங்கம் மகிழ்ச்சியில் நிறைந்தது. இந்நிகழ்வுகளின் நிகழ்ச்சித் தொகுப்பைத் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் பி.கரிகாலன் வழங்கினார். இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறை மாணவியும் நுண்கலை மன்றச் செயலருமான மாணவி செல்வி மு.காவ்யா நன்றியுரை வழங்கினார்.

# விடுதிவிழா

08.03.2024 அன்று பிற்பகல் விடுதி விழா நடைபெற்றது. முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில், விலங்கியல் துறை இணைப்பேராசிரியரும் முதுநிலை விடுதி துணைக்காப்பாளருமான முனைவர் பெ.தங்கமதி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். பொருளியல் துறை உதவிப்பேராசிரியரும், இளநிலை விடுதி துணைக்காப்பளருமான முனைவர் அ.மெகருனிசா பேகம் விடுதி ஆண்டறிக்கையை வாசித்தார். சிறப்பு விருந்தினராக திருமதி பா. பூரணி, துணைக்காவல் கண்காணிப்பாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்கம் (திருவாரூர் மாவட்டம்) அவர்கள் கலந்து கொண்டு மாணவிகளுக்கு வெற்றிக்கான வாய்ப்புகள், இலக்குகள், வீட்டிற்கும் சமூகத்திற்குமாக ஆற்றிட வேண்டிய கடமைகளை குறித்து சிறப்புரை வழங்கினார். மேலும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசளித்து வாழ்த்துகளைத் தெரிவித்தார். மாணவிகள் மகிழ்வோடு பல்வேறு கலைநிகழ்ச்சி களை நிகழ்த்தினர். நிறைவாக இரண்டாமாண்டு முதுநிலை வணிகவியல் துறை மாணவியும் விடுதிச் செயலருமான செல்வி பு.தமிழ்ச்செல்வி நன்றி கூறினார்.

# நூல் வெளியீடு

பல ஆய்வுகளை மேற்கொள்ளும் பேராசிரியர்கள் ஆய்வுக்கட்டுரைகளை வழங்குவதுடன் நூல்களையும் வெளியிட்டுள்ளனர். தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் பொ. திராவிடமணி அவர்கள், 'சொல் எனும் சொல்' என்ற கவிதை நூலையும், தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் ம.கண்ணம்மாள் 'அதகளத்தி' என்ற கவிதை நூலையும், வணிக மேலாண்மைத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் கோ.சு.சுபாஷினி அவர்கள் 'Research methodology' என்ற நூலையும் வெளியிட்டுள்ளனர்.

# 37வது பட்டமேற்பு விழா

09.03.2024 அன்று 2020-2021ஆம் கல்வியாண்டில் நிறைவு செய்த மாணவிகளுக்கான 37ஆம் பட்டமேற்பு விழாவில் இளநிலையில் 1159 மாணவிகளும் முதுநிலையில் 240 மாணவிகளும் பட்டங்களைப் பெற்றனர். சிறப்பு விருந்தினராக பேராசிரியர் மு.கிருஷ்ணன், துணைவேந்தர், மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர் அவர்கள் கலந்துகொண்டு பட்டங்களை வழங்கினார்கள்.

கல்லூரி முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்கள் தேர்வுநெறியாளர் முனைவர் தெ.மலர்விழி பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் முனைவர் பு.இந்திராகாந்தி அனைத்துத்துறைத் தலைவர்கள் என அனைவரும் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

நிகழ்வில் பட்டங்களை வழங்கிய திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மு.கிருஷ்ணன், பட்டம் பெற்ற மாணவிகள் இதோடு தங்களது கல்வியை நிறுத்திக் கொள்ளாமல் தொடர்ந்து உயர்கல்வி படிக்க வேண்டும். தான் படித்த கல்வியை மற்றவர்களுக்குப் பயன்படும் வகையில் மாற்றிக் கொள்ள வேண்டும். பெண்கள் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும் என்ற காலக்கட்டத்தில் இருக்கிறீர்கள். ஆதலால் நீங்கள் அனைத்துத் துறைகளிலும் ஈடுபட வேண்டும் அதேபோல் பெண்கள் படித்த கல்வியின் மூலம் வீட்டுக்கும் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் உதவிட முன்வரவேண்டும்.

தஞ்சை தலையாட்டி பொம்மை என்பது விளையாட்டு பொருள் அல்ல, அந்த பொம்மையில் வாழ்வியல் தத்துவம் அடங்கியுள்ளது. கீழே சாய்ந்தாலும் தானாக மீண்டும் நிமிர்ந்து கொள்ளும் அதேபோல் நாம் வீழ்ந்தாலும் தன்னம்பிக்கையுடன் மீண்டும் எழ வேண்டும். இந்த பொம்மை ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டும். அதைபார்க்கும் போது நமக்கு ஒரு உந்துதல் ஏற்பட வேண்டும்.

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் கடுமையாக உழைத்ததால் நாடே அவரைக் கொண்டாடிது. அதேபோல் ஒவ்வொரு மாணவிகளும் கடுமையாக உழைத்து குடும்பத்தையும், நாட்டையும் முன்னேற்றத்திற்கு கொண்டுவர வேண்டும் எனக் கூறி மாணவிகளுக்கு வாழ்த்துதலை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

கல்லூரியில் நிறுவப் பெற்றுள்ள அறக் கட்டளைகளிலிருந்து தகுதியான மாணவி களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.



# 38வது பட்டமேற்பு விழா

10.03.2024 அன்று 2021-2022ஆம் கல்வியாண்டில் நிறைவு செய்த மாணவிகளுக்கான 38ஆம் பட்டமேற்பு விழாவில் இளநிலையில் 1035 மாணவிகளும் முதுநிலையில் 231 மாணவிகளும் பட்டங்களைப் பெற்றனர். சிறப்பு விருந்தினராக பேராசிரியர் முனைவர் வி.திருவள்ளுவன், துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் அவர்கள் பங்கேற்றுப் பட்டங்களை வழங்கினார்கள்.

நிகழ்வில் முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர், தேர்வு நெறியாளர் முனைவர் தெ.மலர்விழி, பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் முனைவர் பு.இந்திராகாந்தி, அனைத்துத்துறைத் தலைவர்கள் என அனைவரும் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப் பித்தனர். பட்டமேற்பு விழா நிகழ்ச்சி ஏற்பாட்டை முன்னாள் மாணவியர் சங்கம் செய்திருந்தது. நிகழ்வில் கலந்துகொண்டு பட்டங்களை வழங்கிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் வி.திருவள்ளுவன் அவர்கள், ‘‘அவரவர் உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவர்களே பொறுப்பானவர்கள். இந்த பட்டமேற்பு நாள் உங்கள் வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்தும் நாளாக அமைய வேண்டும்.

வேலைவாய்ப்பிற்கான தகுதி அட்டையாக பாடங்கள் அமையாமல் எதிர்காலத்தை உருவாக்கும் நாட்டின் வளத்தை முன்னேற்றத்தை உருவாக்கும் கருவியாக அமைய வேண்டும்’’ என்று வாழ்த்திப் பேசினார்கள்.

பல்கலைக்கழக அளவில் முதல் தரம் பெற்ற இரு மாணவிகள் உள்ளிட்ட தரம் பெற்ற 26 மாணவிகளுக்குப் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டன.

கல்லூரியில் நிறுவப் பெற்றுள்ள அறக் கட்டளைகளிலிருந்து தகுதியான மாணவி களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.



# 39வது பட்டமேற்பு விழா

11.03.2024 அன்று 2022-2023ஆம் கல்வியாண்டில் நிறைவு செய்த மாணவிகளுக்கான 39ஆம் பட்டமேற்பு விழாவில் இளநிலையில் 1210 மாணவிகளும் முதுநிலையில் 257 மாணவிகளும் பட்டங்களைப் பெற்றனர். சிறப்பு விருந்தினராக திருச்சிராப்பள்ளி, இந்திய மேலாண்மை நிறுவன இயக்குநர் பேராசிரியர் முனைவர் பவன்குமார் சிங், அவர்கள் கலந்துகொண்டு பட்டங்களை வழங்கினார்கள்.

நிகழ்வில் முதல்வர் முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்கள், தேர்வுநெறியாளர் முனைவர் தெ.மலர்விழி பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் முனைவர் பு.இந்திராகாந்தி அனைத்துத்துறைத் தலைவர்கள் என அனைவரும் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். பட்டமேற்பு விழா நிகழ்ச்சி ஏற்பாட்டை முன்னாள் மாணவியர் சங்கம் செய்திருந்தது. பேராசிரியர் முனைவர் பவன்குமார் சிங் அவர்கள், ''திருக்குறள் உள்ளிட்ட இலக்கிய படைப்புகளைக் கொண்ட இந்தியா, நாகரிகம் மற்றும் பாரம்பரியத்தின் அரணாக விளங்குகிறது. வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தோடு மனிதன் ஈடுகொடுத்து தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஒவ்வொரு பட்டம் பெற்ற மாணவிகள் நாட்டின் வளர்ச்சிக்கு தொடர்ந்து பெரும்பங்காற்றிட வேண்டும்'' என மாணவிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

கல்லூரியில் நிறுவப் பெற்றுள்ள அறக்கட்டளைகளிலிருந்து தகுதியான மாணவி களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

பல்கலைக்கழக அளவில் முதல் தரம் பெற்ற ஒரு மாணவி உள்ளிட்ட தரம் பெற்ற 29 மாணவிகளுக்குப் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டன.






மாணவர் பேரவைத் தொடக்க விழாவில் மாணவர் பொறுப்பாளர்களுக்குப் பதவி உறுதிமொழி ஏற்பினை முதல்வர் நடத்தி வைத்தார். பின்னர் மாணவ பொறுப்பாளர்களுக்கும் வகுப்புப் பிரதிநிதிகளுக்கும் தலைமைப் பண்பு பயிற்சி வழங்கப்பட்டது.

## கல்லூரி நாள் விழா

12.03.2024 அன்று 59ஆவது கல்லூரி நாள் விழா முதல்வர் முனைவர் அ. ஜான் பீட்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கல்லூரி மாணவியர்ப் பேரவையின் துணைத் தலைவரும் ஆங்கிலத்துறைத் தலைவர் முனைவர் இரா. ரமாபிரியா வரவேற்றார். கல்லூரி முதல்வர் அ.ஜான் பீட்டர் அவர்கள் தலைமையுரையாற்றி ஆண்டறிக்கையை வாசித்தார். தேர்வு நெறியாளர் மலர்விழி முன்னிலை வகித்தார். விழாவில் தஞ்சை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் நா.தனராஜன் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் முதலிடம் பெற்று தேர்ச்சி பெற்ற மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினார். ‘‘மாணவியர்கள் புத்திக்கூர்மை, எழுதும் ஆற்றல், யோசித்துச் செயல்படும் திறன் என பன்முகத்தன்மை உடையவர்களாகத் தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டும். சமூகத்திற்கும், குடும்பத்திற்கும் பயனுடையவர்களாய் சிறப்பாக வாழவேண்டும்’’ என்று வாழ்த்திப் பேசினார். ஏழு நாட்கள் ஒன்பது விழாக்கள் என நடைபெற்ற கல்லூரி விழாக்களில் இறுதிநாள் நிகழ்வான ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற்றது.






# நிலையற்றது

அமைதியைத் தேடினேன்
அமையவில்லை நிம்மதியை
தேடினேன் நிலைக்கவில்லை
நினைத்தேன் இவை அனைத்தும்
நிரந்தரம் இல்லை என்று!


**ம. பொன்சஹானா**
III - பி.எஸ்.சி கணிதம்



**த. மெஹாஸ்ரீ**
II - எம்.ஏ. ஆங்கிலம்



# புகைப்படத் தொகுப்பு


Kunthavai Nacchiyaar Govt. Arts
MoU Signing
30.08.2023 10:11
10.77025, 79.1275
432, Thanjavur Government I T I College Area, Arulananda Nagar
West Extension, Thanjavur, Tamil Nadu 613007, India
AUTONOMOUS
LEO CLUB
LEO
KUNTHAVAI
THANJAVUR
COLLEGE FOR(W)AUTONOMOUS THANJAVUR
சிறப்பு முகாம்
KN Govt. Arts College (W) Auto
MoU With Synergy CADD
14.02.2024 14:11
10.77022, 79.12751
CITIZEN
CONSUMER FORUM



முன்னாள் மாணவியர்
சங்கம் நடத்திய உலக
சகோதரத்துவ தினம்
பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ
பாலகிருஷ்ணன்,
சுவாமி விமூர்த்தானந்தர்
பங்கேற்பு



நான் முதல்வன் மற்றும்
வேலை வாய்ப்பு மையம்
சார்பில் நடைபெற்ற
வேலை வாய்ப்பு முகாம்
- பணி ஆணை வழங்குதல்



கலைஞர் நூற்றாண்டு விழாவில்
முனைவர் மு. இளமுருகன்
பங்கேற்பு

# பொங்கல் விழா











சேவை மன்றங்கள் விழா






செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி நல்கையில் நடைபெற்ற பாரதியார் பிறந்தநாள் விழா - பாரத மொழிகளின் திருவிழா

தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் சார்பில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறை






கணித்தமிழ்ப் பேரவைத்
தொடக்க விழா




நூல் நயம் நிகழ்வு




புள்ளியியல் தின விழா

## நுண்கலை மன்ற விழா



தஞ்சை மாநகராட்சி மேயர்
திரு. சண். இராமநாதன்,
சேலம் அபு ஆகியோர்
பங்கேற்பு



மாணவியர்
கலை நிகழ்ச்சிகள்




கல்லூரியில் நடைபெற்ற
31 ஆவது தேசிய குழந்தைகள்
அறிவியல் மாநாடு.
மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு.



பொலிவுறு குந்தவை அமைப்பின் வளாகத்தூய்மை முன்னெடுப்பிற்கான ஆலோசனை




மகளிர் ஆயம் நடத்திய சமூக நீதி நாள் பேரணி



குந்தவை ரோட்டரி சங்க மரம் நடு விழா

## முத்தமிழ் விழா



திருவாரூர் புலவர் சண்முகவடிவேல் அவர்களின் இயல் உரை




மாணவிகளின் சிலப்பதிகார நாடகம்



இசை, நடனத்தோடு வரவேற்பு



விடுதி விழா



பெற்றோர் ஆசிரியர் கழக
நிதி நல்கையில்
கட்டப்பட்ட புதிய
கொடிக்கம்பம் திறப்பு
மற்றும்
சுதந்திர தின விழா.
மேனாள் கல்லூரி முதல்வரும்
இணை இயக்குநர் (நிதி)
முனைவர் பா.சிந்தியா செல்வி
அவர்கள் பங்கேற்பு

# விளையாட்டு விழா












தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் தமிழ்த்துறை மற்றும்
வரலாற்றுத் துறை புரிந்துணர்வு ஒப்பந்தம்



200 மாணவியர் இருக்கைகள் பெறுவதன் பொருட்டு மாநிலங்களவை உறுப்பினர்
கும்பகோணம் திருமிகு கல்யாண சுந்தரம் அவர்களைச் சந்தித்த நிகழ்வு



தாவரவியல் துறை சிறுதானியத் திருவிழா




போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு NSS பேரணி



தியாகிகள் தினம்-தேசிய ஒருமைப்பாட்டு சமிதி



Total Station செயல் விளக்கம் – புவியியல் துறை



புதுப்பொலிவுடன் கூட்டுறவு அங்காடி



கணிதவியல் கண்காட்சி




சுற்றுச்சூழல் கல்விக்கழக நிகழ்வு




பணி வாய்ப்புப் பயிற்றகத் தொடக்க விழா




வனவிலங்கு வாரவிழா



டெங்கு விழிப்புணர்வு



**Vision:**

To provide a skill based education that empowers women with leadership skills, creative and critical thinking, research aptitude and ethical values.

**Mission:**

- To establish a state-of-the art infrastructure and cutting-edge laboratories
- To encourage self-paced learning through virtual platform.
- To initiate creative start-ups.
- To forge a strong partnership between the institution and the industry.
- To promote innovative research.
- To actively engage in Community Development Programmes.

crea
Mob : 94434 76740